www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூலை 2010
ரூ. 10.00



## போபால்:

# நீதியின் பிணம்

படிப்பகம்

www.padippakam.com



# போபால்: துரோகத்தின் இரத்தச் சுவடுகள்



**டிசம்பர் 2, 1984, நள்ளிரவு:** யூனியன் கார்பைடு தொழிற்சாலையிலிருந்து நச்சுவாயு பரவத் தொடங்கியது. உடனடியாக 3,828 பேர் கொல்லப்பட்டனர். பலருக்கு கண் பார்வை பறிபோனது. காற்றின் எதிர்த் திசையில் ஓடிய மக்கள் ஈக்களைப் போலச் சுருண்டு விழுந்து செத்தனர். முதல்வர் அர்ஜுன் சிங் நகரை விட்டுத் தப்பிச் சென்றார்.

**டிசம்பர் 3, 1984:** நகரெங்கும் பிணக் குவியல். எல்லாம் முடிந்த பிறகு, முதல்வரும் அதிகாரிகளும் திரும்பிவந்தனர். கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்ற வழக்கில் 10-வது குற்றவாளியாக யூனியன் கார்பைடு சேர்க்கப்பட்டது. அடுத்த சில நாட்களில் 20,000 பேர் வரை கொல்லப்பட்டிருந்தனர். 5,00,000-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

**டிசம்பர் 7, 1984:** தொழிற்சாலையைப் பார்வையிட வந்த யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவரான வாரன் ஆண்டர்சன் கைது செய்யப்பட்டு, விருந்தினர் மாளிகையில் வைத்து உபசரிக்கப்படுகிறார். இந்திய அரசு வாக்களித்திருந்தபடி, ஆண்டர்சன் பிணையில் விடுவிக்கப்பட்டு, பாதுகாப்பாக ம.பி. முதலமைச்சர் அர்ஜுன்சிங்கின் சிறப்பு விமானத்தில் வழியனுப்பி வைக்கப்படுகிறார்.

**மார்ச் 29, 1985:** பாதிக்கப்பட்டோர் சார்பில் அரசே நிவாரணம் கோர வகை செய்யும் ''போபால் விஷ வாயுக் கசிவு பேரழிவுச் சட்டம் -1985'' நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம். பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை அணுகும் உரிமை பறிபோதல்.



வாரன் ஆண்டர்சன்

**ஏப்ரல் 8, 1985:** நிவாரணத் தொகை கேட்டு அமெரிக்காவில் கார்பைடு நிறுவனத்தின் மீது நடந்து வந்த வழக்கு விசாரணையில் இந்திய அரசும் இணைந்து கொண்டது.

**மே 12, 1986:** அமெரிக்க மாவட்ட நீதிமன்றம் அனைத்து போபால் வழக்குகளையும் இந்தியாவிற்கு மாற்றுகிறது. இதன் மூலம் அற்பமான நிவாரணத் தொகை தருவதை கார்பைடு உறுதி செய்கிறது.

**டிசம்பர் 1, 1987:** போபால் பெருநகர குற்றவியல் நீதிமன்றத்தில் 12 குற்றவாளிகளின் மீதும் கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் பிரிவின் கீழ் சி.பி.ஐ. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்கிறது.

**பிப்ரவரி 14-15, 1989:** யூனியன் கார்பைடும், ராஜீவ் அரசும் உச்சநீதி மன்றத்தின் ஒப்புதலோடு செய்த துரோக ஒப்பந்தம்; 47 கோடி டாலர் நிவாரணத் தொகைக்கு அரசு ஒப்புதல்.

**மே 4, 1989:** பாதிக்கப்பட்டோர் நடத்திய போராட்டங்களையடுத்து, நிவாரணத் தொகை ஒப்பந்தம் குறித்த மேல் முறையீட்டு மனுவை விசாரிக்க உச்சநீதி மன்றம் ஒப்புக் கொள்கிறது.

**பிப்ரவரி 1, 1992:** ஆண்டர்சன் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்படுதல்.

**ஆகஸ்டு 19 , 1992:** நிவாரணத் தொகையிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் 200 ரூபாய் இடைக்கால நிவாரணமாகக் கொடுக்கப்பட்டது.

**பிப்ரவரி 14, 1994:** போபால் வழக்குகள் நீதிமன்றத்தில் இருந்த போதிலும், யூனியன் கார்பைடின் பங்குகளை விற்க அனுமதி.

தொடர்ச்சி 51-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 9
ஜூலை 2010

சிறப்பிதழ்
ரூ.10.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561

## போபால்:

# நீதியின் பிணம்

இந்தியா ஒரு பெரிய நாடு. உலகம் இதைவிடப் பன்மடங்கு பெரியது. போபால் நச்சுப் படுகொலைகள் ஏற்படுத்திய கோரம், 26 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஊடகத் தலைப்புச் செய்திகளாக வந்து, ஒரு சில நாட்களே நீடித்திருந்தன. அதற்குள்ளாகவே காஷ்மீரில் அரசப் படைகளின் படுகொலைகள் ஒரிசாவில் பழங்குடி மக்கள் மீது போலீசின் தாக்குதல், வடகிழக்கு இந்தியாவில் நாகா மாணவர்கள் நடத்தும் நீண்ட முற்றுகைப் போராட்டம், மத்திய இந்தியாவில் நடக்கும் காட்டுவேட்டை மற்றும் போலி மோதல் கொலைகள் என்று பலவும் முன்னணிக்கு வந்து விடுகின்றன. இல்லையானாலும் , உலகக் கால்பந்துப் போட்டியில் ஜெர்மனியிடம் அர்ஜென்டினாவின் அதிர்ச்சித் தோல்வி, தோனியின் திடீர் திருமணம், ராவணன் திரைப்படம் வெளியீடு என்று முதலாளித்துவ செய்தி ஊடகம் முன்தள்ளும் செய்திகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஆனால், இந்தியா மறுகாலனியாக்கப்படுவதன் தொடக்கத்தை ஒரு பேரிடர்-பேரழிவின் மூலம் கூட்டுப்பங்கு நிறுவன (கார்போரேட்) பயங்கரவாதத்தாக்குதலோடு அறிவித்தன; போபால் நச்சுவாயுப் படுகொலைகள். நமது மக்கள் மனதிலிருந்து அகலக்கூடாத இக்கோர நிகழ்வை ஆவணப்படுத்தும் முகமாக, சிறப்பிதழாக வெளியிடுவது என்று முடிவு செய்தோம். வழக்கமான பக்கங்களுக்குள் அடக்க முடியவில்லை. மேலும் 500 பக்கங்கள் ஆனாலும் அடக்கிவிட முடியாது. சொல்லவேண்டிய சோகக்கதைகள், அச்சிட வேண்டிய நெஞ்சைப் பிளக்கும் புகைப்படங்கள், ஆத்திரமூட்டும் துரோக ஒப்பந்தங்கள், தரவுகள் ஏராளமாகக் குவிந்துள்ளன. அவற்றை முடிந்த அளவு தொகுத்து, சுருக்கி இந்த இதழில் வழங்கியுள்ளோம்.

போபால் நச்சுவாயுப் படுகொலை சம்பவத்தில் நீதி செத்துக் கிடப்பதைச் சித்தரிக்கும் நீதியின் பிணம்; போபால்: துரோகத்தின் இரத்தச்சுவடுகள்; மரணம் துரத்திய அந்த நள்ளிரவில் நம் நினைவிலிருந்து அழிக்க முடியாத பயங்கரம்; அன்று நடந்தது எதிர்பாராத விபத்து அல்ல, திட்டமிட்ட படுகொலை; உயிர்பிழைத்தவர்களும் நிரந்தர நோயாளிகளாகிவிட்டார்கள்; தப்பிப் பிழைத்தவர்கள் தொடரும் போராட்டம் தங்களுக்காக நடத்தப்படவில்லை; இந்திரா, ராஜீவ், சோனியா என்று தொடரும் பரம்பரை துரோகிகளும் உடந்தையாக நிற்கும் உச்சநீதிமன்றமும்... இதோடு போபால் பயங்கரம் நின்றுவிடவில்லை.

போபால் மண்ணில் கிடக்கும் நச்சுக்கழிவுகள் போதாதென்று மேலை நாடுகளிலிருந்து இரும்புப் பெட்டகங்களில் நச்சுக்கழிவுகள் நாள்தோறும் கொண்டுவந்து கொட்டப்படுகின்றன. கொலைகார யூனியன் கார்பைடின் இடத்தில் உலகிலேயே பெரிய இரசாயன-உயிரியல் ஆயுத உற்பத்தி செய்யும் டௌ கெமிக்கல்ஸ் வந்திறங்கியுள்ளது. இவையும் போதாதென்று அமெரிக்காவிலிருந்து காலாவதியான அணு உலைகளும், இறக்குமதி செய்யப்படுகின்றன.

தனது ஆட்சிக்காலத்திலேயே நாட்டை மறுகாலனியாக்கும் துரோகச் செயலை நிறைவேற்றிவிடவேண்டுமென்று ஆவேசத்துடன் மன்மோகன்-சோனியாக கும்பலும் சிதம்பரம்-மான்டேக்சிங் முதலிய எடுபிடிகளும் செயல்படுகிறார்கள். இது வெறும் எச்சரிக்கை அல்ல. நாட்டையும் மக்களையும் இச்சுயநலவெறிபிடித்த கும்பலிடமிருந்து காப்பதற்குத் உடனடியாகத் திரளவேண்டுமென விடுக்கப்படும் அறை கூவல்!



படிப்பகம்

# மரணம் துரத்திய அந்த நள்ளிரவில்...



**1984 போபால் படுகொலை என்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாத கொடூரம். மூச்சுக்காற்று முழுவதும் நச்சுக்காற்றாகவும், முழுநகரமும் சவக்கிடங்காகவும் மாறிய அந்த நள்ளிரவு...**

**நம் நினைவிலிருந்து அழிக்க முடியாத பயங்கரம்.**

1984-ஆம் ஆண்டு, டிசம்பர் 2-ஆம் நாள். நேரம் நள்ளிரவைத் தாண்டி விட்டிருந்தது. வரவிருக்கும் ஆபத்தை உணராத மக்கள், டிசம்பர் மாதத்துக் குளிருக்கு அஞ்சி வீட்டிற்குள் அடைபட்டு உறங்கிக் கொண்டிருந்தனர். வீடற்றவர்களோ சாலையோரம் ஒடுங்கிக் கிடந்தனர். போபாலின் புறநகர்ப் பகுதியில் அமைந்திருந்த யூனியன் கார்பைடு தொழிற்சாலையில், திடீரென அபாயச் சங்கு ஒலித்தது. தொழிலாளர்கள் பரபரப்பானார்கள். நிமிடத்திற்கு நிமிடம் பரபரப்பு அதிகரித்தது. ஒரு கட்டத்தில் தொழிற்சாலையின் உயரமான புகை போக்கியிலிருந்து கொடிய நச்சு வாயு கசிய ஆரம்பித்தது.

யூனியன் கார்பைடு தொழிற்சாலையில் பூச்சி மருந்து தயாரிக்க சேமித்து வைக்கப்பட்ட மெத்தில் ஐசோ சயனேட் (எம்.ஐ.சி) திரவம் தொட்டியைவிட்டு வெளியேறிக் காற்றில் கலக்க ஆரம்பித்து விட்டது. நிறமும், மணமும் இல்லாத இந்தக் கொடிய நஞ்சு கலந்த காற்றை சுவாசிக்கும் சிறிது நேரத்திற்குள் மரணம் நிச்சயம். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொண்ட தொழிலாளர்கள், தமது மேலதிகாரிக்குத் தகவல் தெரிவித்தார்கள். அபாயச் சங்கை முதலில் ஒலிக்க விட்ட போது, நேரம் சரியாக நள்ளிரவு *12:30.*

யூனியன் கார்பைடு ஆலையிலிருந்து சில -றடிகள் தள்ளி வசித்துவந்த எம்.ஏ.கான் எனும் விவசாயி, பக்கத்தில் இருக்கும் பால் பண்ணையில் ஏதோ சத்தம் வருவதை அவதானித்தார். சிறிது நேரத்தில், தனது மாடுகள் கால்களைத் தரையில் ஓங்கி ஓங்கி உதைப்பதை உணர்ந்தார். வெளியே ஓடிவந்து தொழுவத்தில் கட்டியிருந்த தனது பசுமாடுகளைப் பார்த்தார். இரண்டு பசுக்கள் தரையில் செத்துக் கிடந்தன. மூன்றாவது மாடு ஓங்கிக் கத்திக் கொண்டு சாவதை நேரில் பார்க்கிறார். இனம் புரியாம ஒருவித மயக்கம் அவரைச் சுழற்றியது. அவரின் கண்களும் எரியத் தொடங்கின. ஓட



படிப்பகம்

www.padippakam.com

**எந்தளவுக்கு வேகமாய் ஓடினார்களோ, அந்தளவுக்கு பிராணவாயுவைக் கோரியது நுரையீரல். எந்தளவுக்கு ஆழ்ந்து சுவாசித்தார்களோ, அந்தளவுக்கு அதிகமான எம்.ஐ.சி. வாயு உள்ளே நுழைந்தது. அதிகத் துடிப்புடன் ஓடியவர்களே முதலில் பலியாயினர்.**

ஆரம்பித்தார். அவரது கண்கள் இருளத் துவங்கின. மறுநாள், கண்கள் மூடிய நிலையில் போபாலில் ஹாமிதியா மருத்துவமனையில் கிடந்தார். அந்தப் பயங்கர இரவில்தான் போபால் படுகொலை தொடங்கியது.

யூனியன் கார்பைடு ஆலையிலிருந்து பரவிய எம்.ஐ.சி. வாயு, வீசிக் கொண்டிருந்த காற்றினால் வழிநடத்தப்பட்டு மக்கள் நெருக்கமாய் வசிக்கும் குடியிருப்புப் பகுதியுனுள் ஊடுருவியது. அது சென்ற திசையெங்கும் சிறியவர், பெரியவர், ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி, நாய், ஆடு, மாடு, மனிதன் என்ற பாகுபாடின்றி எதிர்ப்பட்ட அனைவரையும், அனைத்தையும் சித்திரவதை செய்து கொன்றொழித்தது.

அந்தத் தொழிற்சாலையை ஒட்டி வசித்த மக்களுக்கு இவ்வாயு கசிய நேரிடுகையில் என்னென்ன செய்ய வேண்டும் என்கிற பயிற்சி ஏதும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. குறைந்த பட்சம் இவ்வாறு நச்சு இரசாயன வாயு பரவும் போது ஈரத் துணியை முகத்தில் சுற்றிக் கொண்டு தரையில் தவழ்ந்து மெதுவாய் புகை பரவும் திசைக்கு எதிர் திசையில் நகர்ந்து சென்று விட்டாலே, மரணத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளலாம் என்கிற எளிய பயிற்சியைக் கூட அரசோ அல்லது யூனியன் கார்பைடு நிர்வாகமோ அளித்திருக்கவில்லை. தொழிற்சாலையிலிருந்து அபாயச் சங்கு ஒலிப்பதைக் கேட்ட



மக்கள், தொழிற்சாலைக்குள் ஏதோ விபத்து என எண்ணி உள்ளே இருந்தவர்களைக் காப்பாற்ற தொழிற்சாலையை நோக்கி ஓடி வந்தனர். அவர்களில் -றுக்கணக்கானோர் அங்கேயே சுருண்டு விழுந்து இறந்தனர்.

நச்சு வாயுவின் தாக்குதலால், தூக்கத்திலிருந்து உலுக்கியெழுப்பப்பட்ட மக்கள் முதலில் மிளகாய்ப் பொடியையை முகர்ந்தது போன்றதொரு உணர்வை அடைந்தனர். கண்ணில் நெருப்பைக் கொட்டியதைப் போன்று எரிந்தது; விழிகள் வெளியே வந்துவிடுவது போலப் பிதுங்கியது. தொடர்ந்து அவர்கள் நுரையீரலெங்கும் மிளகாய்ப் பொடியைக் கொட்டி நிறைத்ததைப் போன்ற நெஞ்செரிச்சல் ஏற்பட்டது. இரத்தமும் கோழையுமாக வாந்தியெடுத்தார்கள்.

அந்தப் படுகொலை நாளில் எப்படியோ உயிர் பிழைத்து, கண்கள் குருடாகிவிட்ட அசீசா சுல்தான், ‘‘நள்ளிரவு 12.30 மணி இருக்கும். என் குழந்தை கடுமையாக இருமத் தொடங்கியதை அடுத்து எழுந்து பார்த்தேன். எங்கள் அறை முழுக்க வெள்ளைப் புகை பரவி இருந்தது. வெளியே பல பேர் கத்திக் கொண்டிருப்பதைக் கேட்டேன்.‘ஓடுங்க, ஓடுங்க’ என்றார்கள். எனக்கும் மூச்சு விடும்போதெல்லாம் தீயை சுவாசிப்பது போல இருந்தது. நெஞ்சுக்குலை வெளியே வந்துவிடுவதுபோல இடைவிடாமல் இருமல் என்னைத் தாக்கியது. தீயைக் கொட்டியது போல என் கண்களெல்லாம் எரிந்தது’’ என்று அந்த நாளின் துயரை நினைவு கூர்கிறார். போபால்வாசிகள் பலர் பார்வையை இழந்தனர். பல்லாயிரக்கணக்கானோர் பிணமானார்கள்.

வெளியே ஓடிக்கொண்டிருப்பவர்களில் பலர் எங்கே ஓடுவது என்று தெரியாமல் இலக்கின்றி ஓடினார்கள். எந்தளவுக்கு வேகமாய் ஓடினார்களோ, அந்தளவுக்கு பிராணவாயுவைக் கோருகிறது நுரையீரல். எந்தளவுக்கு ஆழ்ந்து சுவாசித்தார்களோ, அந்தளவுக்கு அதிகமான எம்.ஐ.சி. வாயு உள்ளே நுழைகிறது. அதிக துடிப்புடன் ஓடியவர்களே முதலில் பலியாயினர். ஓடிக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின் நெரிசலில் கீழேவிழுந்து நசுங்கியும் சிலர் மாண்டனர். உயிருக்குப் பயந்து ஓட்டமெடுக்கும் அம்மக்களில் சிலர் உடுத்தியது உடுத்தியபடி, சிலர் உள்ளாடைகளுடன் ஓடிக்கொண்டிருந்தனர். ஆடு, மாடுகளும் தன்னைக் காத்துக்கொள்ள மனிதர்களுடன் சேர்ந்து இலக்கின்றி ஓடின. மாடுகள் மிதித்துக் கீழே விழுந்து நசுங்கினர் சிலர். ஓடமுடியாமல் மூச்சுத் திணறிக் கீழே விழுந்தவர்களை தூக்கி விட்டு சரிந்து விழுந்தனர் சிலர். அவர்கள் மீண்டும் எழவே இல்லை.

வீடற்றுச் சாலையில் உறங்கிக் கொண்டிருந்தவர்களைத்தான் இந்த விசக் காற்று முதலில் தாக்கியது. பின்னர் வீடுகளுக்குள் உறங்கிக் கொண்டிருந்தவர்



படிப்பகம்

www.padippakam.com

**தனது மரணம் நெருங்கி விட்டதை அறிந்த துருவே-வுக்கு மனைவி, குழந்தைகளின் நினைவும் வந்து போனது. நேரத்தை வீணாக்காது அடுத்தடுத்து வரும் இரயில்களை நிறுத்திவிட வேண்டும் எனும் எண்ணத்தோடு அவர் சிக்னல் அறைக்கு விரைந்தார்.**

களைத் தாக்கியது. குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த தனது குழந்தையை அணைத்தபடி தெருவில் உறங்கிக் கொண்டிருந்த தாய்மார்களும் குழந்தைகளும் துடி துடிக்க கொல்லப்பட்டனர். நச்சுவாயு மக்களைக் கொன்று கொண்டிருந்த அந்த இரவில் போலீசோ ஒலி பெருக்கி மூலம் ''யாரும் பீதி அடைய வேண்டாம். வீட்டுக் கதவுகளை சாத்தியபடி உள்ளேயே இருங்கள்'' என அறிவித்து வீட்டுக்குள்ளேயே செத்து விழச் செய்தது.

நச்சுவாயுவின் தாக்குதலால் உடல் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை மனித மூளை இழந்திருந் தது. தன்னுணர்வின்றி ஆடையிலேயே பலர் மூத்திரம் பெய்தனர். பெண்களின் கருவறைக்குள் இருந்த இரண்டு-மூன்று மாத சிசுக்கள் அழிந்து இரத்தமும் சதை யுமாக கருச்சிதைவடைந்து தாய்மார்கள் மூர்ச்சை யடைந்து விழுந்தனர். அந்த நாளில் வயிற்றில் சிசுக் களைச் சுமந்திருந்த தாய்மார்களில் 50 சதவீதத்தினருக்கு உடனடி கருச்சிதைவு ஏற்பட்டது.

முதலில் நரம்பு மண்டலத்தைத் தாக்கும் இந்த நச்சு வாயு, பின்னர் கண் பார்வை நரம்புகளையும், சதைகளை யும் செயலிழக்கச் செய்து விடும். உடனே செத்தவர்கள் பாக்கியவான்கள் என்பதைப் போல, கொஞ்சம் உயிர் உடம்பில் ஒட்டிக்கொண்டிருந்தவர்கள், கண்கள் குரு டாகி, என்ன நடக்கிறது என்றே புரியாமல், என்ன செய் வது என்றும் தெரியாமல் பித்துப் பிடித்தது போல ஓடி துடிதுடிக்க உயிரை விட்டனர். ஓடமுடியாமல் விழுந்து விட்டவர்கள் பிணக் குவியலுக்கு நடுவே அசைவற்றுக் கிடந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் தெருவெங்கும் பிணங்கள் குவிந்து கிடந்தன.



போபால் ரயில் நிலையத்தில், நிலைய அதிகாரியான துருவே, சிக்னல்மேனை நள்ளிரவில் வரவிருக்கும் லக்னௌ-மும்பை இரயிலுக்கான தந்தி எந்திர சமிக்ஞையை சரிபார்த்து அனுப்பச் சொல்லிவிட்டு, வெறிச்சோடிக் கிடந்த நடைமேடைக்கு வந்தார். காற்றில் அன்றைக்கு ஏதோ ஒரு மாற்றம் இருந்ததை அவ ரால் உணர முடிந்தது. தூரத்தில் வெள்ளையாய் மேகம் போல் ஏதோவொன்று கவிந்து வந்ததை பார்த்தார். அரு கில் சுருண்டு படுத்திருந்த தெரு நாய் ஊளையிட்டது. அந்த நாயின் கண்களில் மரண பீதியைக் கண்டார். மிளகாய்ப் பொடி நெடியோடு காற்று அடர்ந்து கொண்டிருந்தது. அவரால் சுவாசிக்க முடியவில்லை. நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது. துருவே பார்த்துக் கொண்டிருக்கும் போதே நாய் சுருண்டு விழுந்து செத்துப் போனது.

துருவேயின் கண்கள் வெளியே பிதுங்கிக் கொண்டு வந்தது. எதிர் நடைமேடையில், இரவில் வழக்கமாக ஒண்டிக் கொள்ள வரும் பிச்சைக்காரர்கள் சிலரும் இதே போன்ற நிலையில் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

துருவேயின் உடலெங்கும் வலித்தது. இன்னும் சிறிது நேரத்துக்குள் வந்து சேர்ந்து விடும் லக்னௌ - மும்பை விரைவு இரயிலில் வரும் மக்களைக் காப்பாற்ற வேண்டும் எனும் உணர்வில் சிக்னல் அறைக்கு ஓடினார். ஆனால் அந்த இரயில், வெகு நேரத்துக்கு முன்பே முந்தைய இரயில் நிலையத்திலிருந்து கிளம்பி விட்டதாகவும், இன்னும் சில நிமிடங்களில் போபாலுக்கு வந்து சேரும் என்பதாகவும் முந்தைய ரயில் நிலையத்திலிருந்து பதில் வந்தது. அடுத்த சில நிமிடத்திற்குள் இரயிலின் தடதடப்பு காதில் விழவே, நடுங்கும் கால்களோடு தள்ளாடி நடை மேடைக்கு விரைந்தார், துருவே. லக்னௌ - மும்பை விரைவு வண்டி போபால் ரயில் நிலை யத்திற்குள் நுழைந்தது. என்ன நடக்கிறது என் பதை அறிந்துகொள்ளவதற்குள்ளாகவே, அவசர மாக இறங்கிய பயணிகளில் சிலர் சுருண்டு விழுந்தனர். அதைக் கண்ட மற்றவர்கள் விபரீ தத்தை உணர்ந்து, உடனே அந்த இடத்தை விட்டு ஓடத் துவங்கினர். சிலர் குழந்தைகளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு வேகமாய் ஓடித் தப்ப முயன்றனர். கீழே சரிந்த தமது உறவி னர்கள் மீது தண்ணீரைத் தெளித்து எழுப்பிக் கொண்டிருந்தனர்,சிலர். திரும்பிய திசையெல் லாம் உடல்கள் கிடக்க, உறவினர்களின் ஒப்பாரிச் சத்தம் ரயில் நிலையம் முழுக்க எதிரொலித்தது.



படிப்பகம்

www.padippakam.com



அடுத்த ரயிலுக்காகக் காத்திருந்தவர்களும் இரவில் படுத்துறங்க அங்கு வந்திருந்த பிச்சைக்காரர்களும் சேர்த்து 191 பேர் அநாதைப் பிணங்களாக போபால் இரயில் நிலையத்தில் சிதறிக் கிடந்தனர். நெருங்கி விட்ட தனது மரணத்தை அறிந்த துருவே-வுக்கு மனைவியின் குழந்தைகளின் நினைவும் வந்து போனது. நேரத்தை வீணாக்காது அடுத்தடுத்து வரும் இரயில்களை எப்பாடுபட்டாவது நிறுத்தி விட வேண்டும் எனும் எண்ணத்தோடு அவர் சிக்னல் அறைக்கு விரைந்தார்.

அங்கே சிக்னல் மேன் வாயோரம் இரத்தமும் கோழையுமாக சரிந்திருந்தார். கண்கள், அவர் இறந்துவிட்டதை உறுதிப்படுத்தியது. கடும் வலியோடும், இருமலோடும் சிக்னல் மேனின் உடலை சுவரோரம் நகர்த்தி வைத்தார், துருவே. நடுங்கும் கரங்களால் தந்தி இயந்திரத்திலிருந்து போபால் இரயில் நிலையத்தோடு இணைந்திருந்த எல்லா இரயில் நிலையங்களுக்கும் செய்தி அனுப்பினார். அந்த இரவு முழுவதும் விழித்திருந்து தொடர்ந்து செய்தியை அனுப்பிக் கொண்டேயிருந்தார்.

அதைத் தொடர்ந்து, அப்பகுதியிலிருந்த எல்லா இரயில் நிலையங்களும் தங்கள் பாதை வழியே எந்த இரயிலும் போபாலுக்குச் செல்லாதவாறு தடுத்து நிறுத்தின. செய்தி கிடைக்காமல் கடந்து வந்துவிட்ட இரயில்களின் சன்னல்களை இழுத்து மூடியபடியே போபாலில் நிறுத்தாமல், வேகமாய்க் கடந்து போகுமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்தார், துருவே. கடைநிலை ஊழியர்களைத் திரட்டி பின்னே வேகமாய் வரும் எந்த இரயிலும் ஏற்கெனவே நிற்கும் இரயிலோடு மோதிவிடாமல் தடுக்க, அதன் தண்டவாளத்தைத் திசை மாற்றும்படி கேட்டுக் கொண்டார்.

மறுநாள் காலை இரயில் நிலையத்துக்குள் வந்த போலீசு மீட்புப் படை, சிக்னல் அறையில் சுவரோரமாய் சிக்னல் மேனின் பிணத்தையும், மோர்ஸ் கோட் இயந்திரத்தை ஒரு கையால் விடாமல் இறுகப் பற்றிக் கொண்டு மேசை மேல் கவிழ்ந்தபடியே கிடந்த துருவேயின் உயிரற்ற உடலையும் கண்டனர். இரயில் பாதையை கடைசி நேரத்தில் மாற்ற முயன்ற கடைநிலை ஊழியர்களின் உயிரற்ற உடல்கள் தண்டவாளத்தின் ஓரத்தில் அந்த லீவரைப் பிடித்திருந்த வாக்கிலேயே சரிந்திருந்தன.

இவ்வாறு சாதாரண அரசு ஊழியர்கள் தங்கள் உயிரைக் கொடுத்து மக்களைக் காத்தபோது, அதிகாரிகளோ ஊரைவிட்டே ஓடிப் போயிருந்தனர். மக்கள் சொந்த முயற்சியிலேயே இப்பேரிடரை எதிர்கொண்டனர். அன்றைய ம.பி. முதல்வர் அர்ஜுன்சிங் (காங்கிரஸ்) போபால் நகரத்திலிருந்து தப்பித்து 14 கி.மீ. தொலைவில் உள்ள மாளிகையில் பாதுகாப்பாகப் பதுங்கிக் கொண்டார்.

மறுநாள் 1000 பேருந்துகளை அரசு இயக்கியது. அதில் எஞ்சி இருந்த மக்களை நகரிலிருந்து வெளியேற்றியது. கிடைத்த வாகனங்களில் ஏறி மக்கள் நகரைக் காலி செய்து கொண்டிருந்தனர். போபால் ரயில் நிலையத்தைக் கடந்து செல்லும் ரயில்களில் ஏறித் தப்பிச் செல்ல மக்கள் காத்து நின்றனர். ஆனால், நச்சு வாயுவுக்குப் பயந்து ரயிலுக்குள் இருக்கும் பயணிகள் கதவுகளையும் ஜன்னல்களையும் அவர்களுக்குத் திறக்கவே இல்லை. ஓங்கி ஓங்கிக் கதவைத் தட்டும் போபால் மக்களின் கையறு நிலை கல்லையும் கரைய வைப்பதாக இருந்தது. வலுவானவர்கள் ரயில்களின் கூரைகள் மீதேறி அகதிகளாக ஏதாவதொரு ஊருக்குப் போய்ச் சேர்ந்தனர். இன்னும் சில தொட்டிகளிலும் நச்சு வாயு வெடித்துப் பரவி விட்டது என வதந்திகள் உருவாகி, பல நாட்கள் மக்கள் பீதியில் ஓடுவதும் திரும்புவதுமாக இருந்தனர்.

போபாலின் மருத்துவமனைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டோரால் நிரம்பி விடவே, அவற்றின் தாழ்வாரங்களிலும் அவற்றைச் சுற்றியுள்ள வெட்டவெளிகளிலும் மக்கள் அடுத்தடுத்துக் கிடத்தப்பட்டனர். இரசாயனப் பாதிப்புகளுக்கு சிகிச்சையளிக்க பயிற்றுவிக்கப்படாத மருத்துவர்கள் தம்மால் முடிந்த வரையில்

**நஞ்சை முறிக்க என்ன மருந்து கொடுப்பது என்று யாருக்கும் தெரியவில்லை. யூனியன் கார்பைடு நிறுவனமும் சொல்லவே இல்லை. மிகவும் தாமதமாகத்தான் நஞ்சு முறிவுக்கு சோடியம் தயோ சல்பேட் தரப்பட்டு, பிறகு அதுவும் நிறுத்தப்பட்டது.**



படிப்பகம்

www.padippakam.com



போராடிக் கொண்டிருந்தனர். மக்களுக்கு என்ன சிகிச்சை அளிப்பது என்று வழிகாட்டுதல் தரப்பட வில்லை. கண்களுக்கு சொட்டு மருந்தும், இருமல் மருந்தும் கொடுத்து ஆறுதல் கூறினர். நஞ்சை முறிக்க என்ன மருந்து கொடுப்பது என்று யாருக்கும் தெரிந்திருக் கவில்லை. யூனியன் கார்பைடு நிறுவனமும் சொல்லவே இல்லை. மிகவும் தாமதமாகத்தான் நஞ்சு முறிவுக்கு சோடியம் தயோ சல்பேட் தரப்பட்டது. பிறகு, அதனையும் தரக்கூடாது என்று ம.பி. அரசு கட்டளையிட்டது. மருத்துவர்களின் சிகிச்சை பலனளிக் காமல் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை கொத்துக் கொத்தாகச் செத்துக் கொண்டேயிருந்தனர்.

தப்பியவர்கள், பிரிந்து போன தமது சொந்தங்களை உயிரோடு எஞ்சிய மனிதர்களிடையே தேடிக் கொண் டிருந்தனர். பிணங்களையும் புரட்டிப் பார்த்தனர். மருத் துவமனை முழுக்க ஆண்கள், பெண்கள், குழந்தை களின் பிணங்கள்தான் வரிசையாக அடுக்கி வைக்கப்பட் டிருந்தன. பல பிணங்கள் இன்னாருடையதுதான் எனக் கண்டறிய முடியவில்லை.

ஏனென்றால், பல குடும்பங்கள் ஒட்டுமொத்தமாக மாண்டுபோயிருந்தன. பிணங்களின் மதங்களைக் கண் டறிய முடியாததால் புதைப்பதா, எரிப்பதா என்று தெரியவில்லை. பிணங்களுக்கு வெறுமனே எண்கள் மட்டும் கொடுக்கப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டன. பல ஏக்கர் பரப்பளவுள்ள பொட்டலில் ஒட்டுமொத்த மாக எரியூட்டப்பட்டன. அல்லது பெரிய குழிகளாய்த் தோண்டி மொத்தமாய்ப் புதைத்தனர். அதற்கும் வாய்ப் பில்லாதவர்கள் தமது உறவினர்களின் சடலங்களை கனக்கும் இதயத்தோடு நர்மதை நதி வெள்ளத்தில் விட்டனர்.

மெத்தில் ஐசோ சயனேட் படிந்ததால் போபால் நகரில் மரங்களின் இலைகள் எல்லாம் பச்சை நிறத்தி லிருந்து அடர் மஞ்சள் நிறத்துக்கும் கருநிறத்துக்கும் மாறி யிருந்தன. பறவைகளெல்லாம் செத்து விழுந்திருந்தன. மக்களோடு கால்நடைகளும் தெருநாய்களும் மாண்டு போய் கவனிப்பாரின்றி சில நாட்களில் சிதைந்து அழுகத் தொடங்கின. தொற்று நோய் பரவிடும் நிலை வந்ததும் கிரேன்கள், புல்டோசர்கள் மூலம் அவற்றை அப்புறப்படுத்தி பிரம்மாண்டமான குழியொன்றில் ஒட்டுமொத்தமாகப் போட்டு அவற்றின் மீது டன் கணக் கிலான பிளீச்சிங் பவுடர் கொட்டி மூடினார்கள்.

இதற்கிடையில் தெருவெங்கும் வெட்டவெளியில் சிதறிக் கிடந்த மனிதர்களின் பிணங்களும் அழுகி நாறத் தொடங்கின. காலரா பரவும் அபாயம் வெகு அருகில் இருந்தது. அழுகிய பிணங்களைக் குதறிக் கொண் டிருந்த எலிகளால் ப்ளேக் நோய் பரவும் அபாயத்தில் போபால் இருந்தது. பல நாட்களாக வல்லூறுகளும் கழுகுகளும் நகரில் பிணங்களைக் குறிவைத்து வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

ஒரே இரவில் பத்தாயிரத்துக்கும் மேல் மரணங்கள். தொடர்ந்த மாதங்களில் முப்பதாயிரத்துக்கும் மேல் மரணங்கள். ஐந்து லட்சம் பேர்கள் வரை பாதிப்புக் குள்ளானதில், ஒன்றரை லட்சம் பேர்கள் பதினைந்து வயதுக்குட்பட்டோர். வெறும் எண்களாகக் கடந்து செல்லப் பார்க்கும் இந்த வாக்கியத்தின் ஒவ்வொரு வார்த்தைகளுக்கிடையிலும், எழுத்துகளுக்கிடையிலும் வழிந்தோடும் வேதனையை, துரோகத்தை உங்களால் உணர முடிகிறதா? எத்தனை கனவுகள் கருகியிருக் குமோ? குழந்தைகள், செத்துப்போன தங்கள் பெற் றோரைத் தேடித் தேடி அலைந்து திரிந்த சோகத்தை உங்களால் உணர முடிகிறதா?

தப்பிப் பிழைத்த அந்நகரப் பெண்களின் கரு வறையைக் கூட விட்டு வைக்காமல் நஞ்சூட்டியிருக் கும் அந்த கருணையற்ற முதலாளிகளின் இலாபவெறி, இந்த நிமிடம் வரை கேட்பாரில்லாமல் ஆணவமாய் எக் காளமிடுகிறது. இலாபத்தின் கொடூரத்தை விஞ்சுகின்ற துரோகத்தின் கொடூரம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

● கதிர்



படிப்பகம்

www.padippakam.com

# விபத்தா, படுகொலையா?



**"போபாலில் நடந்தது திட்டமிட்ட படுகொலை அல்ல, எதிர்பாராமல் நடந்த விபத்து" என்றுதான் யூனியன் கார்பைடும் அரசும் நீதிமன்றமும் சாதிக்கின்றன. இல்லை, இது கொள்ளை இலாபத்திற்காக அமெரிக்க முதலாளி வர்க்கம் நடத்தியிருக்கும் படுகொலை.**

டிசம்பர் 2,1984. குளிர்ந்த இரவில் போபால் நகரம் உறங்கிக் கொண்டிருந்தது. அந் நகரிலுள்ள பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக் கும் யூனியன் கார்பைடு ஆலையில் இரவு ''ஷிப்டில்'' தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தனர்.

ஆலையின் மெத்தில் ஐசோ சயனேட் பிரி வில் ''டி610'' என்ற கலனில் அழுத்தம் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டே போனது. இந்தக் கலனில்தான் கொலைகாரத் திரவமான மெத்தில் ஐசோ சயனேட் சேமித்து வைக்கப் பட்டிருந்தது. அத்திரவத்தின் அழுத்தம் அபாய எல்லையைத் தாண்டியது.

அந்தக் கலனில் ஏறத்தாழ 45 டன் அளவுக்கு மெத்தில் ஐசோ சயனேட் திரவம் இருந்தது. 0 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் இருக்க வேண்டிய அத்திரவம் 250 டிகிரி செல்சியஸ் வெப்பத்தால் வெடித்து வெளியே வரத் துடித்துக் கொண்டிருந்தது. அந்தக் கலன் இருந்த பகுதியின் கான்கிரீட் தூண்கள் உடைந் தன. பாதுகாப்பு வால்வுகளும் உடைந்து, அந்த நச்சுவாயு இணைப்புக் குழாய் வழியாக வெளி யேறத் தொடங்கியது.

பொதுவில் இரசாயன ஆலைகளில், இது போன்று எதிர்பாராமல் நச்சுவாயு வெளியேறு வதற்கான ஆபத்தை எதிர்பார்த்து பாதுகாப்பு ஏற் பாடுகள் எப்போதும் தயார் நிலையில் வைக் கப்பட்டிருக்கும். ஆனால் யூனியன் கார்பைடு ஆலையில், அந்த இரவில் நான்கு வகையான பாதுகாப்புச் சாதனங்கள் அனைத்தும் வேலை செய்யவில்லை. காற்றைவிட இரண்டரை மடங்கு அதிக எடை கொண்ட இந்த வாயு ஆலையிலிருந்து வெளியேறி, அந்தக் குளிர்ந்த இரவில் போபால் நகரைக் கவ்வி பல்லா யிரக்கணக்கானோரைக் கொன்று கோரத் தாண் டவமாடியது.

''போபாலில் நடந்தது மிகவும் எதிர்பாரா தது. இது போல எதுவும் இந்த ஆலையில்



படிப்பகம்

www.padippakam.com

**பாதுகாப்பு ஏற்பாடுகளை முறையாகச் செய்யாத இந்த அலட்சியம் இலாப நோக்கத்திலிருந்து வருகிறது. இலாப நோக்கம், தீய நோக்கமல்ல என்பதுதான் முதலாளித்துவ அறம்.**

நடந்ததேயில்லை. உலகிலேயே எங்களிடம்தான் மிகச் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன'' என்று யூனியன் கார்பைடு நிறுவனம் உடனே அறிக்கை வெளியிட்டது. சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்த போதிலும், ஏன் இந்த நச்சுவாயு வெளியேறியது, அதற்கு என்ன காரணம், யார் தவறு என்பதைப் பற்றி அந்நிறுவனம் வாய் திறக்க மறுத்தது. ஏதோ சதிச்செயல் - சீர்குலைவினால்தான் இந்த விபத்து நடந்துள்ளதாக நிர்வாகம் இன்றுவரை கூறிவருகிறது.

வாகன விபத்து ஏற்பட்டால், அதற்கு அவ்வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரைத்தான் பொறுப்பாக்க முடியுமே தவிர, அவ்வாகனத்தின் ''ஓனரை''க் குற்றவாளியாக்க முடியாது என்ற அடிப்படையில்தான், போபால் படுகொலையையும் பார்க்க வேண்டும். இதன்படி, அன்று அந்த ஆலையில் பணியாற்றிய தொழிலாளிகளும் மேற்பார்வையிட்டு இயக்கிய தொழில்நுட்பநிபுணர்களும் கண்காணிப்பாளர்களுமே போபால் படுகொலைக்குக் காரணம்; அவர்கள் கவனக் குறைவாகவும் பொறுப்பின்றியும் எந்திரங்களை இயக்கியதாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது; இதற்கு அமெரிக்காவில் இருக்கும் அந்நிறுவனத்தின் தலைவரான வாரன் ஆண்டர்சனையும் அவரது இந்தியத் தொழில் கூட்டாளிகளையும் குற்றம் சாட்ட முடியாது என்பது தான் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அவர்களது இந்திய எடுபிடிகளின் வாதம்.

பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ள போதிலும், இது கொலை அல்ல என்கின்றனர். சட்டப்படி ஆண்டர்சன் குற்றவாளி அல்ல; யாரோ செய்த குற்றத்துக்காக இன்னொருவரைத் தண்டிக்க சட்டத்தில் இடமில்லை என்கின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் இதைச் செய்யவில்லை என்று நியாயவாதம் பேசுகின்றனர். பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்படாமல் ஆலையை இயக்கி அலட்சியமாக நடந்து கொண்டதாலேயே இந்த விபரீதம் ஏற்பட்டு விட்டது என்று ஒப்புக்கொண்டாலும், போபால் படுகொலைக்கு யூனியன் கார்பைடு நிர்வாகம் பொறுப்பல்ல; ஆண்டர்சனும் குற்றவாளி அல்ல என்கின்றனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை முறையாகச் செய்யாத இந்த அலட்சியம் என்பது இலாப நோக்கத்திலிருந்து வருகிறது. எனினும், ஒரு முதலாளி இலாப நோக்கத்துடன் செயல்படுவது எப்படிக் கொலைக் குற்றமாகும்? இலாப நோக்கம் என்பது தீய நோக்கம் அல்ல என்பது தான் முதலாளித்துவ அறம்.

அந்த இலாப நோக்கத்துக்காக எத்தகைய படுபாதகத்தையும் செய்யலாம்; அது தவறில்லை. இதுதான் முதலாளித்துவ நியாயம். குண்டு போட்டு அழித்தால் அது கொலை. இலாப நோக்கத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு ஆலையை இயக்கிப் பேரழிவை விளைவித்தால், அது கொலையல்ல என்பது தான் முதலாளித்துவ நியாயம்.

இப்படித்தான் கடந்த 2004-ஆம் ஆண்டு குடந்தையில், பள்ளி எனும் கொள்ளிவாய்க்குள் 93 குழந்தைகள் சிக்கி எரிந்து கரிக்கட்டையாகிய போதும், கீற்றுக் கொட்டகைதான் தீ விபத்துக்குக் காரணம், விதிமுறைகளைப் பின்பற்றாததுதான் காரணம் என்று அரசும் பத்திரிகைகளும் கண்ணீர் வடித்தன. கல்வி முதலாளிகளின் இலாப வெறி எனும் தீயினால்தான் குடந்தையில் பள்ளிக் குழந்தைகள் கருகிப் போயினர் என்ற உண்மையை மூடி மறைத்தன.



நெருக்கமான குடியிருப்புப் பகுதியில் கட்டியமைக்கப்பட்ட யூனியன் கார்பைடு நச்சு ஆலை: போபால் மக்களை மரணவாயிலில் தள்ளிய இலாபவெறி. (கோப்புப் படம்)



படிப்பகம்

www.padippakam.com

கும்பகோணத்தில் பள்ளிக்கூடம் நடத்தியவனும் இலாப நோக்கத்துடன், விதிமுறைகளைப் பின்பற்றாமல் அலட்சியமாகச் செயல்பட்டு பச்சிளம் குழந்தைகளைத் தீக்கிரையாக்கினான். அது எதிர்பாராத தீ விபத்துதான்; திட்டமிட்ட கொலை அல்ல என்று நியாயப்படுத்த முடியுமா?

''நடந்தது நடந்துவிட்டது, நிவாரணம் தருகிறோம், எதற்கு ஆண்டர்சனை இழுக்கிறீர்கள்?'' என்கின்றன அரசும் நீதித்துறையும். கொலை செய்த பிறகு நிவாரணம் தருவது மட்டுமே நியாயமாகுமா? குற்றம் இழைத்தவன் அதற்கான தண்டனையை அனுபவிக்க வேண்டாமா?

கவனக்குறைவால் நேர்ந்தால் அது விபத்து. அல்லது விதிமுறைகளின்படி முறையாக இயக்காமல் போனால் நேர்வது விபத்து. ஆனால் யூனியன் கார்பைடு ஆலையில், தொழிலாளிகளின் கவனக்குறைவாலோ அல்லது விதிமுறைகளைப் புறக்கணித்துத் தவறாக இயக்கியதாலோ இந்த விபரீதம் நேரவில்லை. யூனியன் கார்பைடு ஆலை முதலாளிகள் தமது லாபவெறிக்காகத் திட்டமிட்டே பாதுகாப்பு ஏற்பாடுகளைப் புறக்கணித்ததாலும்,முறையாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்யாததாலும், பழுதடைந்த இயந்திரங்களைக் கொண்டு இயக்கியதாலுமே இப்பேரழிவு நடந்துள்ளது. யூனியன் கார்பைடின் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் எவரும் இது எதிர்பாராமல் நடந்த விபத்து அல்ல; திட்டமிட்ட படுகொலை என்பதையும், அது ஒரு கிரிமினல் கொலைகார நிறுவனம் என்பதையும் அறிய முடியும்.



குடந்தையில் கல்வி முதலாளியின் இலாபவெறித் தீயில் கருகிப் போன குழந்தைகள்: இது, எதிர்பாராத தீ விபத்தா? படுகொலையா? (கோப்புப் படம்)

அமெரிக்காவிலுள்ள யூனியன் கார்பைடு கார்ப்பரேஷன் (யு.சி.சி.) தாய் கம்பெனி என்றும், இந்தியாவிலுள்ள யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் (யு.சி.ஐ.எல்.) அதன் துணை நிறுவனம் என்றும் இந்நிறுவனம் தொடங்கப்படும்போது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இந்திய நிறுவனத்தில், அமெரிக்க நிறுவனம் பெருமளவு பங்குகளை வைத்திருந்தது. இந்த ஆலையானது காலாவதியான தொழில்நுட்பத்துடன், கழித்துக் கட்டப்பட்ட இயந்திரங்களுடன் அமெரிக்க நிறுவனத்தால்தான் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை ஆலையின் ஆவணங்கள் நிரூபித்துக் காட்டுகின்றன.

இலாபவெறியோடு எவ்விதப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்யாமல்தான் இந்த ஆலை கட்டியமைக்கப்பட்டுள்ளது. பெயரளவுக்கு உருவாக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செலவைக் குறைப்பது என்ற பெயரில் அல்லது பழுதடைந்து விட்டதால் சீரமைப்பு நடக்கிறது என்று சொல்லி அவற்றைக் கைகழுவி விட்டு விட்டு ஆலை இயக்கப்பட்டுள்ளது.

போபால் ஆலையில் முக்கியமாக கார்பரில் என்ற பூச்சி மருந்து தயாரிக்கப்பட்டு, ''செவின்'' என்ற பெயரில் விற்கப்பட்டது. கார்பரில் தயாரிக்க, மெத்தில் ஐசோ சயனேட் என்ற நச்சுவாயு இல்லாமல் வேறு முறையில் தயாரிக்க முடியும். ஆனால், அதற்கு செலவு அதிகமாகும் என்பதாலேயே காலாவதியான அபாயகரமான இந்த முறையைப் பின்பற்றியது நிர்வாகம். இந்த ஆலை தயாரிக்கும் ''செவின்'' என்ற பூச்சிக் கொல்லி மருந்து இந்திய விவசாயிகளிடம் ஆதரவைப் பெறவில்லை. மேலும், '80-களில் அடுத்தடுத்து நிலவிய வறட்சியால் செவின் வியாபாரமும் குறைந்துவிட்டது. இதனால் இலாபம் குறைவதைத் தவிர்க்க பாதுகாப்பு

**காலாவதியான தொழில்நுட்பம், கழித்துக் கட்டப்பட்ட எந்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டு அமெரிக்க நிறுவனத்தால்தான் போபால் ஆலை வடிவமைக்கப்பட்டது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.**



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பாடுகளுக்கான செலவுகளும் பராமரிப்புகளும் நிறுத்தப்பட்டன. 1980-களின் முன்னும் பின்னும் 30 சதவீத ஆபரேட்டர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்டனர். ஒவ்வொரு ஷிப்ட்டுக்கும் சூப்பிரவைசர்கள் நியமிக்கப்படாமல், ஜெனரல் ஷிப்ட்டில் மட்டும் சூப்பிரவைசர்களை நியமித்துள்ளனர். இவற்றின் விளைவாக,

● 1981 டிசம்பர் 26-ஆம் தேதியன்று முகம்மது அஷ்ரப் என்ற ஆபரேட்டர் போஸ்ஜீன் வாயு தாக்கி மரணமடைந்தார்.

● 1982 ஜனவரியில் மீண்டும் போஸ்ஜீன் வாயு தாக்கி 28 தொழிலாளிகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பல மாதங்கள் உயிருக்குப் போராடினர். அவர்களுக்குப் பாதுகாப்புக் கவசம் அளிக்கப்படாததாலேயே இந்த விபத்து நேர்ந்தது.

● பிப்ரவரி 1982-இல் மெத்தில் ஐசோ சயனேட் கசிவு ஏற்பட்டு, 18 தொழிலாளிகள் பாதிக்கப்பட்டனர்.

● கட்டுப்பாட்டு கூடத்தில் 1982 ஏப்ரலில் 3 மின் ஊழியர்கள் மின்சாரம் தாக்கி உடலெங்கும் எரிந்து கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். 1982 ஆகஸ்ட் மாதத்தில் ஒரு பொறியாளர் மீது மெத்தில் ஐசோ சயனேட் திரவம் பட்டதால் அவரது உடலின் பெரும்பகுதி கருகிப் போனது.

● 1982 அக்டோபர் 5-ஆம் தேதியன்று பழுதடைந்து உடைந்துவிட்ட வால்விலிருந்து மெத்தில் ஐசோ சயனேட் வெளியேறி 4 தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். அருகிலுள்ள தொழிலாளர் குடியிருப்பிலும் இந்த கொடிய வாயு தாக்கி பலர் கண்ணெரிச்சல், சுவாசக் கோளாறினால் பல மாதங்கள் அவதிப்பட்டனர். 1983-இல் இது போல இரண்டுமுறை நச்சுவாயு வெளியேறியுள்ளது.

● 1982-இல் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி பரிசீலிக்க அமெரிக்காவிலிருந்து நிபுணர்கள் குழு வந்தது. அது 30 இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமாகவும் பழுதடைந்தும் இருப்பதைச் சுட்டிக்காட்டியது. அதன் பின்னரும் ஆலை நிர்வாகம் உரிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. போபால் படுகொலைக்குக் காரணமான கசிவு, இந்த பலவீனமான பகுதிகளிலிருந்தே ஏற்பட்டுள்ளது என்பதும் நிரூபணமாகியுள்ளது.

-இவையனைத்தும் ஒரு பேரழிவு நடப்பதற்கான வாய்ப்புகள் ஏற்கெனவே நிலவி வந்துள்ளதை நிரூபித்துக் காட்டுகின்றன.

போபாலைச் சேர்ந்த உள்ளூர் பத்திரிகையாளரான ராஜ்குமார் கேஸ்வானி என்பவர் ‘‘1982-ஆம் ஆண்டு அக்டோபர் 5-ஆம் நாளில் சிறிதளவு நச்சு வாயு ஆலையிலிருந்து வெளியேறி, மக்கள் பீதியுடன் அலறியடித்துக் கொண்டு ஓடினர். அதன் பிறகும் நிர்வாகம் உரிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. செப்டம்பரில் ‘போபால் நகரைக் காப்பாற்றுங்கள்!’ என்று நான் பத்திரிகையில் கட்டுரை எழுதி நிர்வாகத்துக்கு எச்சரித்தேன். ஆனாலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அக்டோபர் மாதத்தில் ‘போபால் நகரம் ஒரு எரிமலை மீது உள்ளது!’ என்ற தலைப்பில் மீண்டும் கட்டுரை எழுதி எச்சரித்தேன்’’ என்கிறார். அவர் மாநில முதல்வருக்கும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கும் அபாயகரமான இந்த ஆலையை மூடக் கோரிப் பலமுறை கடிதம் எழுதியுள்ளார். ஆனாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கார்பன் டெட்ராகுளோரைடு, ஆல்ஃபா நாப்தால், போஸ்ஜீன், மெத்தில் ஐசோ சயனேட் முதலான நச்சு வாயுக்கள் அடிக்கடி கசிந்துள்ள போதிலும், அவை ஒன்றும் ஆபத்தில்லை என்று தொழிலாளிகளிடம் பொய் சொல்லி, நிர்வாகம் எவ்விதப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் தட்டிக் கழித்தது. மெத்தில் ஐசோ சயனேட் ஏற்படுத்தும் கொடிய விளைவுகள் பற்றியோ, நச்சு முறிவு மருந்து பற்றியோ தொழிலாளிகளுக்கோ போபால் மக்களுக்கோ எதுவும் தெரியாது. ஆலை நிர்வாகம் தொழில் இரகசியம் என்ற பெயரில் திட்டமிட்டே இதை மூடி மறைத்துள்ளது.



நச்சுவாயுவால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடுவோரைக் கிடத்தக்கூட இடமின்றி நிரம்பி வழிந்த மருத்துவமனை. இது சாதாரண விபத்தா, பயங்கரவாதமா? (கோப்புப் படம்)

1981-இல் ஒரு தொழிலாளி நச்சுவாயு தாக்கி மரணமடைந்ததும், ஆலையைச் சுற்றியுள்ள 20,000 தொழிலாளர் குடும்பங்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்படும் என்று அந்த ஆலையில் 1975 முதல் 1982 வரை பணியாற்றிய கும்கும் சாக்சேனா என்ற பெண் மருத்துவர் எச்சரித்துள்ளார். நச்சுவாயுக் கசிவு ஏற்பட்டால், மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு மற்றும் முதலுதவிக்கான மருத்துவ நடவடிக்கைகள் பற்றிய செயல் திட்டம் வேண்டும் என்றும் அடிக்கடி கோரியுள்ளார். ஆனால் நிர்வாகம் தொடர்ந்து அலட்சியப்படுத்தியதால், அவர் அப்பதவியிலிருந்து 1982-இல் விலகிவிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

**ராஜ்குமார் கேஸ்வானி என்ற பத்திரிகையாளர் ம.பி. மாநில முதல்வருக்கும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கும் போபால் ஆலையை மூடக் கோரி பலமுறை கடிதம் எழுதியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

மெத்தில் ஐசோ சயனேட் என்ற நச்சுவாயுத் திரவம் உறைநிலையில் அல்லது குளிர்ச்சியான நிலையில் வைக்கப்பட்டிருந்தால் அது வெளியேறாது. மாறாக, அதிக அழுத்தத்தில் அடைக்கப்பட்டுள்ள அந்த நச்சுவாயுவின் திரவத்தில் தண்ணீர் சேர்ந்தால், அதன் வெப்பநிலை உயர்ந்து, நச்சுவாயு அதிக அழுத்தத்துடன் கலனை உடைத்துக் கொண்டு வெளியேறும். இவ்வாறு திரவநிலையிலுள்ள அந்த நச்சுவாயு அடைக்கப்பட்டுள்ள கலனில் தண்ணீர் கசிந்துவிடாமலிருக்க பெயரளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆலையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், படுகொலை நடந்த நாளில் அந்தப் பாதுகாப்புச் சாதனங்களும் இயங்கவில்லை.

சம்பவம் நடந்த அன்று, ஆலையில் மெத்தில் ஐசோ சயனேட் 3 பெரிய கலன்களில் சேமித்து வைக்கப்படிருந்தது. மெத்தில் ஐசோ சயனேட் திரவத்தை அதிக அளவில் சேமித்து வைப்பதற்குப் பதிலாக, சிறிய கலன்களில் குறைந்த அளவுதான் சேமித்து வைக்க வேண்டும் என்ற அடிப்படையான விதிகள் பின்பற்றப்படவில்லை. கணினிமயமாக்கப்பட்ட நான்கு கட்ட அபாய எச்சரிக்கை முறை உருவாக்கப்படவில்லை. வலுவான எஃகு உலோகத்தால் குழாய்களும் வால்வுகளும் அமைக்கப்படாமல், அவை தரம் குறைந்த எஃகினால் உருவாக்கப்பட்டன.

தண்ணீரும் நச்சு இரசாயனத் திரவமும் கலந்து வினையாற்றுவதைக் குளிரூட்டும் பாதுகாப்புச் சாதனம் தடுக்கும் அல்லது தாமதப்படுத்தும். ஆனால், குளிர் காலம் என்பதால் செலவைக் குறைக்க குளிர்பதனச் சாதனம் நிறுத்தி வைக்கப்பட்டது. ஒருவேளை நச்சுவாயு வெளியேறினால், அது வெளியேறும் குழாயில் காஸ்டிக் சோடா குழம்பு நிரப்பப்பட்டு நச்சுவாயுவைச் செயலிழக்கச் செய்யும் முறை பின்பற்றப்படவேண்டும். ஆலையில் இந்த ''கேஸ் ஸ்கரப்பர்'' என்ற சாதனமும் செயல்படவில்லை. இதையும் மீறி ஒருவேளை நச்சுவாயு வெளியேறிவிட்டால், அது வேறொரு பாதுகாப்புக் கலனுக்குள் சென்று அங்கு அது செயலிழக்கச் செய்யப்படும். இந்த ''நாக் டவுன்'' தொட்டி என்ற ஏற்பாடு அமெரிக்காவில் உள்ளது. ஆனால், இந்தியாவில் அப்படிப்பட்ட பாதுகாப்புத் தொட்டி கட்டியமைக்கப்படவில்லை. அடுத்ததாக, ''ஃப்ளேர் டவர்'' என்ற பாதுகாப்புச் சாதனமும் பழுதடைந்திருந்ததால் வேலை செய்யவில்லை.

மேலும், இத்தகைய ஆலைகளில் ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை கலன்களின் அழுத்தம் பற்றிய அளவீடுகள் சோதித்தறியப்பட வேண்டும். ஆனால் இந்த ஆலையில், ஒரு ஷிப்ட்டுக்கு ஒருமுறைதான் அளவீடுகள் சோதிக்கப்பட்டன. டிசம்பர் 2,1984 அன்று இரவு ஷிப்ட் தொடங்கும்போது, அனைத்தும் இயல்பாக இருப்பதாக இரவு 10.12 மணிக்கு எடுத்த அளவீடு காட்டியுள்ளது. அதன் பிறகு அளவீடு சோதிக்கப்படவில்லை. அடுத்த ஒரு மணி நேரத்தில், ஏறத்தாழ 11.30 மணியளவில்தான் மெத்தில் ஐசோ சயனேட் இருந்த கலனில் நீர்க்கசிவு ஏற்படத் தொடங்கி, அதன் வெப்பநிலை உயர்ந்து வாயுவாக வெளியேறி கோரத் தாண்டவமாடியது.

-இவையனைத்தும் ''நியூ சயின்டிஸ்ட்'' பத்திரிகை மற்றும் பி.பி.சி. வானொலி மேற்கொண்ட விசாரணைகளிலிருந்தும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அளித்த வாக்குமூலங்களிலிருந்தும் ஆதாரங்களுடன் நிறுவப்பட்டுள்ளன. தொழிலாளிகளின் கவனக் குறைவாலோ, தவறாக இயக்கியதாலோ, சதிகள்-சீர்குலைவுகளாலோ இந்தப் பேரழிவு நிகழவில்லை. பிணந்திண்ணி யூனியன் கார்பைடின் இலாபவெறிக்காகவே உழைக்கும் மக்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் நெருக்கமாகக் குடியிருக்கும் பகுதியில், காலாவதியான தொழில்நுட்பத்துடன், எவ்விதப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யாமல், பல்லாயிரக்கணக்கான மக்களை மரணவாயிலில் நிறுத்தி வைத்து தெரிந்தே விபரீதத்தை விளைவித்துள்ளது, யூனியன் கார்பைடு. எனில், தனது இலாப நோக்கத்திற்காக ஆயிரக்கணக்கான அப்பாவி கூலித் தொழிலாளர்களது உயிரைப் பறித்தெடுத்த இந்தச் செயலை, படுகொலை எனக் கூற முடியாதா? இந்த நச்சுவாயு தாக்கினால் என்ன நச்சுமுறிவு மருந்து தரப்பட வேண்டும் என்பதைக்கூட தெரிவிக்காமல், அதையும் தொழில் இரகசியமாக வைத்திருப்பவனை முதலாளி என்பதா, அல்லது கொலைகாரன் என்பதா? ஹிரோஷிமா-நாகசாகியில் வீசப்பட்ட அணுகுண்டுத் தாக்குதலைப் போன்றதொரு பேரழிவை போபாலில் நடத்திவிட்டு, கொலைகாரர்களும் அவர்களின் கைக்கூலிகளும், இப்படுகொலையை இன்னமும் விபத்து என்று கூறித் துரோகமிழைத்து வருவதை இனியும் அனுமதிக்கத்தான் முடியுமா? பெருந்தொழில் கழகங்களின் கிரிமினல் பயங்கரவாதத்தை சாதாரணமான விபத்தாகத்தான் கருத முடியுமா?

படுகொலைகளுக்குரியது மரண தண்டனை. கொலைகாரர்கள் மற்றும் அவர்களது கூட்டாளிகளான இந்தியத் துரோகிகளின் கல்லறைகளில் ''போபால் படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகள் மரண தண்டனைக்குப் பிறகு இங்கே புதைக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்று எழுதப்பட வேண்டும். நாட்டு மக்கள் அந்தக் கல்லறைகளின் மீது எட்டி உதைத்து, காறி உமிழ வேண்டும்.

● தனபால்



படிப்பகம்

www.padippakam.com

# உயிர் பிழைத்த துர்பாக்கியசாலிகள்



**அந்த நள்ளிரவில் கொல்லப்பட்டவர்களுக்கு அது மரண தண்டனை. ஓடி உயிர் தப்பியவர்களுக்கு உயிர் மட்டுமே மிச்சம். உடல் முழுதும் ஊனம். அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களது சந்ததிகளுக்கும் இது ஆயுள் தண்டனை.**

**போ**பாலிலுள்ள சுல்தானியா ஜனதா மருத்துவமனையில் 1985-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பிரசவத்துக்குச் சேர்க்கப்பட்டிருந்த மும்தாஜ் என்ற அந்தக் கர்ப்பிணிப் பெண் வலியால் துடித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவருக்கு குழந்தை பிறந்தது. தாதிகள் அக்குழந்தையைத் தூக்கிக் காட்டி, ஆண் குழந்தை பிறந்துள்ளது என்று மகிழ்ச்சியுடன் கூறினர். அக்குழந்தையின் முதுகில் தட்டிய பிறகும் அது அழவில்லை. கண் விழிக்கவுமில்லை. தலைமை மருத்துவர் ஓடோடி வந்தார். அதற்குள் அந்தக் குழந்தை நீல நிறமாக மாறி மரணமடைந்தது. பிறந்த குழந்தை அடுத்த நொடியிலேயே மரணமடைந்துவிட்ட துயரம் தாளாமல் மும்தாஜும் அவரது கணவரும் கதறினர். கடந்த இருபத்தாறு ஆண்டுகளில் இது போன்ற துயரங்கள் ஏராளமாக நடந்துள்ளன.

போபால்-சாந்தி நகரில் ஒடுக்கமான வீடொன்றில் வாழ்ந்து வருபவர், லீலாபாய். நச்சு வாயுத் தாக்குதலிலிருந்து தப்பிய இவருடைய மகள், ஒரு வயதுக் குழந்தையை விட்டுவிட்டு இனம் கண்டறியப்படாத நோயால் இறந்துவிட்டார். 24 வயதாகும் மகனோ வயதுக்கேற்ற வளர்ச்சி அடையாமல் சிறுவனைப் போலவே இருக்கிறார். ''நாங்கள் உயிர் பிழைத்த துர்பாக்கியசாலிகள். அன்றே என் பிள்ளைகள் இறந்திருக்கலாமே! பல துயரங்களுக்கிடையே இத்தனை வருடம் ஆளாக்கி, பிள்ளையைப் பறிகொடுப்பது எவ்வளவு கொடுமை? என்ன நோயென்று கண்டறியக் கூட முடியாத மருத்துவமனை இருந்து என்ன பயன்? இழுத்து மூடிவிடுங்கள். நாங்கள் வீட்டிலேயே கிடந்து சாகிறோம்'' என்று வேதனையில் குமுறுகிறார் லீலாபாய்.

பதினான்கு வயதாகும் அடில் என்ற அந்தச் சிறுவனால் கைகளையும் முட்டிகளையும் தரையில் தேய்த்தபடியே ஊர்ந்துதான் நகர இயலும். போபால் பயங்கரத்துக்குப் பின் பிறந்த -ற்றுக்கணக்கான குழந்தைகளில் அடிலும் ஒருவன். போபால் பேரழிவு நடந்தபோது அடிலின் அம்மாவுக்கு அப்போது பத்து வயது. அவரது இருபதாவது வயதில், அதாவது 1994-இல் அவருக்குத் திருமணமானது. அவர் கருத்தரித்ததே அதிசயம்தான்.

ஏனெனில், விபத்தில் தப்பிய பல பெண்களின் மாதவிலக்கு சுழற்சியே கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. விபத்து நடந்த சிலநாட்களில் 400 பெண்களுக்குக் கருச்சிதைவேற்பட்டமை கண்டறியப்பட்டது. பிறந்த 2250 குழந்தைகளில் செத்துப் பிறந்தவை: 52; மிகக் குறைந்தநாட்கள் வாழ்ந்து செத்தவை:132; ஊனத்தோடு பிறந்தவை:30. போபால் பேரழிவுக்குப் பின்னர் பிறந்த பல குழந்தைகளுக்கு கண்களுக்குப் பதில் குழிகள் மட்டுமே இருக்கின்றன. கை-கால் இல்லாமலோ, பிளந்த உதடுகளுடனோ, வீங்கிய மண்டை-இரட்டைத் தலைகளுடனோ கோர



படிப்பகம்

www.padippakam.com





மாகப் பிறக்கின்றன. மூன்று கண்கள் கொண்ட குழந்தைகள் பிறக்கின்றன. கைவிரல்கள் தனித்தனியாக இல்லாமல் ஒன்றோடொன்று சதைகளாகப் பிணைந்துள்ளன, அல்லது ஆறு-ஏழு விரல்களுடன் பிறக்கின்றன. ஆண்டுகள் பலவாகியும் மெத்தில் ஐசோ சயனேட் நச்சு வாயுவின் தாக்குதலால் தாயின் கருவிலேயே குழந்தைகளின் மரபணுக்கள் சிதைகின்றன என்று தொடரும் பேரழிவைப் பட்டியலிட்டுள்ளது, ''லான்செட்'' என்ற மருத்துவ அறிவியல் இதழ்.

அன்று தப்பிப் பிழைத்தவர்களோ புற்று நோய், கண் பார்வை இழப்பு, வலிப்பு, நினைவிழத்தல், உணர்வுகள் மரத்துப்போதல் உள்ளிட்ட பல்வேறு கொடுமைகளோடு நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நள்ளிரவில் கொல்லப்பட்டவர்களுக்கு அது மரணதண்டனை. ஓடி உயிர் தப்பியவர்களுக்கு உயிர் மட்டுமே மிச்சம். உடல் முழுதும் ஊனம். அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களது சந்ததிகளுக்கும் இது ஆயுள் தண்டனை.

1985-இல் மத்திய சுகாதாரத் துறை வெளியிட்ட அறிக்கை, 90 சதவீதப் பெண்களுக்கு கருப்பை சம்பந்தமான நோய்களும், 79 சதவீதப் பெண்களுக்கு இடுப்பெலும்பு வீக்க நோயும், 35 சதவீதப் பெண்களுக்கு அதிக ரத்தப் போக்கும் இருப்பதை ஏற்றுக் கொண்டது.

நச்சுவாயுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கவனத்தை ஒருமுகப்படுத்தவோ, எதையும் ஞாபகம் வைத்துக் கொள்ளவோ முடியவில்லை. பாதிக்கப்பட்டவர்களில் பலர் மூட்டை தூக்குவது போன்ற வேலைகளை செய்யும் கூலித் தொழிலாளர்கள். நச்சுவாயுவால் பலவீனமடைந்துவிட்ட அவர்கள், அந்த வேலையையும் செய்ய முடியாமையால் வறுமையில் உழல்கின்றனர். மாதத்தில் பாதிநாட்கள் அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

மெத்தில் ஐசோ சயனேட் நச்சுவாயுவால்தான் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பது நிரூபிக்கப்பட்டால் யூனியன் கார்பைடு மீது பழிவந்துவிடும் என்பதால், இதற்கான நச்சுமுறிப்பு மருந்தான சோடியம் தயோ சல்பேட்டை நோயாளிகளுக்குச் செலுத்தக்கூடாது என ம.பி. மாநில சுகாதாரத் துறை இயக்குநரான டாக்டர் நாகு என்ற துரோகி 1984 டிசம்பரில் உத்தரவிட்டார். அதையும் மீறி ஊசி போட்ட தனியார் மருத்துவமனை

**''என்ன நோயென்று கண்டறியக்கூட முடியாத மருத்துவமனை இருந்து என்ன பயன்? இழுத்து மூடிவிடுங்கள். நாங்கள் வீட்டிலேயே கிடந்து சாகிறோம்.''**

**-லீலாபாய்**



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு அம்மருந்து நிறுத்தப்பட்டது. மருத்துவமனைக்கு பெயிண்ட் அடிக்கவில்லை என்பதைப் போன்ற காரணங்கள் காட்டி, அவை சீல் வைக்கப்பட்டன.



ஆன்டர்சனை அமெரிக்காவுக்குத் தப்பி ஓட உதவிய அரசு, ஆலையை மூடி விசாரணை நாடகமாடி ஆலையையும் அந்த இடத்தையும் தனது பொறுப்பிலெடுத்துக் கொண்டது. ஆனால் அங்குள்ள நச்சுக்கழிவுகளை அகற்றாமல் அப்படியே கிடப்பில் போட்டுக் கைவிட்டது. ஒரு பெரிய கல்லறை போலத் தோற்றமளிக்கும் யூனியன் கார்பைடு நிறுவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் நஞ்சாகியதோடு, இப்பகுதிவாழ் மக்களையும் கால்நடைகளையும் இன்னமும் பலிவாங்கி வருகிறது.

இந்த ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சூரிய ஒளியில் கழிவுகள் ஆவியாக்கப்படுவதற்காகக் கட்டப்பட்ட திறந்தவெளி கழிவுப் பொருள் குட்டைகளில் இன்னமும் நச்சுக் கழிவுகள் தேங்கியுள்ளன. மழைக்காலங்களில் இதில் தேங்கும் நீரைக் குடித்து கணக்கற்ற கால்நடைகள் மாண்டுபோயுள்ளன. ஆலையின் திறந்தவெளி கழிவுக் கிடங்குப் பகுதியில் பாதரசக் குடுவைகள் எந்தவிதப் பாதுகாப்பு ஏற்பாடுமின்றிக் குவிந்து கிடக்கின்றன. மிகவும் அபாயகரமான நச்சு இரசாயனப் பொருளாகிய பாதரசம் காற்றிலும், நிலத்தடி நீரிலும் தொடர்ந்து பரவும் வகையில் இருந்தால் மூளை, சிறுநீரகம் மற்றும் கருப்பையும், கருவும் நிரந்தரமாகப் பாதிக்கப்படும். கைவிடப்பட்ட யூனியன் கார்பைடு ஆலையின் இரசாயனக் கிடங்குப் பகுதியில் 1999 மார்ச், ஏப்ரல் மாதங்களில் அடுத்தடுத்து நடந்த பெரும் தீ விபத்துகள், மீண்டும் 1984-யை நினைவூட்டும் மிளகாய் எரியும் நெடியைப் பரப்பின; மக்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். அங்கு ஏழை மக்கள் தீராத நோய்களுக்கு ஆளாகித் தொடர்ந்து பாதிக்கப்பட்டும் கூட ஆட்சியாளர்கள் நச்சுக் கழிவுகளை அகற்ற எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.




1999-இல் அப்பகுதி மண்ணையும் நீரையும் பரிசோதித்ததில் அவற்றில் கலந்திருந்த பாதரசத்தின் அளவோ, வரையறுக்கப்பட்ட அளவைவிட 60 லட்சம் மடங்கு அதிகமாக இருந்தது. 30 விதமான ரசாயனங்கள் நீரில் கலந்திருந்தன. அவற்றில் பல, குறைபாடான குழந்தைப் பேற்றையும் புற்றுநோயையும் உருவாக்கக் கூடியவை. 2001-இல் நடத்தப்பட்ட ஆய்வில் தாய்ப்பாலில் பாதரசமும், காரீயமும், ஆலைக் கழிவுகளின் நஞ்சும் கலந்திருப்பது கண்டறியப்பட்டது.

10,000-க்கும் மேற்பட்டவர்கள் வாழும் அண்ணு நகர், நவாப் நகர், ஆரிப் நகர் முதலான ஆலையைச் சுற்றியுள்ள குடிசைப் பகுதிகளில் அடிக்குழாய்த்

**பாதிக்கப்பட்டவர்களுள் பலர், மூட்டை தூக்குவது போன்ற வேலைகளைச் செய்யும் கூலித் தொழிலாளர்கள். நச்சுவாயு பாதிப்பு அவர்களை வேலை எதுவும் செய்ய இயலாதவர்களாக்கி வறுமையிலும் வீழ்த்தி விட்டது.**



படிப்பகம்

www.padippakam.com

**போபால் ஆலையை ஒட்டியுள்ள பகுதிகளின் குடிநீரில் புற்றுநோயை உருவாக்கும் இரசாயனங்களும் தாய்ப்பாலில் பாதரசமும் காரீயமும் ஆலைக்கழிவுகளின் நஞ்சும் கலந்திருப்பது கண்டறியப்பட்டது.**

தண்ணீரைக் குடிக்க வேண்டாம் என்று எச்சரிக்கைப் பலகைகளை மட்டும் வைத்துவிட்டு, குடிநீருக்கு மாற்று ஏற்பாடு எதுவும் அரசு செய்து தராததால், இம்மக்கள் நஞ்சாகிப் போன அடிக் குழாய் தண்ணீரையே குடிக்கின்றனர்.

''நச்சுவாயுவாலும் அதன் பின் பாதரசத்தால் மாசான நீரினைப் பருகியதாலும் உடல், மனரீதியாக உருக்குலைந்துள்ள குழந்தைகளில் 27 பேருக்கு சிகிச்சை அளிக்க அரசு 1997 வரை உதவியது. நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி அதனையும் நிறுத்திவிட்டது. சதைக் கோளமாக வெளித்தள்ளும் கண்களுடன் சிதைந்த மூளையுடன் பிறந்த குழந்தைகள், நஞ்சாக்கப்பட்ட குடிநீரின் சாட்சியங்கள். அக்குழந்தைகளுக்கும் இலவச சிகிச்சை மறுக்கப்பட்டுள்ளது'' என அரசின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்துகின்றனர், குழந்தைகளின் பெற்றோர்கள். போபால் பேரழிவின் அடுத்த தலைமுறையினரான குழந்தைகள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனினும், மைய அரசு அக்குழந்தைகளின் மருத்துவத்துக்கும் நல்வாழ்வுக்கும் சல்லிக்காசு கூட ஒதுக்கவில்லை.



பாதுகாக்கப்பட்ட குடிநீர்கூட கொடுக்காமல் புறக்கணிக்கும் அரசின் வக்கிரம்: நச்சுக் கழிவுகளால் நஞ்சாகிவிட்ட நிலத்தடி நீரையே பயன்படுத்த வேண்டிய அவலத்தில் பாதிக்கப்பட்ட மக்கள். (கோப்புப்படம்)

பாதிக்கப்பட்ட மக்கள் உரிய நிவாரணம் கேட்டு 2000-க்கு பின்னர் பல கட்டங்களாக போபாலில் இருந்து தில்லியில் பிரதமர் அலுவலகத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டனர். அவர்கள் பிரதமரை சந்திக்க வாய்ப்பு மறுக்கப்பட்டு அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொள்வதற்கென்று ஜந்தர் மந்தர் பகுதி ஒதுக்கப்பட்டது. இவர்கள் 600 கி.மீ. தூரம் நடையாக நடந்துகொண்டிருக்கையில், மன்மோகன் சிங்கோ 2005-இல் மேற்கொண்ட தனது அமெரிக்கப் பயணத்தில், யூனியன் கார்பைடை கையகப்படுத்தியுள்ள டௌ கெமிக்கல்ஸ் தலைமை அதிகாரியுடன் கைகுலுக்கிக் கொண்டிருந்தார்.

இருபதாண்டுகளுக்கும் மேல் போராடியதால் கிடைத்த சொற்பமான நிவாரணத்தொகையில் கட்டப்பட்ட போபால் நினைவு மருத்துவமனையின் ஆய்வு மையமோ, பாதிக்கப்பட்டவர்களையே சோதனைச் சாலை எலியாக பயன்படுத்தி வருகிறது. 2007-இல் 86 நோயாளிகளை இதயநோய்ப் பிரிவில் ''ப்ரசோக்ரெல்'' எனும் மருந்தைப் பரிசோதிப்பதற்கு சோதனைச்சாலை எலிகளாக்கியுள்ளனர்.

நச்சுவாயுவின் பக்கவிளைவால் 1991-க்கு பின்னர் இறந்தவர்களே 20 ஆயிரத்துக்கும் மேல் இருப்பார்கள் என்கின்றனர், போபாலில் செயல்படும் மருத்துவர்கள். கீழே தள்ளிய குதிரை குழியும் பறித்த கதையாக நியாயமான நிவாரணத்தைக் கூட 26 ஆண்டுகளாகியும் தராத அரசு, நகரை அழகுபடுத்துவதாகச் சொல்லி 90-களின் ஆரம்பத்தில் புல்டோசர்களைக் கொண்டு அந்த ஏழை மக்களின் குடிசைகளைப் பிய்த்து எறிந்தது.

நிலம், நீர், காற்று என அனைத்தையும் நஞ்சாக்கி வரும் ஆலைக் கழிவுகளை அப்புறப்படுத்திடவோ, இதுவரை நஞ்சானவற்றை மீட்டு சரி செய்திடவோ அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை. ஆனால், டௌ கெமிக்கல்ஸ் இந்திய பங்குச் சந்தையில் கொட்டுவதாகச் சொன்ன ஆயிரம் கோடிக்குப் பல்லிளித்து, கழிவுகளை அகற்றக் கோரும் வழக்கிலிருந்து பின்வாங்க மன்மோகன் அரசு முடிவெடுத்தது. போபால் பேரழிவினாலும் தொடரும் துயரத்தாலும் தலைமுறை தலைமுறையாகப் பாதிக்கப்பட்ட மக்களோ, வெஞ்சினத்தை நெஞ்சிலேந்தி தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

• துரை



படிப்பகம்

www.padippakam.com

# அவர்கள் தங்களுக்காகப் போராடவில்லை

பிள்ளைகளைப் பறிகொடுத்து, ஊனமுற்ற பேரப்பிள்ளைகளைச் சுமந்தபடி, சோற்றுக்கும் மருந்துக்கும் காசில்லாமல், 26 ஆண்டுகளாக இந்த இரக்கமற்ற அரசை எதிர்த்து நிற்கும் பெண்கள் – யாருக்காக இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறார்கள்? தங்களுக்காகவா?

இலட்சுமி பாய், தற்போது 75 வயதாகும் மூதாட்டி. நச்சுவாயுத் தாக்குதல் நடந்த அன்று யூனியன் கார்பைடு ஆலைக்கு எதிர்புறம் இருக்கும் ஜே.பி.நகரில் வசித்து வந்த அவர், ஒரு கூலித் தொழிலாளி. நச்சு வாயுவால் இவர் கணவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அன்று உயிர் பிழைத்தார். இருப்பினும், இனம் புரியாத பல வேறு நோய்களால் அவதிப்பட்டு முடமாகிப் போன அவர், பல ஆண்டுகளாக மருத்துவமனைக்கும் வீட்டுக்குமாக அலைந்து, மிகுந்த வேதனையோடு இறந்தார்.

அப்போது பதின்ம வயதில் இருந்த அவருடைய இரண்டு மகன்களையும் மகளையும் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்கு அனுப்பியதால்தான், இலட்சுமி பாய் வீட்டில் அடுப்பு எரிந்தது. இன்னமும் அக்குடும்பத்தினருக்கு அடிக்கடி இனம் புரியாத நோய்கள் தாக்குவதால், வருமானம் அனைத்தும் மருத்துவத்துக்கே செலவாகி வறுமை வாட்டிக் கொண்டிருக்கிறது. இருப்பினும், இன்றுவரை மனம் தளராமல் போபால் படுகொலைக்கு நீதி கேட்டு நடக்கும் போராட்டங்கள் அனைத்திலும் இலட்சுமி பாய் கலந்துகொள்கிறார். பல ஏழைக் குடும்பங்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்துவிட்ட ஆண்டர்சனுக்குத் தண்டனை கொடுக்கக் கோரி, போபால் மக்கள் நடத்திய தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் அவர் கலந்து கொண்டார்.



உற்றார்-உறவினரை இழந்து, நச்சுவாயுத் தாக்குதலால் நடைபிணங்களாகிவிட்ட போதிலும் தொடர்ந்து போராடும் பாதிக்கப்பட்ட மக்கள். (கோப்புப் படம்)

தப்பியவர்களை மட்டுமல்ல; அவர்களின் அடுத்த சந்ததியினரையும் இன்றுவரை வதைத்து வரும் யூனியன் கார்பைடை எதிர்த்தும், அதனைக் கையகப்படுத்தியுள்ள டௌ கெமிக்கல்ஸை எதிர்த்தும், பாதிக்கப்பட்ட போபால் மக்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். நிவாரணம் கொடு, சிகிச்சை அளி என்பதாக முதலில் ஆரம்பித்த போராட்டம், பின்னர் தமது குழந்தைகள் மட்டுமின்றி அனைவரையும் நிரந்தர நோயாளியாக்கிக் கொண்டிருக்கும் யூனியன் கார்பைடு ஆலையின் நச்சுக் கழிவுகளை அகற்றக் கோரும் போராட்டமாகவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கோரும் போராட்டமாகவும் கடந்த 25 ஆண்டுகளில் முன்னேறி வந்துள்ளது. தங்களுக்கு நேரிட்ட பாதிப்பும் துயரமும் அடுத்த தலைமுறையிலும் தொடரக் கூடாது எனும் நோக்கில்தான் இந்தப் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

1984-க்கு பின் பிறந்த 10,000 போபால் குழந்தைகளுக்கு (இவை, ''விஷவாயு குழந்தைகள்'' என்றே மருத்துவ வட்டாரத்தினரால் அழைக்கப்படுகின்றன) மருத்துவக் காப்பீடு வழங்க 1990-இல் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்வழங்க 2004-இல் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும், இவற்றில் எதையும் மத்திய-மாநில அரசுகள் செயல்படுத்தவில்லை. இந்த அநீதியைக் கண்டித்து, பாதிக்கப்பட்ட போபால் மக்களில் 50 பேர் போபாலில் இருந்து 600 கி.மீ. தொலைவில் இருக்கும் தில்லிக்கு, கடந்த 2008-ஆம் ஆண்டு பாத யாத்திரை மேற்கொண்டனர். வழியெங்கும் கோரிக்கை முழக்கப் போராட்டங்களை நடத்திக் கொண்டு தில்லியின் ஜந்தர் மந்தர் பகுதிக்கு வந்து சேர்ந்து, தர்ணா போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்



படிப்பகம்

www.padippakam.com

தில் 11 வயது சிறுவன் முதல் 82 வயது முதியவர் வரை கலந்து கொண்டனர்.



நீதிகேட்டு பாதயாத்திரையாக நெடும்பயணம் மேற்கொண்டு, டெல்லி-ஜந்தர் மந்தரில் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

துல்சா பாய் எனும் 70 வயது மூதாட்டியின் குடும்பம், போபால் கொடூரம் நடந்தபோது சிந்தி காலனியில் குடியிருந்து வந்தது. நச்சுவாயுவிலிருந்து எப்படியோ அக்குடும்பம் உயிர் தப்பிய போதிலும், நச்சு வாயுத் தாக்குதலின் கொடூர விளைவுகளை அக்குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் சந்தித்தனர். இது மட்டுமின்றி, யூனியன் கார்பைடு ஆலைக்கு வெளியே கொட்டப்பட்டிருந்த நச்சுக் கழிவுகளால் நஞ்சாகிவிட்ட நிலத்தடி நீரைத்தான் அவர்கள் குடிக்க வேண்டியிருந்தது.

இதனால் அவரது 14 வயது பேரன் ஆகாஷ் வளர்ச்சியே அடையாமல் குள்ளமாகவே இருக்கிறான். அவரது மருமகள் மாதவிடாய் காலங்களில் அதிக ரத்தப் போக்கால் அவதிக்குள்ளானார். இளைய மகனை காச நோய் தாக்கியது. மற்ற பேரக் குழந்தைகள் தொடர்ச்சியான முதுகுவலி, மூச்சுத்திணறல், உடல் பலவீனம் போன்றவற்றால் அவதியுற்றன. தீராத நோயும் வறுமையும் அவரது குடும்பத்தைப் பிடித்தாட்டிய போதிலும், துல்சா பாய் துவண்டு விடவில்லை. முடமாகிவிட்ட தன் பேரக் குழந்தையை இடுப்பிலே சுமந்து கொண்டு போராடுவோருடன் இணைந்து கொண்டார். 70 வயது ஆகியும் நீதியை வென்றடையும் நோக்கில், போபாலில் இருந்து தில்லி வரை பாதயாத்திரை சென்ற 50 பேருடன் அவரும் இணைந்து கொண்டார்.

நஞ்சான நிலத்தடி நீரின் கொடுமையால் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட ஒரு குழந்தை, பார்வை இழந்த கண்ணோடு இன்னொரு குழந்தை - என துயரத்தை சுமந்து வாழும் தந்தை ஒருவரும் இந்தப் பயணத்தில் கலந்து கொண்டார். தனது தாயாரையும் இரண்டு பேரன்களையும் நச்சு வாயுவுக்குப் பலிகொடுத்து 25 ஆண்டுகளாக நச்சு வாயுவின் பக்கவிளைவுகளோடு போராடும் சோட்டேகானும் (வயது 67) அவரது மனைவியும், இந்தப் பாத யாத்திரை பாதிக்கப்பட்ட போபால் மக்களுக்கு வெற்றியை தேடித் தரும் என்று உறுதியாக நம்பி போராட்டத்தில் கலந்து கொண்டனர். வயல் வெளிகளிலும் பள்ளிக்கூடங்களின் தாழ்வாரங்களிலும் இரவைக் கழித்து, மூன்று கட்டங்களாக நடத்தப்பட்ட இந்த நெடும்பயணம், ஜந்தர் மந்தர் பகுதியில் தில்லி போலீசாரால் தடுக்கப்பட்டது. தில்லியில் போராட்டம் நடத்திய போபால் மக்கள் 11 நாட்கள் திஹார் சிறையில் அடைக்கப்பட்டு வதைக்கப்பட்டனர். நாடாளுமன்றத் தெருவில் மறியல் செய்ய முயன்ற 12 குழந்தைகள் உள்ளிட்ட 36 பேர் கைது செய்யப்பட்டு போலீசு நிலையத்தில் வைத்து கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டனர்.

அரசின் பல்வேறு அடக்குமுறைகளைத் தாங்கி, பாதிக்கப்பட்ட போபால் மக்களின் உரிமைக்காக பல்வேறு குழுக்கள் தொடர்ந்து போராடி வருகின்றன. சதிநாத் சாரங்கி (வயது 54), கடந்த 23 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டோர் இயக்கத்தை ஒருங்கிணைத்துப் போராடி வருகிறார். போபால் மக்களின் போராட்டப் பயணத்தில் பலமுறை அவர் போலீசால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆலையின் நச்சுக் கழிவுகளை டௌ கெமிக்கல்ஸ் அகற்றத் தேவையில்லை என அரசு பேரம் பேசியது வெளியானதும், அதை எதிர்த்து அரசுக்கெதிரான போராட்டம்; டௌ கெமிக்கல்சுக்கு ஆதரவாக ரத்தன் டாட்டா கடிதம் எழுதியதையடுத்து டாடா நிறுவனங்கள் முன் மறியல், டாடா பொருட்களைப் புறக்கணிக்கும் இயக்கம் - என அடுத்தடுத்த போராட்டங்களில் தங்கள் நோய்களைக்கூடப் பொருட்படுத்தாமல் போபால் மக்கள் போர்க்குணத்தோடு கலந்து கொள்கின்றனர். அண்மையில், இந்தூர் அருகிலுள்ள பிதாம்பூரில் யூனியன் கார்பைடு ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுக் கழிவுகள் தாக்கி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதும், அதற்கெதிராக ம.பி. அரசின் மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகம் எதிரே அவர்கள் போராடினார்கள். கடந்த ஜூன் 7-ஆம் தேதியன்று வழங்கப்பட்ட அநீதியையும் அவமானத்தையும் நிவாரண மோசடிகளையும் எதிர்த்து அவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் நிவாரணப் பிச்சைக்காகப் போராடவில்லை. அரசின் புறக்கணிப்பும் அடக்குமுறையும் தொடர்ந்த போதிலும் அவர்கள் துவண்டுவிடவில்லை. கருணையை எதிர்பார்த்து காத்திருக்கவுமில்லை. அநீதிக்கும் அவமானத்துக்கும் பழிதீர்க்க வேண்டும், இனியும் போபால் போன்ற பேரழிவுகள் நடக்காமல் தடுக்கப்பட வேண்டும் என்றுதான் அவர்களின் போராட்டம் தொடர்கிறது. அவர்களின் நியாயமான போராட்டத்தை, முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டமாக, மறுகாலனியாக்கத்துக்கு எதிரான போராட்டமாக முன்னெடுத்துச் செல்வது ஒன்றுதான், நாம் போபால் மக்களின் போராட்டத்துக்கு காட்டும் உண்மையான ஆதரவாக இருக்க முடியும்.

● சுப்பு



படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் காந்திக்கு ஒண்ணுமே தெரியாதாம்!

யூனியன் கார்பைடைக் கொண்டுவந்தவர் இந்திராகாந்தி

ஆண்டர்சனை வழியனுப்பி வைத்தவர் ராஜீவ் காந்தி

டௌ கெமிக்கல்ஸுக்கு காவல் நிற்கிறார் சோனியா காந்தி

................................. தயாராகிறார் ராகுல் காந்தி

போபால் விஷவாயுப் படுகொலை வழக்கை நீர்த்துப்போகச் செய்த துரோகத்தனத்தில் காங்கிரசின் பங்கு அலாதியானது. இன்று நேற்றல்ல, அமெரிக்கத் தேசங் கடந்த தொழிற்கழகமான யூனியன் கார்பைடு கார்ப்பரேஷனுக்குக் காவடி தூக்கும் வேலை காங்கிரசு கட்சிக்குள் இந்திரா காந்தி காலத்திலேயே தொடங்கிவிட்டது.

யூனியன் கார்பைடு கார்ப்பரேஷன், தனது இந்தியத் துணை நிறுவனமான யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் மூலம் செவின் எனப்படும் பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையை 1969 ஆம் ஆண்டு போபாலில் நிறுவியது. இத்தொழிற்சாலை நிறுவப்பட்ட சமயத்தில் இப்பூச்சிக்கொல்லி மருந்தைத் தயாரிக்கப் பயன்படும் மெத்தில் ஐசோ சயனேட் என்ற இரசாயனப் பொருள் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இதனை போபால் தொழிற்சாலையிலேயே தயாரிக்க முடிவு செய்த யூனியன் கார்பைடு நிறுவனம், அதற்கு அனுமதி கோரி ஜனவரி 1, 1970 அன்று இந்திய அரசிடம் விண்ணப்பித்தது.

யூனியன் கார்பைடு எதிர்பார்த்தது போல அனுமதி உடனடியாகக் கிடைக்கவில்லை. ''யூனியன் கார்பைடு அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யவுள்ள தொழில்நுட்பம் காலாவதியாகிப் போன ஒன்று; அமெரிக்காவிலேயே கைவிடப்பட்ட தொழில்நுட்பத்தை இந்தியாவில் கொட்டப் பார்க்கிறார்கள்'' எனக் கூறி, தொழில் வளர்ச்சிக்கான அமைச்சக அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்து வந்தனர். எனினும், விண்ணப்பித்து ஐந்தாண்டுகள் கழித்து, அக்டோபர் 31, 1975 அன்று காலாவதியாகிப் போன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மூலப்பொருட்களைத் தயாரிக்கும் உரிமத்தை மைய அரசிடமிருந்து பெற்றுக் கொண்டது, யூனியன் கார்பைடு.

1970 களில் தொழில் வளர்ச்சி அமைச்சகத்தின் துணை இயக்குநராகப் பணியாற்றி வந்த ஆர்.கே.ஸஹி என்ற அதிகாரி, ''யூனியன் கார்பைடு நிறுவனம் உரிமம் பெற முடிந்ததற்கு நெருக்கடி நிலை ஆட்சிதான் காரணம்'' என்ற உண்மையைத் தற்பொழுது போட்டு உடைத்து விட்டார். ஐந்தாண்டுகள் உரிமம் கிடைக்காமல் அல்லாடி வந்த யூனியன் கார்பைடு, இந்திரா காந்தியால் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு ஐந்து மாதங்கள் முடிவதற்குள்ளாகவே உரிமத்தைப் பெற்றுள்ளது.

இந்திரா காந்தி இந்தக் கொலைகார ஆலையை அமெரிக்காவில் இருந்து கொண்டு வர உதவினாரென்றால், அவரது தலைப்பிள்ளை ராஜீவ் காந்தி அவ்வாலையின் தலைவரைக் கொலை வழக்கு விசாரணையில் இருந்து காப்பாற்றி, அமெரிக்காவுக்கு வழியனுப்பி வைத்தார்.

போபால் படுகொலை நடந்த நான்காம் நாள், டிசம்பர் 7, 1984 அன்று யூனியன் கார்பைடு கார்ப்பரேஷனின் தலைவர் வாரன் ஆண்டர்சன் அமெரிக்காவில் இருந்து போபாலுக்கு வந்தார். அன்றே அவரும், அவரின் இந்தியக் கூட்டாளிகளான கேஷுப் மஹிந்திரா, வி.பி.கோகலே ஆகியோரும் ம.பி. அரசால் கைது செய்யப்பட்டு கார்பைடு நிறுவனத்தின் விருந்தினர் மாளிகையில் 'சிறை' வைக்கப்பட்டனர். எனினும், அடுத்த சில மணி நேரத்திற்குள்ளாகவே வாரன் ஆண்டர்சனுக்குப் பிணை வழங்கப்பட்டது. வாரன் ஆண்டர்சன் அரசு விருந்தாளியைப் போல, ம.பி. அரசுக்குச் சொந்தமான விமானத்திலேயே டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்பு, அவர் டெல்லியில் வெளியுறவுச் செயலர் எம்.கே.ரஸ்கோத்ராவைச் சந்தித்துவிட்டு அமெரிக்காவுக்குத் திரும்பிப் போனார்.

இச்சதியில் ராஜீவிற்குப் பங்கு இருப்பது குறித்த விவாகாரம் மீண்டும் சந்தி சிரிக்கத் தொடங்கியிருக்கிறது. ராஜீவின் 'நற்



படிப்பகம்

www.padippakam.com

பெயரைக் காக்க வேண்டி, தற்பொழுது உள் துறை அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் குழு, ''ஆண்டர்சன் இந்தியாவுக்கு வந்து போனதும்; ஆண்டர்சன் பத்திரமாக அமெரிக்காவுக்குத் திருப்பியனுப்பப்படுவார் எனக் கொடுக்கப்பட்ட உறுதிமொழி பற்றியும் ராஜீவுக்குத் தெரியாது; அரசின் சார்பாக யார் இந்த உறுதிமொழியைக் கொடுத்தார்கள் என்பதும் தெரியவில்லை; ஆண்டர்சன் இந்தியாவிற்கு வந்து போனது தொடர்பாக அரசிடம் - குறிப்பாக, வெளியுறவுத் துறை அமைச்சகத்திடம் எவ்வித மான ஆவணங்களும் இல்லை. இது தொடர்பான விவரங்களுக்கு நாங்கள் பத்திரிகைகளில் தற்பொழுது வெளிவரும் செய்திகளைத்தான் சார்ந்திருக்கிறோம்; ஆண்டர்சனுக்குப் பிணை வழங்கி, அவரை அமெரிக்காவுக்குத் திருப்பியனுப்பியதில் ராஜீவுக்கு எந்தத் தொடர்புமில்லை எனப் பத்திரிகைகளே எழுதி வருகின்றன'' என அறிவித்திருக்கிறது.



**யூனியன் கார்பைடு, போபால் ஆலையில் காலாவதியாகிப் போன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மெத்தில் ஐசோ சயனேட்டைத் தயாரிக்கும் உரிமத்தை, இந்திராகாந்தி அறிவித்த அவசரநிலை ஆட்சியில்தான் பெற்றது.**

நாம் கொஞ்சம் ஏமாந்தால், அமைச்சர்கள் குழு என்ற இந்த அமெரிக்க அடிவருடிகளின் கூட்டம் போபால் படுகொலையைக்கூட அரசாங்கத்தின் ஆவணங்களில் இருந்து அழித்துவிடக் கூடும். ஆண்டர்சனுக்குப் பிணை வழங்கி அவரை அமெரிக்காவுக்குத் திருப்பியனுப்பியது, அப்போதைய ம.பி. முதல்வர் அர்ஜுன் சிங்கின் சொந்த முடிவு எனக் காட்டுவதற்காக அமைச்சர்கள் குழு கூச்சநாச்சமின்றிக் கட்டுக்கட்டான பொய்களை அவிழ்த்துவிட்டு வருகிறது என்பதை நிரூபிப்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

ராஜீவ் அரசில் வெளியுறவுத் துறைச் செயலராக இருந்த எம்.கே.ரஸ்கோத்ரா, போபால் தீர்ப்பு வெளியான பின் சி.என்.என்.-ஐ.பி.என். என்ற தனியார் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள நேர்காணலில், ''இந்தியாவுக்கு வரும் ஆண்டர்சன் பத்திரமாக அமெரிக்காவுக்குத் திருப்பு அனுப்பப்படுவார் என இந்திய அரசு கொடுத்த உறுதிமொழியின் அடிப்படையில்தான் அவர் அமெரிக்காவில் இருந்து போபாலுக்கு வந்ததாக''க் கூறியிருக்கிறார். அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த பி.வி.நரசிம்ம ராவ் இந்த உறுதிமொழியை, அமெரிக்கத் தூதரகத்தில் துணைத் தலைமை அதிகாரியாகப் பணியாற்றிய கார்டன் ஸ்ட்ரீப் மூலம் அளித்ததாக அந்நேர்காணலில் அவர் குறிப்பிட்டுள்ளார். இம்முடிவு பின்னர் ராஜீவுக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும், அதற்கு அவர் எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லையென்றும் ரஸ்கோத்ரா தெளிவுபடுத்தியுள்ளார்.

இம்முடிவு பின்னர் ராஜீவுக்குத் தெரிவிக்கப்பட்டது என்பதை அமைச்சர்கள் குழு, ''ஆண்டர்சன் இந்தியாவிற்கு வந்து அமெரிக்காவுக்குத் திரும்பிய பிறகுதான் தெரிவிக்கப்பட்டதாக''த் திரித்துப் புரட்டியிருக்கிறது. ஆண்டர்சன் கைது தொடர்பாக இந்து பத்திரிகை தனது நாளிதழில் டிசம்பர் 8, 1984 அன்று வெளியான செய்திக் கட்டுரையை மறுபதிப்பு செய்து, ஜூன் 26, 2010 அன்று வெளியிட்டுள்ளது. அதில், ''ஆண்டர்சன் போபாலுக்கு வந்து சேர்ந்த அதே நாளில் பிரதமர் ராஜீவ் காந்தி மத்தியப் பிரதேசத்திலுள்ள சாகர் என்ற ஊரில் தங்கியிருந்தார்; அப்பொழுதே, ஆண்டர்சன் பிணையில் விடுவிக்கப்படுவதற்கு முன்பாகவே, பிரதமரின் முதன்மைச் செயலர் பி.சி. அலெக்சாண்டர் ராஜீவ் காந்தியிடம் ஆண்டர்சனுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டது தொடர்பான எல்லா விவரங்களையும் தெரிவித்து விட்டார். அதன் பிறகுதான், மைய அரசு இப்பிரச்சினையில்



**வாரன் ஆண்டர்சன் போபாலுக்கு வந்த அதேநாளில், ராஜீவ் காந்தியும் ம.பி. மாநிலத்திலுள்ள சாகர் என்ற ஊரில்தான் தங்கியிருந்தார். இவ்வளவு அருகாமையில் இருந்தும், ஆண்டர்சன் வந்துபோனது ராஜீவுக்குத் தெரியாமல் நடந்திருக்குமா?**



படிப்பகம்

www.padippakam.com

தலையிட்டு, ஆண்டர்சனைப் பிணையில் விடுவித்து, அவரை போபாலில் இருந்து டெல்லிக்கு வழியனுப்பி வைத்தது. அர்ஜுன் சிங், சாகரில் தங்கியிருந்த ராஜீவ் காந்திக்குத் தெரிவிக்காமலேயே ஆண்டர்சனுக்குப் பிணை வழங்கும் முடிவை எடுத்திருப்பார் என்பது நம்பும்படியாக இல்லை'' எனக் கூறப்பட்டுள்ளது.



''ஆண்டர்சனை போபாலில் இருந்து டெல்லிக்கு அனுப்பி வைத்தது எனது சொந்த முடிவல்ல'' என அறிவித்ததன் மூலம், இப்பிரச்சினையில் ராஜீவுக்கும் பங்கிருப்பதைச் சூசகமாகப் போட்டு உடைத்துவிட்டார், அர்ஜுன் சிங்.

போபால் விஷவாயுப் படுகொலை நடந்தபொழுது, பிரதமர் பதவி மட்டுமல்ல, வெளியுறவுத் துறை பொறுப்பும் ராஜீவிடம்தான் இருந்தது. எனவே, ராஜீவிடம் கலந்து ஆலோசிக்காமல், ஆண்டர்சனைப் பத்திரமாகத் திருப்பியனுப்புவோம் என்ற உறுதிமொழியை உள்துறை அமைச்சராக இருந்த நரசிம்மராவ் மட்டுமே எடுத்திருப்பார் என்பதும் நம்பக்கூடியதாக இல்லை. இதற்கு காங்கிரசு கும்பல் மட்டுமல்ல, இந்து நாளிதழும், ''ராஜீவ் தேர்தல் பிரச்சாரத்திற்காக வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிட்டதால், அவருக்கு இந்த உறுதிமொழி பற்றித் தெரியாது'' எனக் குறிப்பிட்டுள்ளது.

இது உண்மையாகவே இருந்துவிட்டுப் போகட்டும். ராஜீவ் காந்தி பரிசுத்தவானாக இருந்திருந்தால், இந்த உண்மைகளைத் தன்னிடம் அலெக்ஸாண்டர் கூறிய பிறகாவது இந்த அநீயைத் தடுத்து நிறுத்தியிருக்கலாமே? இதனைத் தடுத்து நிறுத்தாததோடு, ''ஆண்டர்சனைப் பிணையில் வெளிவர முடியாத வழக்குகளில் கைது செய்யவில்லை; மக்களின் கோபத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக அவரைத் தடுப்புக் காவலில்தான் வைத்திருந்தோம்'' எனப் புளுகியது மைய அரசு. கொலைகாரன் ஆண்டர்சனை மக்களின் கோபத்தில் இருந்து காப்பாற்றுவதுதான் ராஜீவின் நோக்கமாக இருந்திருந்தால், அவரை அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்க வேண்டியதில்லையே, டெல்லி திகார் சிறைக்கு அனுப்பிக்கூட அவரைக் காப்பாற்றியிருக்க முடியமே!

உண்மையில் வாரன் ஆண்டர்சன், ஆயுள் தண்டனை வரை அளிக்கக்கூடிய சதி, கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் (culpable homicide) உள்ளிட்ட ஏழு பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். இவற்றுள் சில பிரிவுகள் பிணையில் வெளிவர முடியாத வழக்குகள். எனினும், ம.பி. மாநில போலீசாரே, ஆண்டர்சனுக்குச் சட்டவிரோதமான முறையில் பிணை வழங்கி, அமெரிக்காவுக்கு வழியனுப்பி வைத்தனர். ம.பி.மாநில போலீசாரின் இந்த அத்துமீறல்களுக்கு எதிராக அப்பொழுதே விஷவாயுவால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக வழக்குகள் தொடுக்கப்பட்டன.

ஒருபுறம் வாரன் ஆண்டர்சனைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பி வைப்போம் என்ற உறுதிமொழியை அமெரிக்காவுக்குக் கொடுத்துவிட்டு, இன்னொருபுறம் நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு ஆண்டர்சனைக் கைது செய்யும் நாடகத்தையும் திறம்பட நடத்தியிருக்கிறார், ராஜீவ். அமெரிக்க உளவு நிறுவனமும் தனது அறிக்கையில், தேர்தலுக்காகத்தான் இந்தக் கைது நாடகம் நடந்ததாகக் குறிப்பிட்டுள்ளது. ஆண்டர்சனைத் தப்ப வைத்த குற்றத்திற்காக இந்திய மக்களிடம் மன்னிப்புக் கேட்காத ராஜீவ், ஆண்டர்சனை சில மணி நேரங்கள் கைது செய்ய வேண்டியிருந்த துர்பாக்கியத்துக்காக அவரிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.



ராஜீவ் அரசில் வெளியுறவுத் துறைச் செயலராகப் பணியாற்றிய எம்.கே.ரஸ்கோத்ரா (படம்), ''இந்தியாவுக்கு வரும் ஆண்டர்சன் பத்திரமாகத் திருப்பியனுப்பப்படுவார் என்ற உறுதிமொழியை இந்திய அரசு கொடுத்திருந்ததையும், அதுபற்றி ராஜீவுக்குத் தெரிவிக்கப்பட்டதையும்'' உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஆண்டர்சனைக் காப்பாற்றி அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தோடு ராஜீவ்-காங்கிரசு கும்பலின் துரோகம் முடிந்துவிடவில்லை.

- *மார்ச் 29. 1985* அன்று போபால் வாயு கசிவு பேரழிவு சட்டத்தைக்



படிப்பகம்

www.padippakam.com




''வாரன் ஆண்டர்சனை இந்தியாவிடம் ஒப்படைக்கக் கோரி''ப் பல்வேறு அமைப்புகள் கொல்கத்தாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்

கொண்டு வந்து, அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தாம் விரும்பும்பட்சத்தில் தனியாக யூனியன் கார்பைடு கார்ப்பரேஷன் மீது வழக்குத் தொடுக்கும் உரிமை, அதிக நட்டஈடு கோரும் உரிமை ஆகியவற்றைத் தட்டிப் பறித்தார், ராஜீவ்.

● யூனியன் கார்பைடிடம் தொடக்கத்தில் 300 கோடி அமெரிக்க டாலர்கள் (தற்போதைய மதிப்புப்படி ஏறத்தாழ 15,000 கோடி ரூபாய்) நட்ட ஈடாகத் தர வேண்டும் எனக் கோரி வந்த இந்திய அரசு, இடையில் என்ன பேரம் நடந்ததோ, யூனியன் கார்பைடின் விருப்பப்படி 47 கோடி அமெரிக்க டாலர்களை (2,350 கோடி ரூபாய்) நட்ட ஈடாகப் பெற்றுக் கொண்டதோடு, யூனியன் கார்பைடின் மீதான சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் அறிவித்தது. பின்னர் பாதிக்கப்பட்ட மக்கள் போராடியதையடுத்து, யூனியன் கார்பைடு மீதான கிரிமினல் வழக்குகள் மட்டும் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

● நரசிம்ம ராவ் பிரதமராக இருந்தபொழுது, ''வாரன் ஆண்டர்சனை இந்தியாவிற்குக் கொண்டுவரும் வழக்கில் வேகம் காட்ட வேண்டாம்'' என வெளியுறவுத் துறை அமைச்சகம் மையப் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு வாய்வழி உத்தரவு போட்டது. இதனை, அச்சமயத்தில் போபால் வழக்கு விசாரணை அதிகாரியாக இருந்துவந்த பி.ஆர்.லால் தற்பொழுது அம்பலப்படுத்தியுள்ளார்.

● ராஜீவும், ராவும் யூனியன் கார்பைடைக் காப்பாற்ற அதிகாரத்தைப் பயன்படுத்தினார்கள் என்றால், தற்பொழுது பிரதமராக உள்ள மன்மோகன் சிங் யூனியன் கார்பைடு நிறுவனத்தைக் கையகப்படுத்தியுள்ள டௌ கெமிக்கல்ஸைக் காப்பாற்றும் திருப்பணியைச் செய்து வருகிறார். ப.சிதம்பரம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவைக் குழு இதனை நைச்சியமாகச் செய்து வருகிறது.

காங்கிரசின் இத்துரோகப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது; ஆனால் அவர்களோ, இத்துரோகங்களை அமெரிக்க முதலீட்டைக் கவரச் செய்யப்பட்ட ராஜதந்திரமாகச் சித்தரிக்கிறார்கள். ஒருசில அமெரிக்க டாலர்களுக்காக ஏழை மக்களைப் பலி கொடுக்கலாம் என்ற இந்த அயோக்கியத்தனத்தை மன்மோகன் சிங், ''போபால்கள் நேரலாம்; ஆனாலும் நாடு முன்னேறித்தான் ஆக வேண்டும்'' எனக் கவிதையைப் போலக் கூறிவருகிறார்.

● திப்பு

1994-இல் போபால் படுகொலை வழக்குகளைக் கவனித்து வந்த பி.ஆர்.லால் (படம்) என்ற முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி, ''நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில், வாரன் ஆண்டர்சனை இந்தியாவிடம் ஒப்படைக்கக் கோரும் வழக்கில் வேகம் காட்ட வேண்டாம்'' என, தான் நிர்ப்பந்திக்கப்பட்டதை தற்பொழுது அம்பலப்படுத்தியிருக்கிறார்.





படிப்பகம்

www.padippakam.com

## ஓட்டுநர் செய்த தவறுக்கு ஓனரையா தண்டிக்க முடியும்?

# உச்ச நீதிமன்றத்தின் மரத்தடி பஞ்சாயத்து

"ஏதோ நடந்தது நடந்து போச்சு. யாரைக் குத்தம் சொல்ல முடியும்? ஏதோ பெரிய மனசு பண்ணி கொடுக்கிறாங்க. கொடுக்கிறத வாங்கிக்கிங்க. மத்ததை அரசாங்கம் பாத்து செய்யும்"–

இது நகைச்சுவையல்ல,

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் சாரம்.

**"வாருங்கள்; தொழிற்சாலைகளை அமையுங்கள்; கொலை செய்யுங்கள்; எவ்விதத் தண்டனையுமின்றி இடத்தைக் காலிசெய்துவிட்டுப் போய்விடுங்கள்.''**

- போபால் விஷவாயு படுகொலை வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு பற்றி, அவ்விஷவாயுக் கசிவால் தனது மகனையும் மாமியாரையும் ஒருசேர பறிகொடுத்துவிட்டு நிற்கும் ஷம்ஷத் பேகம் வேதனையோடு சொன்ன வார்த்தைகள் இவை.

பல ஆயிரம் பேரைப் பலி கொண்ட, இன்னும் தினந்தோறும் பலரைப் பலி கொண்டுவரும் இவ்வழக்கில், பாசிச இட்லர் விஷவாயுவைப் பீச்சி யூதர்களைக் கொன்றதற்கு இணையான இவ்வழக்கில், 7 இந்தியக் குற்றவாளிகளுக்கு வெறும் இரண்டு ஆண்டுகள் மட்டுமே சிறை தண்டனையளித்து, அதே சமயம் அவர்களை ஒரேயொரு மணி நேரம் கூட சிறையில் அடைக்காமல், ஒவ்வொரு குற்றவாளியிடமிருந்தும் ரூ.25,000/-ஐ வாங்கிக் கொண்டு அவர்களைப் பிணையிலும் விட்டுவிட்ட இத்தீர்ப்பிற்கு இதைவிட வேறு என்ன மாதிரி விளக்கம் அளிக்க முடியும்?

போபால் படுகொலை வழக்கில் 12 பேர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இக்குற்றவாளிகளுள் வாரன் ஆண்டர்சன்; யூனியன் கார்பைடு, அமெரிக்கா; யூனியன் கார்பைடு, ஹாங்காங் ஆகிய 3 வெளிநாட்டுக் குற்றவாளிகள் மீதான வழக்கு தனியாகவும்; கேஷுப் மஹிந்திரா உள்ளிட்ட யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த எட்டு நிர்வாகிகள், யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் ஆகிய 9 இந்தியக் குற்றவாளிகள் மீதான வழக்கு தனியாகவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. விசாரணை நடந்து கொண்டிருந்தபொழுதே இந்தியக் குற்றவாளிகளுள் ஒருவர் இறந்துவிட, எஞ்சியிருந்த எட்டு குற்றவாளிகளுள் யூனியன் கார்பைடு இந்தியா நிறுவனத்தைத் தவிர்த்து 7 குற்றவாளிகளுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ஒவ்வொருவர் மீதும் ரூ.1,01,750 அபராதமும், யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் மீது ஐந்து இலட்ச ரூபாய் அபராதமும் விதித்து போபால் பெருநகர தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இத்தீர்ப்பை எழுதிய போபால் தலைமைப் பெருநகர நீதிபதி மோகன் பி.திவாரி, ''தனது கைகள் கட்டப்பட்டிருந்ததாக''ப் புலம்பியிருக்கிறார். ஒருவகையில் இது உண்மைதான். பத்து ஆண்டுகள் தண்டனைத் தரக்கூடிய வகையில் இந்தியக் குற்றவாளிகள் மீது போடப்பட்டிருந்த கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்ற வழக்கை (Culpable homicide) உச்ச நீதிமன்றம் இரண்டு ஆண்டுகள் மட்டுமே தண்டனை தரக்கூடிய குற்றமுறு கவனக்குறைவான வழக்காக (Criminal negligence) நீர்த்துப் போகச் செய்த அன்றே, இந்தியக் குற்றவாளிகள் அனைவரும் மறைமுகமாக விடுதலை செய்யப்பட்டுவிட்டனர் என்பதுதான் உண்மை. அதன்பின், இந்தியக் குற்றவாளிகள் மீது நடந்துவந்த விசாரணை ஒரு வகையான கண்துடைப்புதான். வாரன் ஆண்டர்சன் மீதான கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்ற வழக்கோ, 25 ஆண்டுகள் கழிந்த பிறகும் விசாரணையைக்கூட எட்டிப் பார்க்காமல் நிலுவையில் உள்ளது.

''இந்தியக் குற்றவாளிகள் மீதான வழக்கு போபால் தலைமைப் பெருநகர நீதிமன்றத்தில் நடந்துவந்தபோது, யூனியன் கார்பைடு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் வாரன் ஆண்டர்சன் மற்றும் 9 இந்தியக் குற்றவாளிகளுக்கு எதிராகப் புதிது புதிதாகச் சாட்சியங்கள் கிடைத்து வந்தன. நீதிபதி மோகன் பி.திவாரி இச்சாட்சியங்களைப் பயன்படுத்திக் கொண்டு இவ்வழக்கின் போக்கையே மாற்றியிருக்க முடியும். இவ்வழக்கை, குற்றவாளிகளுக்கு



படிப்பகம்

www.padippakam.com

**உச்சநீதி மன்றம் போபால் படுகொலையை ஒரு சாதாரண சாலைவிபத்தைப் போன்ற வழக்காக நீர்த்துப் போகச் செய்த அன்றே, குற்றவாளிகள் அனைவரும் மறைமுகமாக விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.**

மீண்டும் பத்து ஆண்டுகள் வரை தண்டனை அளிக்கக் கூடிய வழக்காகச் சட்டப்படியே உயர்த்தியிருக்க முடியும். நீதிமன்றம் குற்றவியல் தண்டனைச் சட்டப் பிரிவு 216-இன் கீழ் இதற்கான உத்தரவை அளிக்க வேண்டும் எனக் கோரி நாங்கள் மனுச் செய்தோம், ஆனால் நீதிபதியோ, உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படிதான் இவ்வழக்கை விசாரிப்பேன் எனக் கூறி, நாங்கள் அளித்த மனுவை தள்ளுபடி செய்து விட்டார்'' என்ற உண்மையைப் புட்டு வைத்து, கீழமை நீதிமன்றத்தின் அநீதியை அம்பலப்படுத்தியிருக்கிறது, போபால் விஷவாயுவால் பாதிக்கப்பட்ட மகளிர் அமைப்பு.

நீதிபதி மோகன் பி.திவாரி மட்டுமல்ல, இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக அநீதி இழைத்த ஒவ்வொரு நீதிபதியும், ஒவ்வொரு அதிகாரியும் சட்டப்படி எங்களால் என்ன செய்யமுடியுமோ அதைத்தான் நாங்கள் செய்தோம் எனக் கூறி, தங்களின் துரோகத்தை நியாயப்படுத்திக் கொள்ள முயலுகிறார்கள். போபால் விஷவாயு படுகொலை நடந்த நாள்தொட்டே, யூனியன் கார்பைடு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் வாரன் ஆண்டர்சன் மற்றும் அவரது இந்தியக் கூட்டாளிகளைச் சட்டத்தின் பிடியில் இருந்து பாதுகாப்பது, ஒரு கட்டைப் பஞ்சாயத்தின் மூலம் இவ்வழக்கை முடிவுக்குக் கொண்டுவருவது என்று திட்டமிட்டுக் கொண்டு, அதன்படியே இந்திய அரசும், அதிகார வர்க்கமும், நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. இதற்கேற்ப புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன; பழைய சட்டங்களுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

ராஜீவ் தலைமையில் இருந்த காங்கிரசு அரசு மார்ச் 29, 1985 அன்று இந்திய நாடாளுமன்றத்தில் போபால் வாயுக் கசிவு பேரழிவுச் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டம், பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்காக தாங்களே வாதாடவும், நீதி பெறவும்; தங்களுக்கென ஒரு வழக்குரைஞரை வைத்துக் கொள்ளவும் இந்திய அரசியல் சாசனச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டிருந்த உரிமைகளைத் தட்டிப் பறித்தது; மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தங்கள் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்லும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதையும் மறுத்தது.

விஷவாயுவால் பாதிக்கப்பட்டவர்கள் இச்சட்டத்தை எதிர்த்து நடத்திய வழக்கில் உச்ச நீதிமன்றம், ''ஒரு பெரிய நல்ல காரியத்தைச் செய்யும்பொழுது, அதில் சிறிய தவறுகள் செய்வது அனுமதிக்கத்தக்கதுதான்; சூழ்நிலைக்கான தேவையையொட்டி (Doctrine of Necessity) இயற்கை நீதியை (Natural Justice) மறுதலிக்கலாம்; இந்திய அரசு பாதிக்கப்பட்டவர்களுக்குத் தந்தையாக இருந்து இச்சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது'' என்ற தத்துவ வாதங்களை அடுக்கி, அவ்வழக்கைத் தள்ளுபடி செய்தது. இச்சட்டம் நடைமுறையில் யூனியன் கார்பைடுக்குத் தந்தையாகவும், பாதிக்கப்பட்ட இந்திய மக்களின் முதுகில் குத்திய எட்டப்பனாகவும் அமைந்தது.

பாதிக்கப்பட்ட மக்கள் யூனியன் கார்பைடு மீது அமெரிக்க நீதிமன்றங்களில் தொடுத்திருந்த நட்ட ஈடு கோரும் வழக்குகள் இந்தியாவிற்கு மாற்றப்பட்டதையடுத்து, போபால் மாவட்ட நீதிமன்றம் யூனியன் கார்பைடு நிறுவனம் இடைக்கால நட்ட ஈடாக 350 கோடி ரூபாய் உடனடியாக வழங்க வேண்டும் என உத்தரவிட்டது. ''இவ்விபத்துக்கு யார் பொறுப்பு என்பது இன்னும் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படாத நிலையில், தான் இடைக்கால நட்ட ஈடு எதுவும் வழங்க முடியாது'' என்ற வாதத்தை முன்வைத்து, இத்தீர்ப்புக்கு எதிராக ம.பி. மாநில உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது, யூனியன் கார்பைடு. அவ்வுயர் நீதிமன்றம் இவ்வாதத்தை ஏற்றுக்கொண்ட அதேசமயம், பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதி இடைக்கால நிவாரணமாக 250 கோடி ரூபாய் வழங்குங்கள் என யூனியன் கார்பைடைக் கேட்டுக் கொண்டது. இத்தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது, யூனியன் கார்பைடு.

இவ்வழக்கை விசாரிப்பது என்ற போர்வையில், உச்ச நீதிமன்றம், இந்திய அரசு, யூனியன் கார்பைடு ஆகிய மூன்று



போபால் படுகொலைக்காக ஒரேயொரு மணிநேரம் சிறைத்தண்டனைகூட அனுபவிக்காமல், பிணையில் வெளியே வந்துவிட்ட கேஷுப் மஹிந்திரா.



படிப்பகம்

www.padippakam.com

அமைப்புகளும் ஒரு இரகசியமான பேரத்தை நடத்தி, அதன் அடிப்படையில் யூனியன் கார்பைடிடம் இருந்து 47 கோடி அமெரிக்க டாலர்களை ஆயுட்கால நட்ட ஈடாக ஒரே தவணையில் பெறுவது என்ற முடிவுக்கு வந்தன.

''விபத்துக்கு யார் பொறுப்பு என்பது முடிவு செய்யப்படாத நிலையில் நட்ட ஈடு எதுவும் தர முடியாது'' என்று கூறி வந்த யூனியன் கார்பைடு, உச்ச நீதிமன்றத்திலும் பொறுப்பு பற்றி முடிவு எதுவும் எடுக்கப்படாத நிலையிலும் 47 கோடி அமெரிக்க டாலர்களை நட்ட ஈடாகக் கொடுக்கச் சம்மதித்தது. யூனியன் கார்பைடின் இந்த மனமாற்றத்திற்குக் காரணம், இந்த நட்ட ஈட்டிற்கு ஈடாக யூனியன் கார்பைடின் மீது இந்தியாவில் நடந்துவந்த சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் அனைத்தையும் தள்ளுபடி செய்துவிட இந்திய அரசும், உச்ச நீதிமன்றமும் ஒப்புக் கொண்டன என்பதுதான். எனவே, படுகொலைக்கான பொறுப்பிலிருந்தும் தண்டனையிலிருந்தும் யூனியன் கார்பைடைத் தப்ப வைத்த இப்பேரத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சதி என்றே கூறலாம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராடி வரும் அமைப்புகள் இப்'பேரத்தை' எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தன. இம்மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ''இந்திய அரசு பாதிக்கப்பட்ட மக்களைக் கலந்து ஆலோசிக்காமல் நட்ட ஈட்டுத் தொகையை முடிவு செய்தது சரிதான்; போபால் வாயு கசிவு பேரிடர் சட்டம் இந்திய அரசுக்கு அந்த உரிமையை வழங்கியள்ளது'' எனத் தடாலடியாகத் தீர்ப்பெழுதியதோடு, ''வருங்காலத்தில் இந்த நட்ட ஈட்டுத் தொகை குறைவானது எனக் கோரிக்கை எழுந்தால், அதனைச் சேமநல அரசான இந்திய அரசே பரிசீலித்துக் கொடுக்கும்'' எனக் கூறி, சிவில் வழக்குகளில் இருந்து யூனியன் கார்பைடை முழுவதுமாக கழட்டி விட்டனர். அதேசமயம், பாதிக்கப்பட்ட மக்களின் கோபத்தைத் தணிப்பதற்காக, யூனியன் கார்பைடு மீது தொடுக்கப்பட்டிருந்த கிரிமினல் வழக்குகளை மீண்டும் நடத்த அனுமதி அளித்தது, உச்ச நீதிமன்றம்.

பல்வேறு விதமான நீதிமன்ற இழுத்தடிப்புகளுக்குப் பின், போபால் தலைமைப் பெருநகர நீதிமன்றம் பிப்ரவரி 1, 1992 அன்று வாரன் ஆண்டர்சனைத் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்தது. அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல், தொடர்ந்து நீதிமன்ற விசாரணையைப் புறக்கணித்தால் யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் நிறுவனத்தில் இருக்கும் யூனியன் கார்பைடு கார்ப்பரேஷனின் பங்குகள் முடக்கப்படும் என்ற எச்சரிக்கையும் அந்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.



போபால் படுகொலை வழக்கை ஒரு சாதாரண சாலை விபத்து வழக்காக நீர்த்துப் போகச் செய்த உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எம்.அகமதி.

தனது சொத்துக்கள் முடக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளும் விதமாக, அப்பங்குகளை விற்று அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் விஷவாயுவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக போபால் மருத்துவமனையையும், அதனை நிர்வகிக்க இலண்டனைச் சேர்ந்த தனது வழக்குரைஞர் சர் இயான் பெர்சிவல் தலைமையில் ஒரு டிரஸ்டு ஒன்றை அமைக்கப் போவதாகவும் யூனியன் கார்பைடு அறிவித்தது. சொத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் இக்குறுக்கு வழியை ஏற்றுக் கொள்ள மறுத்த தலைமைப் பெருநகர நீதிமன்றம், ஏப்ரல் 30, 1992 அன்று யூனியன் கார்பைடின் பங்குகளை முடக்கும் நடவடிக்கைகளை எடுத்தது.

யூனியன் கார்பைடு நிறுவனம் இதனை எதிர்த்து ம.பி. மாநில உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் அதற்கு எதிராகவே தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கிலும் உச்ச நீதிமன்றம் குற்றவாளியான யூனியன் கார்பைடின் நலனைக் காக்கும் ரட்சகனாக அவதாரமெடுத்தது. யூனியன் கார்பைடின் பங்குகளை விற்று மருத்துவமனை கட்டும் திட்டத்திற்கு அனுமதியளித்ததோடு, அப்பங்குளை விற்றுக் கிடைத்த மொத்த பணத்தையும் சிறுகச்சிறுக யூனியன் கார்பைடு உருவாக்கிய டிரஸ்டிடமே ஒப்படைத்து, அதன் சொத்துகள் முடக்கப்படுவதைத் தடுத்தது.

அமெரிக்காவின் யூனியன் கார்பைடை மட்டுமல்ல, அந்நிறுவனத்தின் இந்தியக் கூட்டாளிகளைக் காப்பதிலும் உச்ச நீதிமன்றம் எவ்விதக் குறையும் வைக்கவில்லை. கேஷூப் மஹிந்திரா உள்ளிட்ட ஒன்பது இந்தியக் குற்றவாளிகளும், ''இந்த விபத்துக்குத் தாங்கள் எவ்விதத்திலும் பொறுப்பு கிடையாது; எனவே, பத்து ஆண்டுகள் தண்டனை தரக்கூடிய கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றப் பிரிவின் கீழ் தங்கள் மேல் வழக்குத் தொடர முடியாது'' என உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இவ்வழக்கில் இந்தியக் குற்றவாளிகளுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், அதற்கு அளித்திருந்த விளக்கம் முதலாளித்துவ ஆணவத்தையும் பொறுப்பின்மையையும் பச்சையாக எடுத்துக் காட்டியது.

**உச்சநீதி மன்றம் போபால் படுகொலையை ஒரு சாதாரண சாலைவிபத்தைப் போன்ற வழக்காக நீர்த்துப் போகச் செய்த அன்றே, குற்றவாளிகள் அனைவரும் மறைமுகமாக விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.**



படிப்பகம்

www.padippakam.com

அவ்வாலை தொழில்நுட்பக் குறைபாடுடைய ஆலை என்பதையும், அவ்வாலையில் கொடிய நச்சுத் திரவமான மெதில் ஐசோ சயனடை அதிக அளவில் சேமித்து வைத்திருந்தனர் என்பதையெல்லாம் ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ‘‘சம்பவம் நடந்த அன்று நிர்வாகிகளா ஆலையை இயக்கினார்கள்? அன்று விபத்து நடக்கப் போவதை அவர்கள் அறிந்தா இருந்தார்கள்? பல பேரைப் பலி கொள்ளும் நோக்கத்தோடா நச்சுத் திரவத்தைச் சேமித்து வைத்திருந்தார்கள்?’’ என்ற திகைப்பூட்டும் கேள்விகளை எழுப்பி, 9 இந்தியக் குற்றவாளிகளின் மீதான கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்ற வழக்கை, ஒரு சாதாரண சாலை விபத்தைப் போன்ற குற்றமுறு கவனக்குறைவான வழக்காக நீர்த்துப் போகச் செய்தனர்.



இந்தியக் குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட இரண்டு ஆண்டு சிறைத் தண்டனையைக் கண்டித்துப் பாதிக்கப்பட்ட மக்கள் போபால் மாவட்ட நீதிமன்றம் முன்பு நடத்திய ஆர்ப்பாட்டம்.

யாரோ ஒருவர் செய்த குற்றத்திற்காக இன்னொருவரைத் தண்டிக்கச் சட்டத்தில் இடமில்லை என்பதைத் தெளிவுபடுத்திய நீதிபதிகள், இப்படுகொலைக்கான பொறுப்பைத் தொழிலாளர்கள் மீது சுமத்தினர். சம்பவம் நடந்த அன்று அவ்விஷவாயுவைக் கடத்திச் சென்ற காற்றையும், பனியையும் குற்றத்திற்குப் பொறுப்பாக்கியிருந்தால், தீர்ப்பு இன்னும் சுவாரசியமாக இருந்திருக்கும்! பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக இத்தீர்ப்பை எதிர்த்துப் போடப்பட்ட மேல்முறையீட்டு மனுவை, உச்ச நீதிமன்றம் விசாரணைக்குக்கூட அனுமதிக்காமல் தள்ளுபடி செய்தது.

இப்படித் தங்களுக்குச் சேவகம் செய்த நீதிபதிகளுக்கு முதலாளிகள் தக்க பரிசு வழங்கலாமா விட்டிருப்பார்கள்? யூனியன் கார்பைடு தனது சொத்துக்களைப் பாதுகாக்க உருவாக்கிய டிரஸ்டு மற்றும் மருத்துவமனையின் நிர்வாகப் பொறுப்பைத் தனது இலண்டன் வழக்குரைஞரிடமிருந்து மாற்றி, இந்திய உச்ச நீதிமன்றத்திடம் ஒப்படைத்தது. உச்ச நீதிமன்றம், தனது முன்னாள் தலைமை நீதிபதி அகமதியை அந்த டிரஸ்டின் வாழ்நாள் தலைவராக நியமித்தது. போபால் படுகொலை வழக்கை வெறும் சாலை விபத்தாக நீர்த்துப் போகச் செய்து தீர்ப்பு எழுதிய அகமதியைத் தவிர, வேறு யார் இப்பதவிக்குத் தகுதியானவராக இருந்துவிட முடியும்?

போபால் படுகொலை வழக்கை நீர்த்துப் போகச் செய்ததில் மையப் புலனாய்வுத் துறையின் பாத்திரத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. போபால் படுகொலைக்கு முன்பாகவே அவ்வாலையில் நடந்திருந்த பல்வேறு விபத்துக்களையும் மரணங்களையும் சி.பி.ஐ., ஒரு சாட்சியமாக முன்வைக்கவேயில்லை; போபால் ஆலையில் இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும், அமெரிக்காவின் வர்ஜீனியாவில் இருக்கும் இதே போன்றதொரு யூனியன் கார்பைடு ஆலையில் இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஒப்பிட்டு அறிக்கை தரவேண்டும் என போபால் பெருநகர தலைமை நீதிமன்றம் அளித்த உத்தரவை, சி.பி.ஐ., வேண்டுமென்றே கிடப்பில் போட்டு வைத்தது.

போபால் நீதிமன்றம் வாரன் ஆண்டர்சனைக் கைது செய்து அழைத்து வரக் கோரும் பிடி வாரண்டை 1992-ஆம் அண்டு மார்ச் மாதமே பிறப்பித்துவிட்டாலும், அதனை நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்திலும், அதைத் தொடர்ந்து வந்த பா.ஜ.க. கூட்டணி ஆட்சியிலும், தற்பொழுது நடைபெறும் காங்கிரசு கூட்டணி ஆட்சியிலும் வாரன் ஆண்டர்சனைத் தேடிப் போய்க் கொடுக்காமல் கிடப்பிலேயே போட்டு வைத்திருக்கிறது, சி.பி.ஐ. வாரன் ஆண்டர்சன் நியூயார்கின் புறநகர்ப் பகுதியில் தனது ஓய்வுக் காலத்தைச் சுகமாகக் கழித்துக் கொண்டிருக்கும்பொழுது, ‘‘வாரன் ஆண்டர்சன் தலைமறைவாகிவிட்டதாக’’க் கதைவிட்டுக் கொண்டு தனது அலட்சியப் போக்கை சி.பி.ஐ. மூடி மறைத்து வருகிறது.

யூனியன் கார்பைடு தனக்குச் சார்பாக வாதாட நானி பல்கிவாலா, ஃபாலி நாரிமன் உள்ளிட்ட திறமையான வழக்குரைஞர்களைக் கொண்ட ஒரு குழுவையே இறக்கியிருந்தது; ஆனால், சி.பி.ஐ., இவ்வளவு முக்கியமான வழக்கை ஒரேயொரு வழக்குரைஞரைக் கொண்டுதான் நடத்தியது; எல்லாவற்றுக்கும் மேலாக, போபால் படுகொலை வழக்கை நீர்த்துப்போக வைத்த உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக சி.பி.ஐ., மேல்முறையீடு செய்யாமல், குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்து கொண்டது.

போபால் படுகொலை தொடர்பான ஒவ்வொரு தீர்ப்பும் அப்படுகொலைக்குப் பொறுப்பான குற்றவாளிகளுக்கு மட்டும் சாதகமானதல்ல; வளர்ச்சி என்ற பெயரில் இந்தியாவிற்குள் அனுமதிக்கப்படும் ஒவ்வொரு பன்னாட்டு நிறுவனத்திற்கும் அவற்றின் இந்தியக் கூட்டாளிகளுக்கும் சாதகமானதாகும். இது தான் இத்தீர்ப்புகளின் பின் மறைந்துள்ள அபாயம்!

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

# அமைச்சர்கள் குழுவா? அடிவருடிகள் கும்பலா?

"ஆலைக்கழிவுகளை அகற்ற முடியாது" என்கிறது டௌ கெமிக்கல்ஸ்.

"நாங்களே செய்கிறோம்" என்கிறது அமைச்சர் குழு.

"ஆஸ்பத்திரிக்கு செலவு செய்ய முடியாது" என்கிறது டௌ.

"அரசே ஏற்று நடத்தும்" என்கிறது அமைச்சர் குழு.

"கூடுதல் நிவாரணம் தர முடியாது" என்கிறது டௌ.

"அதையும் நாங்களே தருகிறோம்" என்கிறது அமைச்சர் குழு.

**''அவர்கள் துப்பாக்கியைத் தூக்கியிருந்தால், இவையெல்லாம் நன்றாக நடந்திருக்காதா?''**

**- ரஷிதா பீ,**
**போபால் விஷவாயுவால் பாதிக்கப்பட்டவர்.**

போபாலில் நடந்த விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டு உயிரோடு இருக்கும் துர்பாக்கியசாலிகள், அரசால் எப்படியெல்லாம் வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை விளங்கிக் கொள்வதற்கு இந்தச் சொற்களுக்கு மேல் வேறு எதுவும் தேவையில்லை.

பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி கிடைத்து விடாமல் தடுத்து வந்த காங்கிரசு கட்சி, இப்பொழுது தனது பழைய பாவத்திற்கெல்லாம் பரிகாரம் தேடுவது போல, கூடுதல் நிவாரண உதவித் திட்டத்தை அறிவித்திருக்கிறது. காங்கிரசின் 1,500 கோடி ரூபாய் பெறுமான இந்தத் திடீர்க் கருணையைக் கீறிப் பார்த்தால்தான், அதன் நயவஞ்சக முகம் புலப்படும்.

விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து ஏற்கெனவே அரசு நடத்திய கணக்கெடுப்பும்; அவர்கள் எப்படிப்பட்ட பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என வகைப்படுத்தியிருப்பதும்; அதற்கேற்ப அரசு அவர்களுக்கு அளித்த ஈட்டுத் தொகையும் அநீதியானது எனப் பல ஆண்டுகளாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போராடி வரும் அமைப்புகள் கூறிவருகின்றன.

உதாரணத்திற்குச் சொன்னால், போபாலில் உள்ள ஜே.பி. நகர் யூனியன் கார்பைடு ஆலையை ஒட்டி அமைந்துள்ள பகுதி. இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களுள் ஒரேயொருவர் தான் விஷவாயுவால் மிகக் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாக அரசு வகைப்படுத்தியிருக்கிறது.

இவ்விஷவாயு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுள் பெரும்பாலோர் ஏழை முசுலீம்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர். பாதிப்பை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு முழுவதும் அவர்கள் தலையில் சுமத்தப்பட்டது. இவற்றிலிருந்தே பாதிக்கப்பட்டவர்களை வகைப்படுத்துவதில் அரசு எந்தளவிற்கு நியாயமாக நடந்துகொண்டிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அவ்விஷவாயுவால் பாதிக்கப்பட்டு உடனடியாகவும், அடுத்த சில நாட்கள், மாதங்கள், ஆண்டுகளில் இறந்து போனவர்களின் எண்ணிக்கை 22,146 எனப் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் போராடிவரும் அமைப்புகள் தக்க ஆதாரங்களோடு கூறி வருகின்றன. ஆனால், ம.பி. மாநில அரசோ இறந்து போனவர்களின் எண்ணிக்கை 15,274 தான் எனக் கூறி, மற்ற இறப்புகளைப் பதிவு செய்யாமல் புறக்கணித்து விட்டது.

1996-ஆம் ஆண்டு முடிவில் 10,29,515 பேர் விஷவாயுவால் தாமோ அல்லது தமது குடும்பத்தோரோ பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறிப் பதிவுக்காக விண்ணப்பம் செய்ததில், 5,72,029 விண்ணப்பங்கள் மட்டும்தான் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றிலும் 90 சதவீதப் பேர் விஷவாயுவால் மிகக் குறைந்த அளவே பாதிக்கப்பட்டுள்ளதாக வகைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு ரூ.25,000/- மட்டுமே நட்ட ஈடாக வழங்கப்பட்டது. இந்த அற்பமான நட்ட ஈட்டுத் தொகையைப் பெறுவதற்கே பாதிக்கப்பட்ட மக்கள் பல ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது.

யூனியன் கார்பைடு ஆலையில் இருந்து வெளியேறிய மெத்தில் ஐசோ சயனேட்டால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தலைமுறை தலைமுறையாகத் தொடரக்கூடியது. ஆனால், ம.பி. மாநில அரசு பாதிப்புகள் பற்றிப் பதிவு செய்



படிப்பகம்

www.padippakam.com



டௌ கெமிக்கல்ஸின் அடிவருடிகள்:
(மேல்வரிசை) உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்;
காங்கிரசின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் மனு சிங்வி;
(கீழ் வரிசை) வர்த்தகத் துறை அமைச்சர் கமல் நாத்;
சுற்றுப்புறச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ்.

வதை 1996-ஆம் ஆண்டோடு நிறுத்திக் கொண்டது; அதன் பிறகு அவ்விஷவாயு பாதிப்பால் புற்று நோய் மற்றும் சிறுநீரகக் கோளாறுக்கு ஆளானவர்கள், ஊனமாகப் பிறந்த குழந்தைகள், கண்பார்வை இழந்தவர்கள் எவ்வித நிவாரண உதவிக்கும் வழியின்றி அரசால் அம்போ என்று கைவிடப்பட்டனர். 1996-க்குப் பிறகு விஷவாயு பாதிப்பால் இறந்து போனவர்களின் எண்ணிக்கை மட்டும் 10,000-ஐத் தாண்டும் எனக் கூறப்படுகிறது. அதனால்தான், பாதிக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகள் பாதிப்பு பற்றிப் புதிய கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கோரி வருகின்றன.

ஆனால், மைய அரசோ பழைய கணக்கெடுப்பு மற்றும் வகைப்படுத்தலின்படிதான் கூடுதல் நிவாரணம் வழங்கவுள்ளது. அதிலும் ஏற்கெனவே பாதிப்புக்குள்ளானவர்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்ட 5,72,029 பேருக்கும் கூடுதல் நிவாரண உதவி கிடைக்காது. இவர்களுள் வெறும் 15 சதவீதப் பேருக்குத்தான் - 42,208 பேருக்குத்தான் கூடுதல் நிவாரண உதவி கிடைக்கும் வாய்ப்புண்டு. அதிலும் ஏற்கெனவே ஈடாக அளிக்கப்பட்ட தொகை கழித்துக் கொள்ளப்படும் என்ற நிபந்தனை வேறு.

ம.பி. மாநில அரசு ஆகஸ்டு 2004-இல் நீதிமன்றத்திற்கு அளித்த ஒரு அறிக்கையில், 5,72,029 பேருக்கு ஈட்டுத் தொகை வழங்கியது போக, யூனியன் கார்பைடு வழங்கிய நிவாரணத் தொகையில் 1,574 கோடி ரூபாய் மிச்சமிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கையிருப்பைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என இவ்வமைப்புகள் கோரி வந்தபொழுதெல்லாம், அதனைத் தனது கஜானாவில் இருந்து வெளியே எடுக்க மறுத்து வந்த காங்கிரசு அரசு, இப்பொழுது தனது துரோகங்களை மூடிமறைத்துக் கொள்ளும் உள்நோக்கத்தோடு வழங்க முன்வந்திருக்கிறது.

இந்தப் புதிய நிவாரண நாடகத்தை அறிவித்திருக்கும் அமைச்சர்கள் குழு, ''கூடுதல் நட்ட ஈடு அளிப்பது, போபாலில் யூனியன் கார்பைடு ஆலை அமைந்துள்ள இடத்தையும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளையும் சுத்தப்படுத்துவது ஆகிய பொறுப்புகளில் இருந்து டௌ கெமிக்கல்ஸைக் கழட்டிவிடுவதையும், அப்பொறுப்புகளை இந்திய அரசின் தலையில் சுமத்துவதையும், ஆண்டர்சனை இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு வழியனுப்பி வைத்ததில் ராஜீவுக்கு உள்ள பங்கை மூடிமறைப்பதையும்'' நோக்கங்களாகக் கொண்டு செயல்படத் தொடங்கியிருக்கிறது. இதற்கேற்றபடி, இந்தப் புதிய அமைச்சர்கள் குழு கைதேர்ந்த அமெரிக்க அடிவருடிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

டௌ கெமிக்கல்ஸ் 2001-ஆம் ஆண்டு யூனியன் கார்பைடு கார்ப்பரேஷனைக் கையகப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராடி வரும் அமைப்பைச் சேர்ந்த அலோக் பிரதாப் சிங் என்பவர் போபால் ஆலையையும் அதன் சுற்றவட்டாரப் பகுதிகளையும் சுத்தப்படுத்த டௌ கெமிக்கல்ஸுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி ம.பி. மாநில உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இந்திய அரசின் இரசாயனத் துறை அமைச்சகம் 2005-ஆம் ஆண்டு இந்த வழக்கில் தன்னை இணைத்துக் கொண்டு, மாசு நீக்கும் பணிகளுக்காக டௌ கெமிக்கல்ஸ் முதல் கட்டமாக -று கோடி ரூபாயை நீதிமன்றத்தில் கட்ட வேண்டும் என மனு தாக்கல் செய்தது. அன்றிலிருந்தே டௌ கெமிக்கல்ஸ் இந்திய அரசின் மூலமே இந்த வழக்கைக் காயடித்து விடுவதற்குப் பலவித முயற்சிகளை எடுத்து வருகிறது.

2005-ஆம் ஆண்டு இறுதியில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த டௌ கெமிக்கல்ஸ் தலைவர் ஆண்ட்ரூ லீவரிஸ் இவ்வழக்கைக் கைவிடக் கோரி பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திய-அமெரிக்க முதலாளிகளின் மன்றம் 2006-ஆம்

**கார்பைடு ஆலையை ஒட்டி அமைந்துள்ள ஜே.பி.நகர் பகுதியைச் சேர்ந்தவர்களுள் ஒரே ஒருவர்தான் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாக அரசு வகைப்படுத்தியிருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டு அமெரிக்காவில் கூடியபொழுது, அக்கூட்டத்தில் இவ்வழக்கு அமெரிக்க முதலீட்டிற்குத் தடை ஏற்படுத்துவதாக வலியுறுத்திய ஆண்ட்ரூ லீவரிஸ், ''இந்திய அரசின் இரசாயனத் துறை இந்த வழக்கில் இருந்து விலகிக் கொண்டால், தமது நிறுவனம் இந்தியாவில் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யத் தயாராக இருப்பதாக''ப் பேரம் நடத்தினார்.

இதனடிப்படையில், இந்திய அரசு அமைத்துள்ள முதலீட்டுக் கழகத்தின் தலைவரான ரத்தன் டாடா, ''டௌ கெமிக்கல்ஸை வழக்கில் இருந்து விடுவித்து விட்டால், இந்திய முதலாளிகளே பணம் போட்டு சுத்தப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக'' பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும், திட்டக் கமிசனின் தலைவர் அலுவாலியாவிற்கும் கடிதம் எழுதினார். 2006-ஆம் ஆண்டில், அப்பொழுது நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் ஆண்ட்ரூ லீவரிஸ் மற்றும் ரத்தன் டாடாவின் திட்டங்களை ஆதரித்துத் தனது அமைச்சகத்தின் சார்பில் அரசுக்குக் கடிதம் எழுதினார். 2007-ஆம் ஆண்டில் அப்பொழுது வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த கமல் நாத்தும் இதே போன்ற ஆதரவுக் கடிதத்தை அரசுக்கு அனுப்பினார்.

இக்கடிதங்களின் அடிப்படையில் அர்ஜுன் சிங் தலைமையில் செயல்பட்டு வந்த அமைச்சர்கள் குழுவைக் கலைத்துவிட்டுப் புதிதாக அமைப்பதென்றும்; நிவாரணப் பணிகளை மட்டும் மேற்பார்வையிட்டு வந்த அமைச்சர்கள் குழுவின் வரம்பை சுத்தப்படுத்தும் பணிகளையும் மேற்பார்வையிடுவதாக உயர்த்துவதென்றும் போபால் தீர்ப்புக்கு முன்பே மன்மோகன் சிங் அரசு முடிவெடுத்துவிட்டது.

சுத்தப்படுத்தும் பணிகளை மேற்பார்வையிடுவது என்பதன் பொருள் டௌ கெமிக்கல்ஸை அப்பொறுப்புகளில் இருந்து கழட்டிவிடுவது என்பது தவிர வேறில்லை. அதனால்தான் இதற்குப் பொருத்தமான ப.சிதம்பரம், கமல் நாத் போன்ற டௌ கெமிக்கல்ஸின் அடிவருடிகளைக் கொண்டு இந்தப் புதிய அமைச்சரவைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது; அமைச்சர்கள் குழுவின் தலைவர் ப.சிதம்பரமும் இந்திய அமெரிக்க முதலாளிகள் மன்றத்தின் கூட்டம் ஜூன் 22, 2010 அன்று தொடங்குவதற்கு இரண்டு நாட்கள் முன்பாகவே, சுத்தப்படுத்தும் பணிகளுக்காக இந்திய அரசு ரூ.250 கோடி ஒதுக்கியிருப்பதாக அறிவித்து, அமெரிக்க முதலாளிகளின் மனதைக் குளிர வைத்து விட்டார்.

இன்னொருபுறமோ, தனது இந்தத் துரோகத்தை மறைத்துக் கொள்ளும்விதமாக, டௌ கெமிக்கல்ஸுக்கு எதிரான வழக்கைத் தொடரப் போவதாக அறிவித்திருக்கிறது, அமைச்சர்கள் குழு. இப்படி அறிவித்திருக்கும் காங்கிரசு கட்சியின் செய்தித் தொடர்பாளரான அபிஷேக் மனு சிங்விதான் டௌ கெமிக்கல்ஸுக்குச் சட்ட ஆலோசகராக இருந்து வருகிறார்.

உச்ச நீதிமன்றம் இந்தியக் குற்றவாளிகள் மீதான வழக்கை நீர்த்துப் போகச் செய்து உத்தரவிட்டபொழுது வாயை மூடிக் கொண்டிருந்த காங்கிரசு, இப்பொழுது அவ்வழக்கின் தகுதியை உயர்த்தக் கோரி சீராய்வு மனு வைத் தாக்கல் செய்யப் போவதாக மார் தட்டி வருகிறது. பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்பது காங்கிரசின் வரலாற்றில் புதியதல்லவே!

காங்கிரசில் மட்டுமல்ல, எதிர்க்கட்சியான பா.ஜ.க-விலும் டௌ கெமிக்கல்ஸுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அக்கட்சியின் முக்கியத் தலைவர்களுள் ஒருவரான அருண் ஜெட்லி 2006-ஆம் ஆண்டில் டௌ கெமிக்கல்ஸின் வழக்குரைஞராகப் பணியாற்றியிருக்கிறார். ''யூனியன் கார்பைடு ஆலைக்குள் பெட்ரோல்-டீசல் கழிவுகள்தான் கொட்டிக்கிடக்கிறதேயொழிய, இரசாயனக் கழிவுகள் எதுவும் கிடையாது'' என அறிக்கை விட்ட புண்ணியவான்தான் பாபுலால் கௌர். இவர் மத்தியப் பிரதேச பா.ஜ.க. அரசில் போபால் நிவாரணப் பணிகளுக்கான அமைச்சராக இருந்தபொழுதுதான் இந்த அறிக்கையை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கட்சி டௌ கெமிக்கல்ஸிடமிருந்து எவ்விதக் கூச்சமுமின்றித் தேர்தல் நன்கொடையும் பெற்று வந்துள்ளது.



அமைச்சர்கள் குழு அறிவித்திருக்கும் கூடுதல் நிவாரண மோசடியை அம்பலப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாகப் போராடி வரும் தொண்டு நிறுவனங்கள் போபால் நகரில் நடத்திய பத்திரிக்கையாளர் சந்திப்பு.

இந்த அடிவருடிகள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, டௌ கெமிக்கல்ஸுக்கு எதிராகப் போராடி வரும் மக்களிடம், ''ஆலையை யார் சுத்தப்படுத்தினால் என்ன?'' என்ற கேள்வியை எழுப்பி, அதன் மூலம் அவர்களின் போராட்டத்தைத் தேவையற்ற ஒன்றாகச் சித்தரிக்க முயலுகிறார்கள். ''யார் சுற்றுச்சூழலை நாசப்படுத்தினார்களோ, அவர்கள்தான் அதனைச் சுத்தப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்ற இயற்கை நீதிக்கு எதிரானது இந்தக் கேள்வி. டௌ கெமிக்கல்ஸைப் பொறுப்பில் இருந்து கழட்டிவிடும் இந்தக் கேள்விதான், சுற்றுச்சுழலையும், இந்திய மக்களின் வாழ்க்கையையும் எவ்விதத் தண்டனையுமின்றி நாசப்படுத்தும் உரிமையை அமெரிக்க முதலாளிகளுக்கு வாரிவழங்கும் அணுசக்தி கடப்பாடு சட்டமாக உருவெடுத்து வருகிறது.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

# யோக்கியன் வர்றான்...

**போபால் படுகொலை தீர்ப்பைக் காட்டி**

**காங்கிரசைச் சாடி வரும் பா.ஜ.க.வின் மறுபக்கம்.**

**வா**ஜ்பாயி பிரதமராக இருந்தபொழுது, அவரது கூட்டணி அரசு இந்தியத் தலைமை வழக்குரைஞராக இருந்த சோலி சோரப்ஜியிடம், ''இந்திய-அமெரிக்கக் குற்றவாளிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் வாரன் ஆண்டர்சனை இந்திய அரசிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்க அரசைக் கேட்க முடியுமா?'' என்பது குறித்து விளக்கம் அளிக்குமாறு கோரியது. இதற்கு சோலி சோரப்ஜி, ''யூனியன் கார்பைடு கார்ப்பரேஷன் முன்னாள் தலைவர் வாரன் ஆண்டர்சனை இந்தியாவிற்குக் கொண்டுவர எடுக்கப்படும் நடவடிக்கைகள் வெற்றி பெற வாய்ப்பில்லை; எனவே, இந்த நடவடிக்கைகள் தொடருவதைக் கைகழுவி விடலாம்'' எனக் கருத்துத் தெரிவித்தார்.

''அமெரிக்கச் சட்டத்தின்படி வாரன் ஆண்டர்சனுக்கு எதிராக இந்தியா அளித்துள்ள சாட்சியங்கள் போதுமானதல்ல; எனவே, அமெரிக்க அரசு ஆண்டர்சனை இந்தியாவிடம் ஒப்படைக்காது'' என்பது சோலி சோரப்ஜி தரப்பு வாதம். இதுகூட அவரது சொந்த வாதமல்ல; வாரன் ஆண்டர்சன் மீதான வழக்கு தொடர்பாக அமெரிக்காவைச் சேர்ந்த சட்ட ஆலோசனை நிறுவனங்கள் முன்வைத்து வரும் வாதங்களையே, சோரப்ஜி கிளிப்பிள்ளைப் போலக் கூறினார்.

அக்கூட்டணி ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்த அருண் ஜெட்லி 2001- ஆம் ஆண்டு அரசுக்கு அனுப்பிய ஒரு குறிப்பில், ''யூனியன் கார்பைடின் போபால் ஆலையில் தொழில்நுட்பக் குறைபாடுகள் இருந்து வந்ததை அந்நிறுவனத்தின் தலைவரான வாரன் ஆண்டர்சன் அறிந்திருந்தார் என்பதற்கும், அக்குறைபாடுகளைச் சரி செய்ய அவர் தவறிவிட்டார் என்பதற்கும் எவ்விதச் சாட்சியமும் கிடையாது. போபால் ஆலையின் அன்றாட செயல்பாடுகளை அமெரிக்காவிலுள்ள தாய் கம்பெனிதான் நடத்திவந்தது என்பதற்கும் சாட்சியம் கிடையாது. எனவே, போபால் ஆலையில் ஏற்பட்ட வாயுக் கசிவிற்கும், அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கும் வாரன் ஆண்டர்சனைப் பொறுப்பாக்க முடியாது'' எனக் கூறியிருக்கிறார்.

வாரன் ஆண்டர்சனை இந்தியாவுக்குக் கொண்டுவருவதில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி உறுதியாக இருந்திருந்தால், ஆண்டர்சனுக்கு எதிராக இன்னும் என்னென்ன சாட்சியங்கள் தேவை என்பதை ஆராய்ந்து, சேகரித்து அமெரிக்காவிடம் அளித்திருக்கலாம். ஆனால், பா.ஜ.க.வோ நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியதுதான் சாக்கு என்ற கதையாக, சோலி சோரப்ஜியும் அருண் ஜெட்லியும் தந்த ஆலோசனைகளின்படி அவ்வழக்கைக் கிடப்பில் போட்டது.

உச்ச நீதிமன்றம் போபால் விஷவாயு படுகொலை தொடர்பாக செப்.13, 1996-இல் அளித்த தீர்ப்பில், கேஷூப் மஹிந்திரா உள்ளிட்ட இந்தியக் குற்றவாளிகள் மீதான வழக்கை வெறும் இரண்டு ஆண்டுகள் மட்டுமே தண்டனை கிடைக்கக்கூடிய வழக்காக நீர்த்துப் போகச் செய்தது. இதனையே காரணமாக வைத்து, வாரன் ஆண்டர்சனைக் கைது செய்து அழைத்து வரக் கோரி போபால் நீதிமன்றம் ஏற்கெனவே பிறப்பித்திருக்கும் பிடிவாரண்டை உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்றவாறு மாற்றி புதிய பிடிவாரண்ட் பிறப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மே 2002-இல் சி.பி.ஐ. போபால் பெரு நகரத் தலைமை நீதிபதி முன் வைத்தது. தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதைப் போல, வாரன் ஆண்டர்சன் மீதான வழக்கையும் நீர்த்துப் போக வைக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள். நீதிமன்றம் சி.பி.ஐ-இன் கோரிக்கையை நிராகரித்துவிட்டதெனினும், போபால் வழக்கில் பா.ஜ.க. ஆட்சி யார் பக்கம் நின்றது என்பதற்கு இதுவுமொரு சான்று.

பா.ஜ.க. கூட்டணி அரசு போபால் குற்றவாளிகளுள் ஒருவரான கேஷூப் மஹிந்திராவிற்கு ''பத்ம'' விருது கொடுக்க முடிவெடுத்து, பின் பாதிக்கப்பட்டவர்கள் நடத்திய போராட்டங்களையடுத்து அம்முடிவைக் கைவிட்டது.

பா.ஜ.க.வின் விசுவாசம் என்றுமே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பக்கம்தான் என்பதற்கு யூனியன் கார்பைடு மட்டுமல்ல, என்ரான் விவகாரமும் நம் கண் முன்னே சாட்சியங்களாக உள்ளன.

● குப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா வல்லரசாகிறதா? வல்லரசுகளின் குப்பைத் தொட்டியாகிறதா?

மருத்துவக் கழிவுகள், அணுக் கழிவுகள்,

மின்னணுக் கழிவுகள், வெடிமருந்துக் கழிவுகள்,

நஞ்சு கக்கும் ஆலைகள்...

அனைத்தும் பாரதத் தாயின் வயிற்றில்...

வந்தே மாதரம்!

கடந்த 2005 ஆம் ஆண்டில், உ.பி. மாநிலத்திலுள்ள காசியாபாத் நகரிலுள்ள இரும்பு உருக்குத் தொழிற்சாலையில், இரும்பை அழுத்தி நசுக்கும்போது அது வெடித்துச் சிதறி பணியிலிருந்த பத்து தொழிலாளர்கள் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர். அந்த ஆலை, ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து மறுசுழற்சிக்கான உலோகங்களை இறக்குமதி செய்து அவற்றை நசுக்கி, உருக்கித் தகடாக்குகிறது. போர் நடக்கும் மேற்காசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெடிகுண்டுக் கழிவுகள் - போர்க்களத்தில் வெடித்த பிறகு கிடக்கும் குண்டுகள், ஏவுகணைகள், கவச வண்டிகளின் கழிவுகள் முதலானவை ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து ஏழை நாடுகளில் கொட்டப்பட்டு வருகின்றன. மறுசுழற்சிக்கான உலோகங்கள் என்ற பெயரில் கொட்டப்படும் இக்கழிவுகளை நசுக்கியபோதுதான், வெடிக்காத குண்டுகள் வெடித்து இக்கோர விபத்து ஏற்பட்டது.

இத்தகைய கழிவுகளை இறக்குமதி செய்வதை மேலை நாடுகள் தடைசெய்துள்ளன. ஆனால், இவை மறுசுழற்சிக்கான பொருட்கள் என்ற பெயரில் ஏழை நாடுகளில் இறக்குமதி செய்யப்படுகின்றன. போர் நடத்துவதும் ஆயுத வியாபாரம் செய்வதும் ஏகாதிபத்திய நாடுகள். ஆனால் வெடிகுண்டுக் கழிவுகளுக்கான குப்பைத் தொட்டியாகி விபத்துகளையும் விபரீதங்களையும் எதிர்கொள்வதோ ஏழை நாடுகள்.

பேசல் ஒப்பந்தப்படி, ஒரு நாட்டின் கழிவுகளை அந்நாட்டு எல்லைக்குள் மட்டுமே அழிக்க வேண்டும் என்றும், நச்சுக்கழிவுகளை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி - இறக்குமதி செய்யக் கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆஸ்பெஸ்டாசின் தீமைகளை உலகமே அறிந்துள்ளதால், பிரான்சு உள்ளிட்டு பல நாடுகளில் அது தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், ஆஸ்பெஸ்டாஸ் கழிவுகள் நிறைந்த பிரான்சு நாட்டின் கிளமென்சியே என்ற பழுதடைந்து செயலிழந்த கப்பல், இப்போது குஜராத்தின் அலாங் தளத்தில் உடைக்கப்படுவதற்காக நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதேபோல உடைக்கப்படுவதற்காக டென்மார்க்கிலிருந்து வந்த நச்சுக் கப்பலும், 1240 டன் அளவுக்கு கொடிய நச்சுக் கழிவுகளோடு ஆஸ்பெஸ்டாஸ், பாலி க்ளோரினேட் பைபினைல்ஸ் முதலான நச்சு இரசாயனப் பொருட்களுடன் பயணத்துக்குத் தகுதியற்றதென கைவிடப்பட்ட எஸ்.எஸ். நார்வே என்ற கப்பலும், ஆபத்தில்லாத கழிவுகள் கொண்டவையாக இந்திய ஆட்சியாளர்களால் சித்தரிக்கப்பட்டு அலாங் கப்பல் உடைப்புத் தளத்தில் உடைக்கப்படுகின்றன.

இத்தகைய நச்சுக் கழிவுகள் போதாதென்று, பாஸ்போ ஜிப்சம் என்ற அபாயகரமான கழிவுப் பொருள், கட்டுமானப் பணிகளுக்கானது என்ற பெயரில் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இதில் ரேடியம் 226 என்ற நச்சு வேதிப் பொருள் அடங்கியுள்ளது. இது கதிரியக்கத்தை ஏற்படுத்தி புற்றுநோயை உருவாக்கும் என்று உலக சுகாதார நிறுவனமும் அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கழகமும் அறிவித்துள்ளன. ஆனாலும், இக்கழிவுகள் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து தாராளமாக இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

பசுமை அமைதி இயக்கத்தின் அறிக்கையின்படி, ஓராண்டுக்கு 1,00,000 டன் நச்சுக் கழிவுகள் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகின்றன. உலகின் 101 நாடுகள் இவற்றைத் தடை செய்திருந்த போதிலும் இந்தியாவில் அவை தாராளமாகக் கொட்டப்படுகின்றன. 1996-லிருந்து 2002 வரை இந்தியாவில் கொட்டப்பட்ட பாதரசக் கழிவுகள் 6 மடங்கு அதிகரித்துள்ளது. ஜப்பானிய வல்லரசு 100,000 டன் பிளாஸ்டிக் கழிவுகளையும் 20,000 டன் அலுமினியக் கழிவுகளையும் கடந்த ஆண்டில் ஏழை நாடுகளுக்கு ஏற்று



படிப்பகம்

www.padippakam.com

மதி செய்துள்ளது என்று அந்நாட்டின் சுற்றுச்சூழல் வாதிகளே குற்றம் சாட்டுகின்றனர்.

இவை தவிர, ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து பல்லாயிரம் டன் மின்னணுக் கழிவுகள் இந்தியப் பெருநகரங்களில் கேள்விமுறையின்றிக் குவிகின்றன. பயன்படுத்தப்பட்ட கணினி, காலாவதியான டிவி, கணினி விசைப் பலகை, பழைய செல்போன்கள், லேசர் நகலெடுக்கும் சாதனங்கள், கணினி அச்சுக்கான மை, ஒயர்கள் என பெருமளவில் குவியும் இவற்றால் பாதரசம், காட்மியம், காரீயம் முதலான அபாயகரமான நச்சுப் பொருட்களும் குவிகின்றன. பல ஏழை நாட்டு மக்கள் இவை கழிவுகளா அல்லது மறுபயன்பாட்டுக்கான பொருட்களா என்றுகூடத் தெரியாமல் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

டெல்லியின் மாயாபுரி பகுதி இத்தகைய கழிவுகளால் நாசமாகிப் போயுள்ளது. வயிற்றுப் பிழைப்புக்காக இக்கழிவுகளைப் பிரித்தெடுக்கும் பணியில் ஈடுபடும் ஏழைகள் இனம்புரியாத நோய்களால் படிப்படியாகக் கொல்லப்பட்டு வருகிறார்கள். கடந்த ஏப்ரலில் டெல்லி-மாயாபுரியில் கோபால்ட் கதிரியக்கம் கொண்ட கழிவுப் பொருளாக வீசியெறியப்பட்ட மருத்துவ சாதனத்தை, ஒரு தொழிலாளி விவரம் தெரியாமல் உடைத்தபோது கதிரியக்கம் தாக்கி மாண்டுபோனார். ஏழு தொழிலாளிகள் மருத்துவமனையில் கிடத்தப்பட்டனர்.

மேலை நாடுகளில் கழிவுகளை அகற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ள பல நிறுவனங்கள் உள்ளன. அவை இக்கழிவுகளை ஏழை நாடுகளில்தான் கொட்டி வருகின்றன. கடந்த 2004-ஆம் ஆண்டில் சோமாலியாவை சுனாமி தாக்கியபோது, ஏற்கெனவே பல ஆண்டுகளாக இரகசியமாகக் கடலில் கொட்டப்பட்டிருந்த நச்சுக் கழிவுகள் மலைபோல கரை ஒதுங்கின.

சோமாலியா மட்டுமின்றி, நைஜீரியா, கினியா பிசாவ், ஜிபொடி, செனகல் முதலான பல ஆப்பிரிக்க ஏழை நாடுகளிலும் அணு உலைக் கழிவுகள் மட்டுமின்றி, கொடிய நச்சுக் கழிவுகளை ஏகாதிபத்திய நிறுவனங்கள் கொட்டி வருகின்றன. இந்நச்சுக் கழிவுகளை வெளியேற்றி செயலிழக்கச் செய்வதற்கு ஏகாதிபத்திய நிறுவனங்கள் பல்லாயிரம் கோடிகளைச் செலவிட வேண்டியிருப்பதால், அதைவிட மலிவான முறையில் இரகசியமாக ஏழை நாடுகளில் கொட்டும் நோக்கில் இந்நிறுவனங்கள் நச்சுக்கழிவு ஏற்றுமதியைச் செய்து வருகின்றன. தனியார்மயம்-தாராளமயத்தால் ஏழை நாடுகளின் அரசுகளது கட்டுப்பாடுகளும் கண்காணிப்புகளும் நீக்கப்பட்டுள்ளதால், இந்நச்சுக் கழிவு ஏற்றுமதி வியாபாரம் கொடிகட்டிப் பறக்கிறது. சாக்கடையையும் மலத்தையும் அள்ளவைத்து, தாழ்த்தப்பட்டோரை சேரிகளில் இருத்தி வைத்து தீண்டாமையை நிலைநாட்டுகிறது, பார்ப்பன இந்து மதம். ஏழை நாடுகளை நவீன சேரிகளாக்கி நவீன தீண்டாமையை நிலைநாட்டுகிறது, ஏகாதிபத்தியம்.

இந்த நச்சுக் கழிவுகள் தோற்றுவிக்கும் பயங்கரத்தைவிட, இப்போது பயன்பாட்டில் உள்ள பூச்சிக்கொல்லி மருந்துகள் பத்து மடங்கு நஞ்சானவை. ஏகாதிபத்திய நாடுகளின் பூச்சிக் கொல்லி மருந்து நிறுவனங்களின் ஏற்றுமதி 1961-இலிருந்து 2001 வரையிலான காலத்தில் 12 மடங்கு அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் ஏழை நாடுகளின் 2.5 கோடி விவசாயக் கூலிகள் பூச்சி மருந்துகளால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், இவர்களில் 20,000 பேர் மரணத்தைத் தழுவுகிறார்கள் என்றும் உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது. டி.டி.டி, என்ட்ரின், குளோர்டேன்,பாரத்தியான், அல்டிரின் முதலான பூச்சி மருந்துகளை 90-க்கும் மேற்பட்ட நாடுகள் தடைசெய்துள்ளன. ஆனால் அவை ஏழை நாடுகளில் இன்னமும் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன.



மறுசுழற்சிக்கான பொருட்கள் என்ற பெயரில் மேலை நாடுகளால் கொட்டப்படும் மின்னணுக் கழிவுகள்.

கோஸ்டரிகா, நிகரகுவா முதலான மத்திய அமெரிக்க நாடுகளில், டௌ கெமிகல்ஸின் டி.பி.சி.பி. என்ற பூச்சி மருந்தைத் தெளிக்கும் வேலையில் ஈடுபட்ட, ஸ்டாண்டர்டு ஃபுருட் நிறுவனத்தின் வாழைத்தோட்டத் தொழிலாளர்கள் மலட்டுத் தன்மைக்கு ஆளானார்கள். ஆனாலும் அந்தப் பூச்சி மருந்து வேறு பெயர்களில் ஏழை நாடுகளில் விற்பனை செய்யப்படுகிறது. கேரளத்தின் பாலக்



படிப்பகம்

www.padippakam.com

காடு மாவட்டம் பிளாச்சிமடாவிலுள்ள கோகோகோலா நிறுவனம் அப்பகுதியின் நிலத்தையும் நீரையும் நஞ்சாக்கியுள்ளதோடு, நச்சு இரசாயனங்கள் கலந்துள்ள தனது ஆலைக் கழிவுகளை உரம் என்று கூறி விவசாயிகளிடம் தடையின்றி விற்பனை செய்து வருகிறது. டௌ கெமிகல்ஸ் தயாரிக்கும் டர்ஸ்பன் என்ற பூச்சிக் கொல்லி மருந்து குழந்தைகளின் மூளையைத் தாக்கிச் செயலிழக்கச் செய்துவிடும் என்பதால், அது அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இன்னமும் அது இந்தியாவில் விளம்பரப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து விரட்டப்பட்ட - சுற்றுச்சூழலை நஞ்சாக்கும் பல இரசாயன ஆலைகளும், அங்கே அனுமதிக்கப்படாத தோல் பட்டறை - சாயப் பட்டறைகளும், யூனியன் கார்பைடு நச்சு ஆலையை விஞ்சும் கொலைகார டௌ கெமிகல்ஸ், ஸ்டெர்லைட் உள்ளிட்டு பலவகையான அபாயகரமான நச்சு ஆலைகளும், மக்களின் வாழ்வையும் வளத்தையும் பறிக்கும் சுரங்கங்களும் குவாரிகளும் அணு உலைகளும் இந்தியாவில் 'தொழில் வளர்ச்சி' என்ற பெயரில் தொடங்கப்படுகின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் தொழிற்பேட்டைகளும் நச்சுக் கழிவுக் கிடங்குகளாக மாறி நிற்கின்றன. எல்லா வகையான உணவு தானியப் பயிர்களுக்கான மரபணு மாற்ற ஆராய்ச்சிகளையும் களப் பரிசோதனகளையும் செயல்படுத்திப் பார்க்கும் சோதனைச்சாலை எலிகளாக இந்தியா உள்ளிட்டு ஏழை நாடுகளும் மக்களும் மாற்றப்பட்டுள்ளனர். பி.டி. பருத்தியிலிருந்து தொடங்கி, கடுகு, கத்தரிக்காய், சோளம் என அனைத்து மரபணு மாற்ற உணவு தானியப் பயிர்களும் இங்கு களப்பரிசோதனை செய்யப்படுகின்றன.

இந்திய மண் மட்டுமின்றி, ஏகாதிபத்திய மருந்துக் கம்பெனிகளால் மக்களும் சோதனைக்கூட எலிகளாக மாற்றப்பட்டுள்ளனர். திருவனந்தபுரத்தில் நோயாளிகளிடம் நடத்தப்பட்ட புற்றுநோய்க்கான புதிய மருத்துவ ஆராய்ச்சி, டெல்லியிலுள்ள அகில இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் (எய்ம்ஸ்) பச்சிளம் குழந்தைகளுக்கு ஏகாதிபத்திய மருந்துக் கம்பெனிகளின் புதியவகை மருந்துகளைக் கொடுத்து நடத்தப்பட்ட சோதனை, ஆந்திராவில் பில் கேட்சின் உதவியுடன் செயல்பட்டு வரும் மஞ்சள் காமாலை நோய் (ஹெப்பாடைடிஸ் பி) தடுப்பூசி சோதனை, ஆந்திராவின் கம்மம் மாவட்டத்தில் இளஞ் சிறுமிகளுக்கு கருப்பை புற்றுநோய் தடுப்பூசி போடப்பட்டு நடத்தப்பட்ட சோதனை - என எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஏகாதிபத்திய மருந்துக் கம்பெனிகளின் இலாபவெறிக்காக இந்திய மக்கள் சோதனைக்கூட எலிகளாக மாற்றப்பட்டு வருகின்றனர். இத்தகைய சோதனைகளில் மாண்டவர்கள் ஏராளம். சோதனைக்குப் பிறகு முடமாகிக் கிடப்பவர்களும் ஏராளம்.

யூனியன் கார்பைடு நிறுவனத்தின் பயங்கரவாத பேரழிவால் முடமாகிவிட்ட மக்களும், போபாலிலுள்ள அந்த நச்சு ஆலையின் கழிவுகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவரும் மக்களும், துயரத்தை நெஞ்சில் சுமந்து கொண்டு இன்றுவரை போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கோருவதெல்லாம் இனியும் இதுபோன்ற கொடூரங்கள் உலகில் எங்குமே நடக்கவே கூடாது என்பதுதான். ஆனால், இந்தியா உள்ளிட்டு பல ஏழை நாடுகளில் ஏகாதிபத்திய நிறுவனங்கள் தோற்றுவிக்கும் பயங்கரத்தால் இன்னும் பல -று போபால்கள் வெடிக்கக் காத்திருக்கின்றன.

நிலமும் நீரும் கடலும் காற்றும் வாழ்வும் வளமும் மட்டுமல்ல, இயற்கையின் உன்னதப் படைப்பான மனிதனும் ஏகாதிபத்தியங்களின் இலாபவெறிக்காக சூறையாடப்பட்டு வருகிறான். வேட்டுச் சத்தம் எதுவுமில்லாமல் இரகசியமாக ஒரு பயங்கரவாதப் போர் ஏழை நாடுகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இனி ஏழை நாடுகளும் மக்களும் சுதந்திரமாக உயிர் வாழ்வதற்கான ஒரே வழி, இலாபவெறிபிடித்த ஏகாதிபத்திய பயங்கரவாதிகளுக்கும் அவர்களின் அடியாட்களான ஏழை நாடுகளின் ஆளும் வர்க்கங்களுக்கும் எதிராக விடுதலைப் போரைத் தொடங்குவதுதான்! போபால் உணர்த்தும் படிப்பினையும் இதுதான்!

● குமார்



அலாங் கப்பல் உடைப்புத் தளம்: ஏகாதிபத்திய நச்சுக் கழிவுகளின் குப்பைத் தொட்டி.



படிப்பகம்

www.padippakam.com

## அமெரிக்கக் கடலில் கலந்த எண்ணெய் இந்தியக் காற்றில் கலந்த நஞ்சு

# பேரரசின் நீதி

மெக்சிகோ வளைகுடாவை மாசுபடுத்திய பிரிட்டிஷ் பெட்ரோலியத்தை "குரல்வளையில் மிதிப்பேன்" என்று சீறினார், ஒபாமா.
ஆண்டர்சன் பாதுகாப்பாக இருக்கிறார்–நியூயார்க்கில்.

**க**ண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல் கருப்பாகி நிற்கிறது. பெட்ரோலிய எண்ணெய் கடலெங்கும் விரவி, மெக்சிகோ வளைகுடாப் பகுதி முழுவதும் படர்ந்திருக்கிறது. கடற்பறவைகள் அந்த எண்ணெயின் பிசுபிசுப்பில் பறக்கமுடியாமல் மூச்சுத் திணறி கரையொதுங்கி செத்துக் கிடக்கின்றன. பலவகையான மீன்கள், திமிங்கிலங்கள், ஆமைகள் என கடல்வாழ் உயிரினங்கள் அனைத்தும் செத்து மிதக்கின்றன. கடந்த மூன்று மாத காலமாக இந்தப் பேரழிவு தொடர்கிறது.

மெக்சிகோ வளைகுடாவில் கடலுக்கடியில் கச்சா எண்ணெய் எடுத்து வருகிறது, பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனம். கடந்த ஏப்ரல் 20-ஆம் தேதியன்று கடலில் அமைந்துள்ள துரப்பண மேடையின் அடியில், 5000 அடி ஆழத்தில், குழாயில் ஏற்பட்ட வெடிப்பினால் 11 தொழிலாளிகள் மாண்டு போயினர். 17 பேர் படுகாயமடைந்தனர். இந்த வெடிப்பினால் எண்ணெயும் வாயுவும் பீறிட்டுக் கொட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு சராசரியாக 15 முதல் 25 இலட்சம் காலன் (ஒரு காலன் 3.8 லிட்டர்) வெளியேறிய எண்ணெய், அமெரிக்காவின் மூன்று பெரிய மாகாணங்களின் பரப்பளவுக்கு இணையான அளவு கடலில் தேங்கி நிற்கிறது .

இதை எப்படித் தூய்மைப்படுத்துவது, வெளியேறும் எண்ணெய் கசிவு எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பது பற்றி இன்னமும் தெரியவில்லை. இந்த எண்ணெய் கசிவினால், மெக்சிகோ வளைகுடாப் பகுதியில் மீன்பிடித் தொழிலும் படகுப் போக்குவரத்தும் வணிகமும் சுற்றுச்சூழலும் நிலைகுலைந்துள்ளன.

''பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனம் ஏற்படுத்திய மிகக் கொடிய சுற்றுச்சூழல் கேட்டிற்கும் பொருளாதார இழப்புக்கும் தண்டத் தொகைக்கு உச்சவரம்பு ஏதுமில்லை. மெக்சிகோ வளைகுடாவை மாசுபடுத்திய பிரிட்டிஷ் பெட்ரோலியத்தை குரல்வளையில் மிதிப்பேன்'' என்று சீறினார், அமெரிக்க அதிபர் ஒபாமா. பிரிட்டிஷ் பெட்ரோலிய நிறுவனம் எண்ணெய் கசிவு மூலம் சுற்றுச் சூழலை நாசப்படுத்திய குற்றத்துக்காக 2000 கோடி டாலர் தொகையும், விபத்தில் பலியான மற்றும் படுகாயமடைந்த தொழிலாளர்களுக்கும், அந்த நிறுவனத்தில் தற்போது வேலையிழந்துள்ள தொழிலாளர்களுக்கும் 10 கோடி டாலர் தொகையும் இழப்பீடாகத் தரவேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.


மெக்சிகோ வளைகுடாவில் பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனம் நடத்திய பேரழிவு: எண்ணெய் கசிவினால் மரணத்துடன் போராடும் கடல்வாழ் உயிரினங்கள்.

மெக்சிகோ வளைகுடாவில் குழாய் வெடித்து எண்ணெய்க் கசிவு ஏற்பட்ட போது மாண்டுபோன தொழிலாளர்கள் 11 பேர். ஆனால் போபாலில், அமெரிக்க யூனியன் கார்பைடு நிறுவனத்தால் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை



படிப்பகம்

www.padippakam.com

25,000-க்கும் மேல். மெக்சிகோவில் நடந்ததைவிட மிகக் கொடிய பேரழிவு போபாலில் நடந்துள்ளது. மெக்சிகோ விபத்துக்குக் கிடைத்த இழப்பீடு 2000 கோடி டாலர்கள். இன்னமும் பலரை முடமாக்கிக் கொண்டிருக்கும் போபால் நச்சுவாயுப் படுகொலைக்குக் கிடைத்த இழப்பீடும் நிவாரணமும் வெறும் வெறும் 47 கோடி டாலர்கள்தான்.

அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு நடந்தால், வழங்கப்படும் தீர்ப்பும் இழப்பீடு தொகையும் வேறு. இந்திய நீதிமன்றத்தில் அமெரிக்க நிறுவனத்துக்கு எதிராக வழக்கு நடந்தால், வழங்கப்படும் தீர்ப்பும் இழப்பீடும் வேறானது. இதுதான் அமெரிக்காவின் இரட்டை அணுகுமுறை. அமெரிக்காவில் நடந்தால் அது பேரழிவு. அதுவே இந்தியாவில் நடந்தால் சாதாரணமானதொரு ஆலை விபத்து. ஏனென்றால், அமெரிக்கா ஒரு வல்லரசு. இந்தியாவோ ஒரு ஏழை நாடு. ஏழை நாடுகளைப் பொருத்தவரை அமெரிக்காவின் அணுகுமுறை எப்போதுமே அலாதியானது.




''திருவாளர் ஒபாமாவே, நச்சுவாயுவினால் பாதிக்கப்பட்ட போபால் மக்களுக்கு எங்கே நீதி?''
-அமைதி இயக்கத்தினர் அமெரிக்காவில் நடத்திய காட்சி விளக்க ஆர்ப்பாட்டம்.

சுற்றுச்சூழலை நாசமாக்கிய இப்பேரழிவுக்கு பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனமும் அதன் தலைமை நிர்வாகியான டோனி ஹேவர்டும்தான் பொறுப்பு என்று குற்றம் சாட்டுகிறது, அமெரிக்க வல்லரசு. ஆனால், அதே அமெரிக்க வல்லரசு போபால் படுகொலைக்குக் காரணமான முதன்மைக் குற்றவாளியும் யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவருமான வாரன் ஆண்டர்சன் இதற்குப் பொறுப்பல்ல என்று கூறி, அவனைப் பாதுகாப்பாக இந்தியாவிலிருந்து அனுப்ப நிர்பந்தித்தது. எந்த நாட்டில் வேண்டுமானாலும் அத்துமீறி நுழைந்து பயங்கரவாதிகளைக் கைது செய்து கொண்டுவர அமெரிக்கப் போலீசுக்கு அதிகாரம் உண்டு என்று தீர்ப்பளிக்கிறது, அமெரிக்க நீதிமன்றம். ஆனால், பயங்கரவாதக் கிழவன் வாரன் ஆண்டர்சன் அமெரிக்காவில் உல்லாசமாக அமர்ந்திருக்க முடிகிறதே, அது எப்படி? ஏனென்றால், அமெரிக்கா என்பது ஒரு பேரரசு. அதன் நாகரிமும் நீதியும் அலாதியானது.

நைஜீரியாவில், பன்னாட்டு ஏகபோக எண்ணெய் நிறுவனமான ஷெல் நடத்திய சூறையாடலால் நைஜீரியாவின் ஒகோனி பிராந்தியத்தின் நிலமும் நீரும் நாசமாகி பேரழிவுகளும் மக்கள் கொத்துக் கொத்தாக மடிவதும் தொடர்ந்தது. ஷெல் மற்றும் பிற ஏகாதிபத்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு எதிராக எழுத்தாளரும் சுற்றுச்சூழலாளருமான கென் சாரோ விவா, ஒகோனி மக்களைத் திரட்டி அமைதி வழியில் போராடினார். நைஜீரிய இராணுவ சர்வாதிகார அரசும் ஷெல் நிறுவனமும் கைகோர்த்துக் கொண்டு அந்த இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்கி, சாரோவைக் கைது செய்து சிறையில் அடைத்து, 1995-ஆம் ஆண்டு நவம்பர் 10-ஆம் நாளன்று கென் சாரோ விவா உள்ளிட்ட ஒன்பது போராளிகளைத் தூக்கிலிட்டுக் கொன்றன.

இப்பயங்கரவாதத்தை எதிர்த்து பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் சுற்றுச்சூழல் இயக்கங்களும் ஷெல்லுக்கு எதிரான போராட்டத்தை அனைத்துலக அரங்கில் மேற்கொண்டன. பிரிட்டிஷ்- டச்சு பன்னாட்டு நிறுவனமாக இருந்தபோதிலும், ஷெல் நிறுவனத்தின் தலைமையகம் அமெரிக்காவில் இருப்பதால், அமெரிக்காவின் நியூயார்க் மாவட்ட சிறப்பு நீதிமன்றத்தில் ராயல் டச்சு ஷெல் நிறுவனத்துக்கு எதிராக ஒகோனி மக்கள் அனைவரின் சார்பாக தொடுக்கப்பட்ட வழக்கு, கடந்த 2009-ஆம் ஆண்டு மே மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஷெல் நிறுவனத்தின் கொலை குற்

**மெக்சிகோ வளைகுடா விபத்திற்குக் கிடைத்த இழப்பீடு 2000 கோடி டாலர்கள்; ஆனால், 20,000-க்கும் மேற்பட்ட ஏழை இந்திய மக்களைப் பலி கொண்ட போபால் படுகொலைக்குக் கிடைத்த இழப்பீடு வெறும் 47 கோடி டாலர்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

**அலாஸ்காவில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நீர்நாய்க்கும் வழங்கப்பட்ட இழப்பீடு 1000 டாலர். ஆனால், போபால் படுகொலையில் பாதிக்கப்பட்டோருக்கு கிடைத்த சராசரி இழப்பீடு 500 டாலர்தான்.**

றங்கள், இயற்கை வளங்களை அழித்து மாபெரும் சுற்றுச்சூழலை நாசமாக்கிய கொடுங்குற்றங்களுக்காகவும் அடிப்படை மனித உரிமைகளை மீறியதற்காகவும் ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் டாலர் இழப்பீடு தொகை அளிக்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. ஷெல் நிறுவனத்துக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மனித உரிமைகளைக் காத்து நிற்பதுபோல நாடகமாடிய அமெரிக்க வல்லரசு, போபாலில் மனிதநேயத்தையும் மனித உரிமைகளையும் தனது இரும்புக் கால்களில் போட்டு நசுக்கியது.

போபால் படுகொலையை நடத்திய யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைமையகமும் அமெரிக்காவில் தான் இருக்கிறது. அன்று அமெரிக்காவில், போபால் வழக்கை அமெரிக்காவில் வைத்து விசாரிக்க முடியாது என்று வழக்கை இந்தியாவுக்கு மாற்றுமாறு 1986-இல் தீர்ப்பு வழங்கினார், அமெரிக்க நீதிபதி ஜான் கீனன். ''இந்த பூச்சிக் கொல்லி தொழிற்சாலை மிகுந்த ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்பதை இந்தியா உணர்ந்திருந்தும், இது கொடுக்கும் வருவாய் அவர்களுக்குத் தேவையானதாக இருந்ததாலேயே, அவர்கள் இந்த ஆலையை இந்தியாவில் நிறுவ ஒப்புக் கொண்டனர்'' என்றார் அந்த நீதிபதி. அதாவது ஏழை நாடான இந்தியா, ஒரு வல்லரசின் ஆபத்தான நச்சு ஆலையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் பட்சத்தில், அந்த நச்சு ஆலை ஏற்படுத்தும் ஆபத்துகளுக்கும் இழப்புகளுக்கும் இந்தியாவே பொறுப்பாகும் என்பதுதான் அவரது தீர்ப்பில் தெரிவித்துள்ள கருத்து.

பத்தாண்டுகளுக்கு முன்பு டபிள்யூ.ஆர்.கிரேஸ் என்ற அமெரிக்க நிறுவனம், பாஸ்டன் அருகே வோபர்ன் என்ற சிறுநகரத்தில் டிரைகுளோரோ எத்திலின் என்ற நச்சுக் கழிவைக் கொட்டி அதனால் குடிநீர் நஞ்சாகி பலர் பாதிக்கப்பட்டனர். இதற்கு அந்நிறுவனம் அளித்த இழப்பீடானது, போபால் படுகொலைக்கு வழங்கப்பட்ட இழப்பீடை விட பல மடங்கு அதிகம். இதேபோல ஆஸ்பெஸ்டாஸ் பயன்பாட்டினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக அமெரிக்க ஆலை நிர்வாகங்கள் அளித்துள்ள இழப்பீடுகளும் போபால் பேரழிவுக்கு வழங்கப்பட்டதை விட மிக அதிகம். அமெரிக்காவில் இதே யூனியன் கார்பைடு நிறுவனம், தனது ஊழியர்கள் நச்சுத்தன்மை கொண்ட வேதியல் பொருட்களால் பாதிக்கப்பட்ட போது இரண்டாயிரத்து இரு-று கோடி டாலர்கள் இழப்பீட்டுத் தொகை அளித்தது. அங்கே உயிர்ச் சேதமோ, போபாலில் நடந்ததைப் போன்ற பேரழிவோ இல்லை. ஏன் இந்த இரட்டை அணுகுமுறை? ஏனென்றால், இந்தியா ஒரு ஏழை நாடு. அதனால் இந்திய உயிர்கள் அவ்வளவு கேவலமானதாகிவிட்டது.

இதுவொருபுறமிருக்க, 1989-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் எக்சான் எண்ணெய் நிறுவனத்தின் கப்பல் விபத்துக்குள்ளாகி, அலாஸ்கா அருகே கடலில் 10 மில்லியன் காலன் அளவுக்கு எண்ணெய் சிந்தி அப்பகுதியின் சுற்றுச்சூழல் நாசமாகியது. அந்த விபத்தில் யாரும் உயிரிழக்கவில்லை. எனினும் மீன்கள் செத்து மிதந்தன, நீர்நாய்களும் பறவைகளும் பாதிக்கப்பட்டன. கடந்த 2008-ஆம் ஆண்டில் இந்த விபத்துக்கு இழப்பீடாக 50 கோடி டாலர்களை எக்சான் வழங்கியது. இந்தக் கணக்கின்படி பார்த்தால், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நீர்நாய்க்கும் ஏறத்தாழ 1000 டாலர் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால் போபால் நச்சுவாயுவால், வாழ்க்கை முழுவதும் ஊனமாகிவிட்ட ஏழை இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடுத் தொகை, ஒவ்வொருவருக்கும் 500 டாலர்கள்தான். இந்திய ஏழைகள் அமெரிக்க நீர்நாய்களைவிடக் கேவலமாகிவிட்டார்கள்.

ஏழைநாடான - அடிமை நாடான இந்தியா, அமெரிக்கா அல்ல என்பதுதான் இதற்குக் காரணம். இதுதான் பேரரசின் நீதி! இதுதான் ஏகாதிபத்திய உலகின் நாகரிகம்!

● மனோகரன்




ஷெல் நிறுவனத்தின் பயங்கரவாதத்துக்கு எதிராக நைஜீரிய மக்கள் அமெரிக்காவில் நடத்திய ஆர்ப்பாட்டம். (உள்படம்) தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட போராளி கென் சாரோ விவோ. (கோப்புப் படம்)



படிப்பகம்

www.padippakam.com

# பெரும் தொழிற்கழகங்களின் திருவிளையாடல்கள்

**-பி.சாய்நாத்**

**மீண்டும் இப்படிப்பட்ட கொடுமை நிகழக்கூடாது என்பதை நாம் உறுதி செய்யவேண்டும் என்கிறார்கள் பாதிக்கப்பட்ட போபால் மக்கள். எனினும், அதற்கு நேர் எதிரானதையே நாம் உறுதிப்படுத்தி வருவதாகத் தோன்றுகிறது.**

இருபதாயிரத்துக்கும் மேலானோர் கொலை; ஐந்து லட்சத்துக்கும் மேலானோர் முடமாக்கப்பட்டனர், பல வகைகளில் பாதிக் கப்பட்டனர். வழங்கப்பட்ட இழப்பீடு 1989-ஆம் ஆண்டின் ரூபாய் மதிப்பில் தலைக்கு வெறும் 12,414 ரூபாய்கள் மட்டுமே. யூனியன் கார்பைடின் இந்தியத் துணை நிறுவனத்தில் பணியாற்றிய முன்னாள் அதிகாரிகள் ஏழு பேருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் தலா ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக் கப்படுவதைப் பார்ப்பதற்குத்தான் கால் -ற் றாண்டு காத்திருந்தோமா? ஆகப்பெரும் பொறுப்பாளியான அமெரிக்கத் தலைமை நிறு வனத்தின் ஒரு அதிகாரி கூடத் தண்டிக்கப்பட வில்லை.




''குற்றவாளி! குற்றவாளி!''-என்ரான் நிறுவனம் நடத்திய மோசடிகளை அம்பலப்படுத்தும் பத்திரிகைச் செய்தி. (கோப்புப் படம்)

இருப்பினும், வாரன் ஆண்டர்சனை அமெ ரிக்காவில் இருந்து இந்தியா கொணரத் தவறி யதுதான் போபாலுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி என்பதாகக் கருதுவது கொஞ்சம் கேலிக்குரியதாக இருக்கிறது. பகாசுரத் தொழிற் கழகங்களின் கொடுங்கோன்மையை அப்பட் டமாய் வெளிக்காட்டிய 1984 போபால் விஷ வாயுப் பேரழிவிலிருந்து படிப்பினை பெறு வதைத் தவிர்க்கும் முயற்சி அப்படித்தான் இருக்கிறது. இந்நிறுவனத்தின் மெத்தில் ஐசோ சயனேட் வாயு 20,000 மக்களை (பெரும்பாலும் பரம ஏழைகள்) படுகொலை செய்து 20 ஆண்டு களுக்கு மேல் உருண்டோடிவிட்டன. இந் நிலையில், அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்திய அரசின் அணுசக்தி விபத்து இழப் பீட்டு மசோதா நிறைவேற்றப்படுமானால், அது நாடெங்கிலும் இவ்வாறான குற்ற நடவடிக்கை களுக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்குவதாகவே அமையும்.

படுபயங்கரமான புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைப் போபால் குறித்துக் காட்டி யது. தொழிற்கழகங்களின் மிருக பலத்தைத் தடுக்கும் சக்திகள் நொறுங்கிச் சுக்கலாகிப் போனதை வெளிச்சமிட்டது இந்த நிகழ்வு. மெக்சிகோ வளைகுடாவில் நடைபெறும் பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்தின் துரப் பணப் பணியில் ஏராளமான எண் ணைக் கசிவு ஏற்பட்டுவருகிறது - ஒரு நாளைக்கு 30,000 முதல் 80,000 பேரல்கள் அளவுக்கு எண்ணை கடலில் கசிவதாக மதிப்பிடப்படு கிறது.

பிரிட்டிஷ் பெட்ரோலியத் தின் மீதான பாரக் ஒபாமாவின் 'கடுஞ்சொற்கள்' எல்லாம் நவம் பருக்கு முந்திய தேர்தல் சவடால் களேயன்றி வேறல்ல. கடந்த இரண்டு ஆண்டுகளில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் வழங்கிய இரண்டு தீர்ப்புகளிலிருந்து பிரிட்டிஷ் பெட் ரோலியம் இளைப்பாறுதல் பெறலாம்.

இத் தீர்ப்புகளில் முதலாவது 2008-இல் வழங்கப்பட்டது. எக்சான் வேலிஸ் எண்ணெய் நிறுவனம் 1989



படிப்பகம்

www.padippakam.com

-இல் நிகழ்த்திய வரலாறு காணாத எண்ணைக் கசிவு பற்றிய வழக்கில் வந்த தீர்ப்பு அது. எளிமையாகச் சொன்னால், இன்று பிரிட்டிஷ் பெட்ரோலியம் எக்சான் வேலிஸுக்கு நிகரான கசிவை எட்டு நாட்களுக்கு ஒரு முறை (ஏப்ரல் மாதம் முதல்) நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. எக்சான் வழக்கில் அந்த நிறுவனத்தின் மீது 5 பில்லியன் டாலர்கள் அபராதத் தொகை விதித்து 1994-இல் ஜூரிகள் தீர்ப்பு வழங்கினர். மேல் முறையீட்டு நீதிமன்றம் 2006-ஆம் ஆண்டில் அந்த அபராதத் தொகையை 2.5 பில்லியன் டாலர்கள் என்று பாதியாகக் குறைத்தது. ஜூன் 2008-இல், அமெரிக்க உச்ச நீதிமன்றமோ அபராதத் தொகையை வெறும் 500 மில்லியன் டாலர்களாக (மேலும் 80%) குறைத்தது.''பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கப்போவது தலா 15000 டாலர்கள் மட்டுமே'' என்று குறிப்பிடுகிறார், ஷரோன் ஸ்மித் (counterpunch.org). இந்த அபராத வழக்கை விடாப்பிடியாக நடத்திய எக்சான் நிறுவனத் தலைமை இயக்குனர் லீ ரேமாண்ட் மொத்தமாக 400 மில்லியன் டாலர்களைத் தனக்காக மட்டும் பெற்றுக் கொண்டு பணிஓய்வு பெற்றார். நாங்கள் 33,000 பேர் பகிர்ந்து கொள்ளும் தொகையை ஸ்மித் மட்டுமே சுருட்டிக் கொண்டு போய் விட்டார் என எக்சான் நிறுவனத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மிதந்து கொண்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பின் மூலமாக தொழிற்கழகங்கள் நேரடியாகவே ஏராளமான பணத்தைக் கொட்ட முடியும்... உள்ளூர், மாநில, தேசிய அளவுகளிலான தேர்தல்களில் நிற்கும் எந்த நபரையும் இனி இவர்கள் விலைக்கு வாங்கவோ, மிரட்டிப் பணிய வைக்கவோ முடியும்'' என்கிறார் ரால்ப் நடார். ''இத்தீர்ப்பின் பின்னால் இருக்கும் கருத்து என்னவெனில், தொழிற்கழகம் என்பது ஒரு மனிதனுக்கு உரிய எல்லா உரிமைகளும் கொண்ட (ஆனால், எவ்விதக் கடமைகளும் இல்லாத) ஒரு 'சட்டவகை மனிதன்'; எனவே, அது பேச்சுரிமையைப் பெற்றுள்ளது; நன்கொடை என்பது பேச்சு சுதந்திரத்தின் ஒரு வடிவமே'' என்று ''கவுண்டர்பஞ்ச்'' எனும் இணையதள செய்திக் கடிதத்தில் மேசன் ஜாஃப்னி அமெரிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் பொருளை விளக்குகிறார்.

அப்புறம் என்ன, துவளாதே பிரிட்டிஷ் பெட்ரோலியமே, துடித்தெழு!... வாய்ப்புகள் ஒன்றும் கைநழுவி விடவில்லை. அமெரிக்க காங்கிரஸ் மற்றும் செனட் நாற்காலிகளை அலங்கரிப்பவர்களில் எத்தனை பேர் பெரும் எண்ணைக் குழுமங்களின் பணமூட்டைகளைப் பெற்றவர்கள் தெரியுமா, அது மறந்துவிட்டதா என்ன?

**படுபயங்கரமான புதிய சகாப்தத்தின் தொடக்கத்தை போபால் குறித்துக் காட்டியது. தொழிற்கழகங்களின் மிருக பலத்தைத் தடுக்கும் சக்திகள் நொறுங்கிச் சுக்கலாகிப் போனதை வெளிச்சமிட்டது, இந்த நிகழ்வு.**

அதே ஆண்டு செப்டம்பர் மாதம் வால் ஸ்டிரீட் மூலதனச் சந்தை சூதாடிகள் உலகப் பொருளாதாரத்தையே நிலைகுத்தச் செய்தனர். அவர்களது செயல் பல மில்லியன் அமெரிக்கர்கள் மற்றும் உலக மக்களின் வேலைக்கும், வாழ்வாதாரத்துக்கும் உலை வைத்தது. எனினும், அதே ஆண்டிலேயே அமெரிக்கத் தலைமை இயக்குனர்கள் பலர் போனசாகப் பல -று கோடி டாலர்களை அள்ளிச் சென்றனர். (அதே தேர்தல் ஆண்டில் தான், ''தோண்டு கண்ணா, தோண்டு'' என்ற குத்தாட்ட முழக்கத்துடன் ஆழ்கடல் எண்ணைத் துரப்பண நடவடிக்கைக்கு ஆதரவு திரட்டின பன்னாட்டு எண்ணெய்க் குழுமங்கள். இப்போது என்ன சொல்வது? ''கசியட்டும் கண்ணு, கசியட்டும்... கடலே கூவமாகட்டும்'' என்பதா?)

இவ்வாண்டு, பிரிட்டிஷ் பெட்ரோலியம் மெக்சிகோ வளைகுடாவையே குழம்பிய குட்டையாக்குவதற்கு மூன்றே மாதங்களுக்கு முன்னர்தான், அமெரிக்க உச்ச நீதிமன்றம் சிடிசன்ஸ் யுனைடட்-க்கும் தேசிய தேர்தல் ஆணையத்துக்கும் இடையிலான வழக்கில் அளித்த தீர்ப்பின் மூலம் தொழிற்கழகங்களின் வலிமைக்கு மேலும் வலிமை சேர்த்தது. ''ஏற்கெனவே வெள்ளமெனப் பாயும் கார்ப்பரேட் பணத்தில் தேர்தல் களம்

பிரிட்டிஷ் பெட்ரோலியத்தின் எண்ணைக் கசிவுப் பிரச்சினையில் கவனம் செலுத்துகின்ற இந்த தருணத்தில், இவ்வாறான பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட அமெரிக்கர்களும் வெள்ளைத் தோல் மனிதர்களும் அல்லாத பிற மக்களைப் பற்றியும் சிறிது சிந்தித்துப் பார்க்கலாமே. ''அயலுறவுக் கொள்கை பற்றிய பார்வை'' (Foreign Policy in Focus ) என்ற இதழின் கட்டுரையாளர் கான் ஹல்லினன், ''நைஜீரிய அரசின் புள்ளிவிவரப்படி 1970-ஆம் ஆண்டுக்கும் 2000-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 9000-க்கும் மேலான எண்ணைக் கசிவுகள் அங்கு நிகழ்ந்துள்ளன. தற்போது எண்ணைய் கசிவுப் பகுதிகள் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டவையின் எண்ணிக்கை 2000'' என்று கூறுகிறார். கிடக்கட்டும்; ஆப்பிரிக்க உயிர்கள் அத்தனை மதிப்பு வாய்ந்தவையா என்ன?

போபால் பேரழிவு நிகழ்ந்து ஏழாண்டுகளுக்குப் பின்னர் உலக வங்கியின் தலைமைப் பொருளியலாளர் லாரி சம்மர்ஸ் கொடூரமானதொரு குறிப்பை எழுதினார். அக்குறிப்பில், ''விசயம் நமக்குள்ளே இருக்கட்டும். இந்த அசிங்கம் பிடிச்ச தொழிற்துறைகளையெல்லாம் பின்தங்கிய நாடுகளுக்குத் தள்ளி விடுவதற்கு உலக வங்கி மேலும் கொஞ்சம் ஊக்கம் அளிக்கக் கூடாதா?''



படிப்பகம்

www.padippakam.com

என்று கருத்தை எழுதியிருந்தார். ''கூலி விகிதங்கள் மிகவும் குறைவாயுள்ள ஏழை நாடுகளில் அபாயகரமான நச்சுக் கழிவுகளை கொண்டுபோய் கொட்டுவதுதான் பொருளாதாரக் கணக்கீடுகளின்படி புத்திசாலித்தனமானது என்றும், இந்த உண்மையை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்'' என்றும் சம்மர்ஸ் பரிந்துரை செய்திருந்தார்.

விசயம் வெளியே வந்தவுடன், சும்மா கிண்டலுக்காகத்தான் அப்படி எழுதியதாகக் கூறி அவர் சமாளிக்க முயன்றார். ஆனால், அதை நம்புவதற்கு யாரும் தயாராக இல்லை. பின்னாளில் அவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் தலைவர் ஆனார்; இன்று, அதிபர் ஒபாமாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அவர்தான். அன்று அவர் எழுதிய குறிப்பின் சாரம்தான் உலகின் எதார்த்தமாக இருக்கிறது. போபால் நிகழ்வு முதல் இந்தக் கணம் வரை துல்லியமாக இதுதான் நடந்து வருகிறது.



கணக்கு வழக்குகளில் மோசடி செய்த குற்றத்திற்காகக் கைது செய்யப்படும் சத்யம் கம்ப்யூட்டர்ஸ் நிறுவன அதிபர் ராமலிங்க ராஜு. (கோப்புப் படம்)

போபால் தீர்ப்புக்கு ஐ.மு. கூட்டணி அரசு காட்டியுள்ள எதிர்வினையைக் காணும்போது, இந்த அரசாங்கத்தின் யோக்கியதை 1984-இல் எப்படி கேடுகெட்டதாக இருந்ததோ, அதிலிருந்து சற்றும் மாறுபட்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. போபாலுக்கு அழுவதும் அணுசக்தி விபத்து இழப்பீட்டு மசோதாவை சட்டமாக்கத் துடிப்பதும் ஒத்துப்போகவே முடியாத இரட்டை வேடங்கள். போபாலில் பேரழிவுக்குப் பின்னர் பாதிக்கப்பட்டோரின் நியாயம் விலை பேசப்பட்டது. அணுசக்தி விபத்து இழப்பீட்டு மசோதாவோ அரசாங்கத்தால் செய்யப்படும் முன்பேர விற்பனை. 1984 போபால் பேரழிவு தொடர்பான உண்மைகளை மறைப்பவை அரசாங்கங்கள் மட்டுமா?

பேரழிவு நடந்த அந்த நாட்களிலேயே, ''தொழிலாளிகள் வேண்டுமென்றே நடத்திய சதிவேலை விளைவாகத்தான் இப்பேரழிவு நிகழ்ந்து விட்டது'' என்று யூனியன் கார்பைடு நிர்வாகம் திட்டமிட்டே அவிழ்த்து விட்ட பொய்க்கதைகளை பல செய்தித்தாள்கள் மகிழ்ச்சியுடன் பிரசுரித்தன. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், யூனியன் கார்பைடு நிறுவனத்திடம் காசு வாங்கிக்கொண்டு நடத்தப்பட்ட ஒரு 'ஆய்வு', அதிருப்தியுற்ற ஒரு தொழிலாளியின் நடவடிக்கைதான் இந்தப் பேரழிவைத் தோற்றுவித்ததாக நிரூபிக்க முயன்றது. கார்பைடு நிறுவனமும் தனக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாதபடி உத்திரவாதப்படுத்திக் கொண்டது. இந்த வழக்கை நடத்துவதற்குச் சரியான இடம் இந்திய நீதிமன்றங்களே என்று நானி பல்கிவாலா உள்ளிட்ட இந்தியாவின் சட்ட மேதைகள் சிலர் அமெரிக்க நீதிமன்றங்களை ஏற்கச் செய்தனர். அமெரிக்க நீதிமன்றங்கள் விதித்திருக்கக் கூடிய ஒப்பீட்டளவில் கூடுதலான இழப்பீட்டுத் தொகையிலிருந்தும் கார்பைடு நிறுவனத்தை இத்தகைய செயல்கள் விடுவித்தன.

அடுத்த பத்தாண்டுகளிலேயே, தாராளமயம் என்ற புதிய சகாப்தத்தின் குறியீடாக என்ரான் பரிணமித்தது. இந்த என்ரான் கும்பலைப் பரிசுத்தவான்களாகக் காட்டுவதற்கு பெரும் கல்வியாளர்களும் 'வல்லுனர்களும்', கட்டுரையாளர்களும் கடுமையாக உழைத்தனர். என்ரான் ஒப்பந்தம் பற்றி துவக்கத்திலேயே எழுந்த கடும் விமர்சனங்களுக்குப் பின்னர்தான் இவையெல்லாம் நடந்தன என்பதைச் சொல்லத் தேவையில்லை.

இந்தியாவில் பொதுக் கருத்தை உருவாக்குவோர், சட்டம் இயற்றுவோர் போன்றவர்களுக்குக் ''கற்பிப்பதற்கு'' என்ரான் நிறுவனம் இறக்கிவிட்ட பல மில்லியன் டாலர் பணம்தான், இவர்களுக்கெல்லாம் இதய மாற்று அறுவை சிகிச்சையை முடித்து, மன மாற்றத்தை ஏற்படுத்தியது போலும். பத்திரிகைகளுக்கு விளம்பரங்களும் தாராளமாக அள்ளி வழங்கப்பட்டன. என்ரான் பற்றி மிகக் கடுமையாக விமரிசித்து எழுதிவந்த ஒரு பிரபல பத்திரிகை திடீரென்று கட்சி தாவி, அதன் தீவிர துதிபாடியாக மாறியது. மேலும் பலரும் இவ்வாறே செய்தனர். பிரம்மாண்டமான தொகைகள் எக்கச்சக்கமாகக் கற்றுக் கொடுக்கும் போலும்!

**''ஏழை நாடுகளில் அபாயகரமான நச்சுக் கழிவுகளைக் கொண்டுபோய் கொட்டுவதுதான் பொருளாதாரக் கணக்கீடுகளின்படி புத்திசாலித்தனமானது.''**
**– லாரி சம்மர்ஸ், ஒபாமாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகர்.**



படிப்பகம்

www.padippakam.com

**போபாலில் பேரழிவுக்குப் பின்னர் பாதிக்கப்பட்டோரின் நியாயம் விலை பேசப்பட்டது. அணுசக்தி விபத்து இழப்பீட்டு மசோதாவோ அரசாங்கத்தால் செய்யப்படும் முன்பே விற்பனை.**

ஆனால், மகாராஷ்டிரத்துக்கும் இந்தியாவுக்கும் அது பேரழிவைக் கொண்டுவந்தது. முன்பு லாபகரமாக இயங்கிய அம்மாநிலத்தின் மின்வாரியம் - என்ரான் வருகைக்குப் பின் - கோடிக்கணக்கில் நட்டத்தைக் குவித்தது. அதன் விளைவாக, மக்களுக்கான சேவைகள் மற்றும் நலத் திட்டங்களுக்கான நிதியை அம்மாநில அரசு, தாறுமாறாகக் குறைத்தது. மோசடியின் திருவுருவமான என்ரான் நிறுவனம் தனது ஊழல் நடவடிக்கையால் அமெரிக்காவில் வீழ்ச்சியுற்றது. அதன் தலைமையில் இருந்த சிலர் சட்டத்திடமிருந்து தப்பித் தலைமறைவாயினர். ஆனால், அந்நிறுவனம் ஏற்படுத்திய குளறுபடிகள் மட்டும் இன்றளவும் நம்மை வதைக்கின்றன. சி.ஐ.டி.யு.வும் அபய் மேத்தாவும் தாக்கல் செய்த என்ரான் ஒப்பந்தத்துக்கு எதிரான மனுவை உச்ச நீதிமன்றம் தூக்கி வீசியதன் காரணமாக, இந்தப் பேரழிவில் இருந்து தப்புவதற்கு இருந்த ஒரே வாய்ப்பும் தொலைந்துவிட்டது. இதுதான் கதை.

நிற்க. ஒபாமாவின் சவடால்கள் பிரிட்டிஷ் சகபாடிகளின் உணர்வுகளைப் புண்படுத்திவிட்டது போல் தெரிகிறது. அமெரிக்கா கடந்த காலங்களில் பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு நிதியும், ஆதரவும் நல்கி பேருதவி புரிந்திருக்கிறது என்பதே உண்மை.

''வரலாற்றின் மாபெரும் கைதூக்கிவிடல்'' என்று அலெக்சாண்டர் காக்பர்ன் சித்தரிக்கும் நிகழ்வில், 1953-ஆம் ஆண்டு கேவலமான சதிவேலை மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி, ஈரானின் முகமது மொசாதே அரசை அகற்றியது, அமெரிக்க சி.ஐ.ஏ. நாட்டைக் கடுமையாகச் சுரண்டி வந்த ஆங்கிலோ-ஈரானியன் ஆயில் கம்பெனியை தேசவுடைமை ஆக்குவது என்று இரானிய நாடாளுமன்றம் ஒருமனதாக முடிவு செய்ததால் மொசாதேயின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அவரது இடத்தில் மேலை நாட்டு எண்ணைக் கம்பெனிகளின் வளர்ப்புப் பிராணியான ஷா ரிசா பஹல்வி சர்வாதிகாரியாக அமர்த்தப்பட்டார். ஆங்கிலோ-ஈரானியன் ஆயில் கம்பெனி தனது பழைய சலுகைகளில் நாற்பது சதவீதத்தை மீளப் பெற்றது. பிரிட்டிஷ் பெட்ரோலியம் என்ற பெயர் மாற்றத்துடன் சர்வதேசக் குழுமம் ஆனது. பன்னாட்டுத் தொழிற்கழகங்களால் மூன்றாம் உலக நாடுகளில் நிகழ்த்தப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புகளைப் பட்டியலிட்டால் பல -ல்கள் எழுத வேண்டியிருக்கும்.

யூனியன் கார்பைடு போபாலில் செய்ததும், தண்டனையே இல்லாமல் தப்பியதும் அதிர்ச்சி அளிக்கத்தான் செய்கிறது. ஆனால், நிச்சயமாக வியப்பளிக்கவில்லை. அதற்குப் பிந்திய கால் -ற்றாண்டு காலத்திலும் தொழிற்கழகங்களின் அதிகார வலிமை கணிசமாக உயர்ந்தே வந்திருக்கிறது. தொழிற்கழகங்களைச் சமுதாயத்திற்கு மேலானதாகவும், தனியார் இலாபத்தை பொது நலனுக்கு மேலானதாகவும் மதித்து சமூகம் சலுகை வழங்குகின்ற வரை போபால்கள் பல தொடரத்தான் செய்யும்.

போபாலில் பாதிக்கப்பட்ட மக்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தும் ஒரு முக்கியமான விசயத்தையும் நினைவில் நிறுத்துங்கள். ''மீண்டும் இப்படிப்பட்ட கொடுமை நிகழக்கூடாது என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்'' என்கிறார்கள் அம்மக்கள். எனினும், அதற்கு நேர் எதிரானதையே நாம் உறுதிப்படுத்தி வருவதாகத் தோன்றுகிறது. எதிர்காலத்தில் இந்திய மண்ணில் அணு உலை விபத்து நிகழக் காரணமாக இருக்கப்போகும் எந்த ஒரு அமெரிக்க நிறுவனமும், அற்பத் தொகையை இழப்பீடாக எடுத்து வீசிவிட்டு, தப்பிச் செல்வதற்கான வாய்ப்பை தற்போதைய அணுசக்தி விபத்து இழப்பீட்டு மசோதா வழங்குகிறது.

போபாலில் வழங்கப்பட்ட இழப்பீட்டை தற்போது நாம் ஒரு குற்றம் என்று கருதுகிறோம். இம்மசோதா நிறைவேறிவிட்டால் எதிர்காலத்தில் இதுதான் இழப்பீடுகள் தொடர்பான சட்டபூர்வமான அளவுகோலாகவே இருக்கும்.

லாரி சம்மர்ஸ் அவர்களே, மீண்டும் வருக; உங்கள் வரவு நல்வரவாகட்டும்!

(ஜூன் 15, 2010 - ''தி இந்து'' நாளேட்டில் பி.சாய்நாத் எழுதிய கட்டுரையின் சுருக்கப்பட்ட தமிழாக்கம்)



''வால் ஸ்ட்ரீட்'' பங்குச் சந்தை முதலாளிகளுக்கும், ஆயுத வியாபாரிகளுக்கும் பொதுப்பணத்தை வாரியிறைக்காதே என முழங்கி அமெரிக்க மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



படிப்பகம்

www.padippakam.com

# டௌ கெமிக்கல்ஸ்:

# பன்னாட்டு கொலைத் தொழிற்கழகம்

**ரத்தக் கவிச்சி வீசும் யூனியன் கார்பைடு நிறுவனத்தைக் கையகப்படுத்தியிருக்கும் டௌ கெமிக்கல்ஸ் யார்? வியத்நாமில் வீசப்பட்ட நாபாம் குண்டுகள், இட்லரின் விசவாயு, சதாமின் இரசாயன ஆயுதங்கள் அனைத்தும் இந்த அமெரிக்க நிறுவனத்தின் தயாரிப்புகள்தான்.**

**வி**யத்நாம் மீது நடத்திய ஆக்கிரமிப்புப் போரில் கம்யூனிஸ்டு கொரில்லாப் படையை எதிர்கொள்ள இயலாததால், ஏஜென்ட் ஆரஞ்சு என்ற கொடிய இரசாயனத்தை 210 இலட்சம் காலன் அளவிற்கு விமானப்படை மூலம் காடுகள் மீது பொழிந்து, அனைத்தையும் கருக்கிப் பொட்டலாக்கியது, அமெரிக்க இராணுவம். கடுமையான நச்சுப்பொருளான ஏஜெண்ட் ஆரஞ்சுடன், டையாக்சின் என்ற ஆகக் கொடிய நஞ்சையும் கலந்து அமெரிக்க இராணுவத்துக்கு வழங்கிய நிறுவனங்களில் முக்கியமானது டௌ கெமிக்கல்ஸ். 48 இலட்சம் வியத்நாம் மக்கள் அந்த நஞ்சால் பாதிக்கப்பட்டனர். 5 இலட்சம் குழந்தைகள் உடல் ஊனத்துடன் பிறந்தன. விமானத்திலிருந்து இதனைத் தெளித்த அமெரிக்க சிப்பாய்களும் கடுமையான நோய்களுக்கு ஆளாயினர். 1984-இல் இவர்களுக்கு 18 கோடி டாலர் இழப்பீடு வழங்க உத்தரவிட்டது, அமெரிக்க நீதிமன்றம். அதேநேரத்தில், ஏஜெண்டு ஆரஞ்சால் பாதிக்கப்பட்ட வியத்நாம் மக்கள் அமெரிக்க நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை எதிர்த்து நிவாரணம் தரமுடியாதென்று மறுத்துக் கொண்டிருக்கிறது, டௌ கெமிக்கல்ஸ்.

**ஜெ**ல்லியைப் போல கொழகொழப்பானதும் தோலில் பட்டவுடன் தீயாய் எரியக் கூடியதுமான நாபாம் குண்டுகளும்கூட டௌ கெமிக்கல்ஸின் கண்டுபிடிப்புதான். வியத்நாமில் வீசப்பட்ட இந்த குண்டைத் தயாரித்த டௌ நிறுவனத்தை சிலாகித்து, ஒரு அமெரிக்க இராணுவ அதிகாரி அன்று கூறியது இதோ: ''டௌ கெமிக்கல்ஸ் பசங்க கில்லாடிகள்தான். முதல்ல அவுங்க தயாரித்து அனுப்புன குண்டுக்கு சூடு பத்தல. அப்புறம் பசங்க அதில் பாலைஸ்டைரின் கலந்து அனுப்பிவிட்டாங்க. இப்போ போர்வையில பீ ஒட்ற மாதிரி, அவனுங்க (வியத்நாம் மக்கள்) தோல்ல இது ஒட்டிகிச்சு. இருந்தாலும் அவனுக தண்ணில குதிச்சு தப்பிச்சுகிட்டாங்க. அப்புறம் டௌ பசங்க வெள்ளை பாஸ்பரஸ் கலந்து அனுப்பி விட்டாங்க. இது தண்ணிக்குள்ள போனாலும் எரியும். ஒரு சொட்டு பட்டா போதும். எலும்பு வரைக்கும் போகும். அப்புறம் மவனே, சாவு தான்.'' இந்த நாபாம் குண்டைப்பற்றி அதனைத் தயாரித்த டௌ கெமிக்கல்ஸின் அன்றைய தலைவர் ஹெர்பர்ட் டி டோன், சொன்னார்: ''இது ஒரு உயிர் காக்கும் ஆயுதம் - அமெரிக்கர்களுக்கு''



டௌ கெமிக்ல்ஸ் உற்பத்தி செய்து கொடுத்து, அமெரிக்க இராணுவம் 1972-இல் வீசிய நாபாம் குண்டுகளால் உடல் வெந்த நிலையில் ஓடிவரும் வியத்நாமியச் சிறுமி. (கோப்புப்படம்)

**மு**தல் உலகப் போரின் போதே விசவாயுக் குண்டுகளுக்குத் தேவையான இரசாயனப் பொருட்களை டௌ தயாரித்து விற்றது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் மீது அணுகுண்டு வீசப்பட்ட பின், குண்டு தயாரிப்புக்கான ஆராய்ச்சியில் அமெரிக்க இராணுவத்துடன் யூனியன் கார்பைடு, டூ பான்ட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இயங்கின.

டௌ கெமிக்கல்ஸின் ஜெர்மன் கூட்டாளியான ஐ.ஜி பார்பென் நிறுவனம் தான், ஆஸ்விட்ஸ் கொலைக்கூடத்துக்குத் தேவையான ஹைட்ரஜன் சயனைடு என்ற விசவாயுவைத் தயாரித்து இட்லருக்கு



படிப்பகம்

www.padippakam.com

கொடுத்தது. போபால் மக்களின் உடலில் கண்டுபிடிக்கப்பட்டதும் இதே ஹைட்ரஜன் சயனைடுதான் என்பது குறிப்பிடத்தக்கது. போர் முடிந்தபின் இட்லருக்கு இந்த நச்சுவாயுவைத் தயாரித்துக் கொடுத்த ஒட்டோ அம்புரோஸ் என்ற அதிகாரி, இனப்படுகொலைக்காக 8 ஆண்டு சிறை வைக்கப்பட்டான். தண்டனைக் காலம் முடிந்தவுடனேயே, அம்புரோஸை தனது நிறுவனத்தில் பணியாற்ற அழைத்துக் கொண்டது, டௌ கெமிக்கல்ஸ். 1988-இல் சதாம் உசேனுக்கு பூச்சி மருந்து என்ற பெயரில் இரசாயன ஆயுதங்களை விற்பனை செய்ததும் டௌ கெமிக்கல்ஸ்தான்.

இன்று உலகெங்கும் தடை செய்யப்பட்டுள்ள டி.டி.டி எனும் பூச்சி கொல்லி மருந்தை, ''மனிதர்களுக்கு எந்த விதத்திலும் தீங்கானதல்ல'' என்று விளம்பரம் செய்து விற்பனை செய்தது, டௌ.

டர்ஸ்பன் என்ற பெயரில் பயன்படுத்தப்படும் வீட்டு உபயோக பூச்சிக்கொல்லி மருந்தும் டௌவின் தயாரிப்புதான். இது குழந்தைகளுக்கு நரம்பியல் நோய்கள், பார்வையிழப்பு, மனஅழுத்தம் போன்றவற்றை ஏற்படுத்துவதுடன், புற்றுநோயையும் உருவாக்குவது கண்டறியப்பட்டு, அமெரிக்காவில் 1999-இல் தடை செய்யப்பட்டது. ஆனால் 1998-இல் அமெரிக்க கல்லூரி மாணவர்களுக்கு தலா 460 டாலர்கள் கொடுத்து அவர்கள் மீது இந்த மருந்தை சோதனை செய்திருந்தது, டௌ. இதனை 'பாதுகாப்பான பூச்சி கொல்லி' என்று பொய்யாக விளம்பரம் செய்து ஏமாற்றியதற்காக 2003-ஆம் ஆண்டில் நியூயார்க் மாநில அரசுக்கு 2 மில்லியன் டாலர் அபராதம் கட்டியது, டௌ கெமிக்கல்ஸ். இருப்பினும், இதே மருந்தை 'பாதுகாப்பானது' என்று விளம்பரம் செய்து இன்றும் இந்தியாவில் விற்பனை செய்து கொண்டிருக்கிறது.

1979-இல் அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட, டி.பி.சி.பி என்ற அபாயகரமான பூச்சி கொல்லி மருந்தை, நெமகான், ப்யூமாசோன் என்ற பெயர்களில் மத்திய அமெரிக்க நாடுகளின் விவசாயிகளுக்கு டௌ விற்றது. வாழைத்தோப்புக்கு இந்தப் பூச்சிமருந்தை தெளித்ததால் கோஸ்டா ரிகா நாட்டின் 25% ஆண்களுக்கு ஆண்மையிழப்பு ஏற்பட்டது. நிகராகுவாவில் 22,000 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு டௌ உள்ளிட்ட 3 நிறுவனங்கள் சுமார் 49 கோடி டாலர் இழப்பீடாகத் தரவேண்டும் என்று 2002-இல் தீர்ப்பளித்தது, நிகராகுவாவின் நீதிமன்றம். டௌ கெமிக்கல்ஸ், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் காலின் பாவெல் மூலம் நிகராகுவா அரசை மிரட்டியது மட்டுமின்றி, தனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்து விட்டதாகக் கூறி வழக்கு தொடுத்தவர்கள் மீது 1700 கோடி டாலர் கேட்டு மான நட்ட வழக்கும் தொடுத்திருக்கிறது. ஆனால், ''டி.பி.சி.பி என்ற இந்தப் பூச்சி கொல்லி மருந்து, விரைவீக்கத்தையும், ஆண்மை இழப்பையும் ஏற்படுத்தும்'' என்று ஜூலை 23, 1958 தேதியிட்ட டௌ கெமிக்கல்ஸின் ரகசிய ஆவணத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பது, இப்போது அம்பலமாகியிருக்கிறது.



உலகெங்கும் தடை செய்யப்பட்டுள்ள டௌ கெமிக்கல்ஸின் டர்ஸ்பன் பூச்சிக் கொல்லி மருந்தை, இந்தியாவில் விற்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

அபாயகரமான இரசாயனக் கழிவுகள், அணுக்கழிவுகளை அமெரிக்காவிலேயே 136 இடங்களில் குவித்திருக்கிறது டௌ. இதற்காக விதிக்கப்பட்ட 40 கோடி டாலர் அபராதத்தை அமெரிக்க அரசுக்கு டௌ கடன் வைத்திருக்கிறது. டௌ வெளியேற்றிய அணுக்கழிவுகளால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தை சேர்ந்த 50,000 மக்கள் 55 கோடி டாலர் இழப்பீடு கேட்டு டௌ மீது வழக்கு தொடுத்துள்ளனர். 1940-களில் 50 மில்லியன் காலன் கதிர்வீச்சுக் கழிவுநீரை நயாகரா ஆற்றில் இறக்கி விட்டதுடன், 1970-களில் யுரேனியம் ஆக்சைடு, தோரியம் ஆக்சைடு போன்றவை அடங்கிய 505 டன் கழிவுகளை, நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகிலேயே பூமிக்கு அடியில் புதைத்தது.

1996 - இல் டௌ கெமிக்கல்ஸ் இந்திய அதிகாரிகளுக்கு 2 இலட்சம் டாலர் இலஞ்சம் கொடுத்திருப்பதை அமெரிக்க அரசின் கடனீட்டு பரிமாற்றக் கழகம் கண்டுபிடித்தது. தடை செய்யப்பட்ட பூச்சி கொல்லிகளை இந்தியாவில் விற்பதற்காக இந்திய அதிகாரிகளுக்கு மீண்டும் லஞ்சம் கொடுத்த டௌ-வுக்கு பிப், 2007 - இல் 3,25,000 டாலர் அபராதம் விதித்தது, அமெரிக்காவின் கடனீட்டு பரிமாற்றக் கழகம். இருப்பினும், இலஞ்சம் வாங்கிய அதிகாரிகள் மீது இந்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவை கொலைகார டௌ நிறுவனத்தின் வரலாற்றிலிருந்து சில துளிகள் மட்டுமே. யூனியன் கார்பைடின் பெரும்பான்மை பங்குகளை வாங்கியிருக்கின்ற இந்த டௌ நிறுவனத்துக்கு காங்கிரசின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் மனு சிங்விதான் வழக்குரைஞர். போபால் வழக்கை அரசு வாபஸ் பெற்றால்தான் டௌ இந்தியாவில் முதலீடு செய்யும் என்று கூறி அமைச்சர் கமல்நாத்தும், ப.சிதம்பரமும் டாடாவும் சிபாரிசு செய்கின்றனர்.

● இரணியன்



படிப்பகம்

www.padippakam.com

# ஆண்டர்சனின் அடிச்சுவட்டில் அணுசக்தி கடப்பாட்டு மசோதா

**அமெரிக்காவில் அணுமின் நிலையங்களில் விபத்து ஏற்பட்டால் தரவேண்டிய இழப்பீடு 50,000 கோடி ரூபாய். இந்தியாவில் 2300 கோடி ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறது இம்மசோதா. போபால் படுகொலையில் ஆண்டர்சன் வகுத்த விதியைச் சட்டமாக்குகிறார் மன்மோகன் சிங்.**

இந்த நாட்டின் மீதும் மக்களின் மீதும் தற்போதைய காங்கிரசு அரசு கொண்டிருக்கும் வெறுப்பும் துவேசமும் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளுக்குக் கூட இருந்திருக்குமா என்பது சந்தேகம்தான். 26 ஆண்டுகளுக்கு முன் போபால் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் காட்டிலும் கொடிய அநீதி, தீர்ப்பாக வழங்கப்பட்டிருக்கும் சூழலில், இனி இத்தகைய அநீதிகள் நமது மக்களுக்கு இழைக்கப்படாமல் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைத்தான் பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறப்படும் ஒரு அரசு யோசிக்க முடியும்.

ஆனால் அதற்கு நேர் எதிராக, போபாலை விஞ்சும் படுகொலைகளை நிகழ்த்தினாலும், பைசா செலவில்லாமல் அமெரிக்க முதலாளிகளைக் காப்பாற்றுவதெப்படி என்று ஆண்டர்சனைப் போலவே சிந்தித்து மன்மோகன் அரசு தயாரித்திருப்பதுதான், அணுசக்தி கடப்பாடு மசோதா (Civil nuclear liability bill).




அணுசக்தி கடப்பாடு மசோதாவைக் கண்டித்து, போபால் விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்ட பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

மசோதாவின் மீது நிதியமைச்சகமும், சுற்றுச்சூழல் அமைச்சகமும் எழுப்பியிருந்த ஆட்சேபங்களைப் புறந்தள்ளி விட்டு, சென்ற நவம்பரில் மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தது மத்திய அமைச்சரவை. இந்த ஏப்ரல் மாதம் தனது அமெரிக்கப் பயணத்துக்கு முன்னதாக, பெண்கள் இட ஒதுக்கீட்டு மசோதா தோற்றுவித்த களேபரத்துக்கு இடையில், காதும் காதும் வைத்த மாதிரி இதனை நிறைவேற்றுவதற்கு மன்மோகன் செய்த முயற்சியும் வெற்றி பெறவில்லை; இதற்கிடையில் போபால் தீர்ப்பு வந்து விட்டது.

போபால் தீர்ப்பு மக்களிடையே தோற்றுவித்திருக்கும் கோபம், அணுசக்தி கடப்பாடு மசோதாவுக்கு எதிராகத் திரும்பி விடக்கூடாது என்பதுதான் மன்மோகன் அரசின் உண்மையான கவலை. பத்தே நாளில் போபால் பற்றி அறிக்கை, உடனே நிவாரணம் என்பதெல்லாம் அந்தக் கவலையின் விளைவுகள்தான்.

போபால் வழக்கு யூனியன் கார்பைடுக்கு ஏற்படுத்திய தொந்திரவுகள் எதுவும், அணு உலையை விற்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு வந்துவிடாமல் உத்திரவாதம் அளிப்பதுதான் இந்த மசோதாவின் நோக்கம். போபால் வழக்கையும், இந்த மசோதாவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதனைப் புரிந்து கொள்ள இயலும்.

இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக அடுக்கடுக்கான பொய்களை நாடாளுமன்றத்திலேயே அவிழ்த்து விட்ட மன்மோகன் அரசு, இப்போது இம் மசோதாவை சட்டமாக்கவில்லையென்றால் வெளிநாடுகளிலிருந்து அணு உலைகளையோ, யுரேனியத்தையோ நம்மால் வாங்க முடியாது என்று ஒரு பொய்யை திட்டமிட்டே பரப்பி வருகிறது. இப்படி ஒரு சட்டத்தை இயற்றவேண்டும் என்று யுரேனியம் விற்பனை செய்யும் நாடுகள் (Nuclear suppliers group) கோரவில்லை. இச்சட்டம் இல்லாமலேயே ரசியாவும் பிரான்சும் இந்தியாவுக்கு அணுஉலைகளை விற்பனை செய்துள்ளன. போபாலைப் போன்றதொரு தொந்திரவு தங்களுக்கு வந்து விடக்கூடாது என்



படிப்பகம்

www.padippakam.com

பதை உத்திரவாதம் செய்து கொள்வதற்காக ஜெனரல் எலக்ட்ரிக், வெஸ்டிங்ஹவுஸ் போன்ற அமெரிக்க அணு உலை தயாரிப்பு நிறுவனங்கள் கொடுத்துவரும் நிர்ப்பந்தம்தான், மன்மோகன் அரசு இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கான காரணம்.

மேற்கூறிய நிறுவனங்களிடமிருந்து அணுஉலைகளை இறக்குமதி செய்து இந்திய அணுசக்திக் கழகம்தான் அணு உலைகளை இந்தியாவில் இயக்கப் போகிறது. எந்திரத்தின் வடிவமைப்பிலோ அல்லது இயக்கத்திலோ உள்ள கோளாறு காரணமாக ஒரு விபத்து நேர்ந்தாலும், பாதிக்கப்பட்ட மக்கள் இந்த அணுஉலைகளை விற்பனை செய்த நிறுவனத்திடம் இழப்பீடு கோர முடியாது. அணு உலையை இயக்குகின்ற இந்திய அணுசக்திக் கழகம்தான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறுகிறது இம்மசோதா. போபால் படுகொலைக்கு இந்திய நிறுவனம்தான் பொறுப்பேற்க வேண்டுமென்றும், எந்திரங்களையும் தொழில்நுட்பத்தையும் தந்து அங்கிருந்தே இயக்கியபோதிலும், அமெரிக்க நிறுவனம் பொறுப்பேற்க இயலாது என்றும் யூனியன் கார்பைடு வாதிட்டதை இங்கே நாம் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

ஒருவேளை, அணு உலை விபத்துக்கு எந்திரக் கோளாறுதான் காரணம் என்று ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டு விட்டாலும், ஏற்படுகின்ற பேரழிவுகள் மற்றும் உயிரிழப்புகளுக்கான முழு ஈட்டுத்தொகையையும் இந்திய அணுசக்திக் கழகம் அமெரிக்க நிறுவனத்திடம் கோர முடியாதென்றும், விற்பனை ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்படும் தொகையை மட்டுமே இழப்பீடாகக் கோர முடியும் என்றும் கூறுகிறது, இம்மசோதாவின் 17-ஆ பிரிவு. இந்த சட்டப்பிரிவையும் நீக்க வேண்டும் என்பது அமெரிக்க அரசின் ஆணை. எனவே, மசோதாவின் இந்தப் பிரிவையும்கூட நீர்த்துப் போகவைக்கும் சில திருத்தங்களை மன்மோகன் அரசு திருட்டுத்தனமாகச் செய்திருக்கிறது என்பதை பின்னர் நாடாளுமன்றத் தேர்வுக்குழு கண்டுபிடித்தது.

போபால் பிரச்சினையில் அமெரிக்க முதலாளிகள் சில பாடங்களைக் கற்றுக்கொண்டிருந்தனர். அன்று பாதிக்கப்பட்ட மக்கள் சிலர் நேரடியாக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு நடத்தினால் மிக அதிகமான தொகையை யூனியன் கார்பைடு இழப்பீடாகத் தரவேண்டிவரும் என்பதால், இந்திய மக்களின் வழக்காடும் உரிமையை ரத்து செய்ய ஒரு சட்டம் இயற்றியது காங்கிரசு அரசு. பின்னர், அமெரிக்க நீதிமன்றத்திலிருந்து இந்தியாவுக்கு வழக்கை மாற்றி, கோரிய இழப்பீட்டுத் தொகையில் 15% மட்டும் பெற்றுக்கொண்டு வழக்கையே முடித்துக் கொண்டது.


ஜார்கந்து மாநிலத்தின் ஜாடுகுடாவிலுள்ள யுரேனியச் சுரங்கங்களிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சால் ஊனமாகிப் போன சிறுவன்.

நாளை அணுஉலை விபத்தால் பாதிக்கப்படுகின்ற யாரேனும் ஒரு இந்தியக் குடிமகன் இழப்பீடு கோரி அமெரிக்க நீதிமன்றத்தை அணுகக் கூடும் என்பதால், அதைத் தடுப்பதற்காக, இழப்பீடு தொடர்பான எல்லா வழக்குகளையும் இந்திய நீதிமன்றம்தான் விசாரிக்க முடியும் என்று கூறுகிறது இம்மசோதா. இதையும் மீறி அமெரிக்க நீதிமன்றத்தில் யாரேனும் வழக்குத் தொடுக்கும் வாய்ப்பைத் தடுக்கும் பொருட்டு, சர்வதேச அணுசக்தி முகமையின் ஈட்டுத்தொகை தொடர்பான ஒப்பந்தத்திலும் (IAEA's Convention on Supplementary Compensation ) இந்திய அரசு கையெழுத்திடவிருக்கிறது. இதில் கையெழுத்திடும் நாடுகளுக்கு விபத்து ஒன்றுக்கு சுமார் 30 கோடி டாலரை சர்வதேச அணுசக்தி முகமை வழங்கிவிடும் என்பதால், அந்நாட்டு மக்கள் வேறு எங்கும் வழக்கு தொடுக்கும் உரிமையை இழக்கிறார்கள்.

விபத்துக்கான ஈட்டுத்தொகையை மதிப்பிடுகின்ற அதிகாரத்தையும் சுற்றுச்சூழல், சுகாதாரத்துறைகளிடமிருந்து பிடுங்குகிறது இம்மசோதா. இனி, அணு உலை விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பொருளிழப்புகளை மதிப்பீடு செய்யும் அதிகாரம் ''அணுசக்தி பாதிப்பு இழப்பீட்டுத்துறை ஆணையர்'' என்ற அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும். அந்த ஆணையரின் முடிவை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் உரிமையையும் இம்மசோதா ரத்து செய்கிறது.

போபால் நச்சுவாயுவால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமின்றி, அவர்களது சந்ததியினரும் ஊனமுற்றவர்களாகப் பிறப்பது இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. போபாலில் இப்படிப் பாதிக்கப்பட்

**அணு உலை விபத்தால் பாதிக்கப்படுகின்ற இந்தியக் குடிமகன் அமெரிக்காவில் வழக்குத் தொடுப்பதைத் தடுக்கும் பொருட்டு, அணுசக்தி முகமையின் ஈட்டுத் தொகை ஒப்பந்தத்திலும் இந்திய அரசு கையெழுத்திட உள்ளது.**



படிப்பகம்

www.padippakam.com

**ஒரு அமெரிக்க உயிருக்கு 20 இந்திய உயிர்கள் சமம் என்று ஒப்புக்கொள்ளும் இந்த மசோதா, இழப்பீட்டுக்கு உச்சவரம்பு நிர்ணயிப்பதன் பொருள் இந்திய உயிரின் விலைக்கு உச்சவரம்பு நிர்ணயிப்பதாகும்.**

டவர்களில் 90% பேர் அரசு தயாரித்துள்ள பாதிக்கப்பட்டோர் பட்டியலிலேயே இல்லை என்பது போபாலின் அனுபவம். அணுக்கதிர் வீச்சு தலைமுறை தலைமுறையாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பது ஏற்கெனவே நிரூபிக்கப்பட்ட உண்மை. விபத்து நடைபெற்று 30 ஆண்டுகள் வரை ஏற்படும் பாதிப்புகள் கதிர்வீச்சினால் ஏற்படும் பாதிப்புகளாகக் கணக்கில் கொள்ளப்பட்டு, நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்பதுதான் வியன்னா மற்றும் பாரிஸ் கன்வென்சன்களில் முடிவு செய்யப்பட்ட சர்வதேச நெறிமுறை. இந்த மசோதாவோ, விபத்து நடந்ததிலிருந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு கிடையாது என்று கூறுகிறது.

அதுமட்டுமல்ல; போர், உள்நாட்டுப்போர், ஆயுத மோதல், பயங்கரவாதத் தாக்குதல் ஆகியவற்றின் காரணமாக விபத்து ஏற்பட்டால் அதற்கு இழப்பீடு கிடையாது என்றும் மசோதா கூறுகிறது. அணுசக்தி நிறுவனங்கள் தங்களது தவறுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு மட்டுமே இந்தச் பிரிவு பயன்படும் என்று சட்ட வல்லுநர்கள் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

போபால் படுகொலைக்காக 300 கோடி டாலர் இழப்பீடு அரசால் கோரப்பட்டு, 47 கோடி டாலருக்கு மேல் தரமுடியாது என்று கார்பைடு மறுத்ததனால், அதுவே அறுதி இழப்பீட்டுத் தொகையாக அன்று முடிவு செய்யப்பட்டது. நாளை அணுஉலைகளில் விபத்து ஏற்பட்டு எத்தனை இலட்சம் உயிர்கள் போனாலும், இழப்பீடுக்கான உச்சவரம்பு 45 கோடி டாலர்தான் (சுமார் 2,300 கோடி ரூபாய்) என்று நிர்ணயித்திருக்கிறது இந்த மசோதா. அணுமின் நிலையத்தை இயக்கும் நிறுவனம் இந்தத் தொகையில் 500 கோடி ரூபாயை மட்டும் கொடுத்தால் போதுமானது என்றும் இம்மசோதா கூறுகிறது. அமெரிக்காவில் இத்தகைய விபத்து ஏற்பட்டால் அங்கு அணு மின் நிறுவனம் தரவேண்டிய இழப்பீடு 10 பில்லியன் டாலர்கள் (சுமார் 50,000 கோடி ரூபாய்) என்று இதற்காகவே இயற்றப்படுள்ள பிரைஸ் ஆண்டர்சன் சட்டம் கூறுகிறது. இது மிகவும் குறைவு என்றும், இதனை இரண்டு மடங்காக உயர்த்தவேண்டும் என்றும் அமெரிக்க வல்லுநர்கள் கூறிவருகின்றனர். இந்த இழப்பீட்டுத் தொகையின் கணக்குப்படி, ஒரு அமெரிக்க உயிருக்கு 20 இந்திய உயிர்கள் சமம் என்று ஒப்புக் கொள்கிறது இம்மசோதா.

ஒரு அணுஉலை விபத்து எத்தகைய உயிரிழப்புகள், பொருளிழப்புகள் மற்றும் நீண்ட காலப் பாதிப்புகளை உருவாக்கும் என்று அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து, இந்த இழப்பீட்டுத் தொகையை மன்மோகன் அரசு நிர்ணயம் செய்யவில்லை. 1997- இல் அமெரிக்க அரசு நிறுவனமான புரூக்ஹெவன் தேசிய ஆய்வகம் நடத்திய ஆய்வின்படி, ஒரு அணுஉலை விபத்து தோற்றுவிக்கும் மிகக் குறைந்தபட்ச பாதிப்பின் மதிப்பு 100 கோடி டாலர்கள். அதிகபட்சம் 70,000 கோடி டாலர்கள். விபத்துக்குப் பின் அதிகபட்சம் 7000 சதுர கி.மீ. பரப்புள்ள நிலத்தை என்றென்றும் கைவிடவேண்டிவரும் என்கிறது, இந்த ஆய்வு. மக்கள் நெருக்கத்துக்கு ஏற்ப உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் புற்றுநோய் பாதிப்பும் இருக்கும். இந்த அமெரிக்க அரசு நிறுவனத்தின் கணக்கின்படியே பார்த்தாலும், தற்போது இந்திய அரசு நிர்ணயித்துள்ள இழப்பீடு உண்மையாக ஏற்படக்கூடிய இழப்பின் 0.1% மட்டுமே.

இந்தியாவைத் தவிர உலகின் வேறு எந்த நாடும் அணுஉலை விபத்துக்கான கடப்பாட்டுக்கு (liability) உச்சவரம்பு நிர்ணயித்துக் கொள்ளும் இத்தகையதொரு சட்டத்தை இயற்றவில்லை. இந்தியாவிலும் கூட வேறெந்தத் தொழிற்துறைக்கும் இத்தகைய சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. தற்போது அமெரிக்க நிறுவனங்களின் கொள்ளைக்காக இயற்றப்பட்டிருக்கும் இந்த மசோதாவின் விளைவாக பிரெஞ்சு, ரசிய அணு உலை நிறுவனங்களும் இதே சலுகைகளைப் பெறும்.

அணுமின் நிலையங்கள் தற்போது அரசுத் துறையில் தான் இருக்கின்றன என்ற போதிலும், தனியார் அனல் மின் நிலையங்களைப் போல, தனியார் அணு மின் நிலையங்களையும் அனுமதிக்க மன்மோகன் அரசு திட்டமிட்டிருக்கிறது. எனவேதான் அணுஉலைகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கின்ற பன்னாட்டு நிறுவனங்களை (suppliers) மட்டுமின்றி, அணுமின் நிலையங்களை இந்தியாவில் இயக்குகின்ற நிறுவனங்களையும் (operators) அவர்களுடைய கொள்ளை இலாபத்தையும் பாதுகாக்கும் விதத்தில் இம்மசோதா வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

அணு உலை விபத்துக் கடப்பாட்டுக்கு இவ்வாறு உச்சவரம்பு நிர்ணயிப்பதன் பொருள் இந்திய உயிரின் விலைக்கு உச்சவரம்பு நிர்ணயிப்பதாகும். இந்திய அரசியல் சட்டத்தின் 21- வது பிரிவு வழங்கும் உயிர் வாழும் உரிமைக்கே இது எதிரானது என்கிறார், முன்னாள் அட்டார்னி ஜெனரல். இது தற்கொலை என்கிறார், கடற்படையின் முன்னாள் வைஸ் அட்மிரல் அருண் குமார்சிங்.

‘‘எங்களைக் கொல்லுங்கள், பொசுக்குங்கள். எது செய்தாலும் நாங்கள் எதிர்த்துக் கேட்க மாட்டோம், வழக்காட மாட்டோம்’’ என்று அமெரிக்க முதலாளிகளுக்கும், இங்குள்ள தரகு முதலாளிகளுக்கும் இந்திய மக்கள் சார்பில் மன்மோகன்சிங் எழுதிக் கொடுக்கும் செப்புப் பட்டயம்தான், நாடாளுமன்றத்தில் நிறைவேறக் காத்திருக்கும் இந்த மசோதா.

● அஜித்



படிப்பகம்

www.padippakam.com

## அன்னியரும் துரோகியரும் கிளப்பிய நச்சுக்காற்று சுழன்றடிக்கிறது

# செத்து மடிவீரோ? விடுதலைக்காய் வெகுண்டெழுவீரோ?

**இந்தியநாடு மறுகாலனியாவது என்ற போக்கு போபால் படுகொலைகளால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தப்போக்கை தடுத்து நிறுத்தவில்லையென்றால் நாடும் மக்களும் போபாலைவிடக் கொடிய கார்ப்போரேட் பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்கொள்ள நேரிடும்.**

ஜப்பானில் நாகசாகி, ஹிரோஷிமா அணு குண்டு வீச்சுத் தாக்குதல், சோவியத் ஒன்றியம் - செர்னோபிலில் அணுஉலை விபத்து ஆகிய வற்றுக்கு இணையானது இந்த போபால் நச்சு வாயு கோரம் - பேரழிவு என்று கல்நெஞ்சர்கள் தவிர ஒப்புக் கொள்ளாதவர்கள் எவருமில்லை.

அரசியல் நோக்கத்துக்காக அரசப் படை களை மட்டுமல்லாது, சீருடையணியாத சிவிலி யன் மக்களையும் பெரும் எண்ணிக்கையில் கொன்று, ஒட்டு மொத்த சமூகத்தையே பயபீதி யில் மூழ்கடிப்பதும், அதற்காகத் திட்டமிடுவ தும் தயாரிப்புச் செய்வதும் பயங்கரவாதக் குற்றச் செயல் என்று உலக அதிகாரபீடங்கள் அனைத்தும் ஒரு பொதுப் புரிதலை ஏற்படுத் தியிருக்கின்றன.

ஆனால், அரசியல் நோக்கத்துக்காக, அரசப் படைகளை ஏவி, அரசே கட்டவிழ்த்துவிடும் அரசப் பயங்கரவாதம்; மதவெறி நோக்கத்துக் காக, மத அடிப்படை பயங்கரவாதிகள் ஏவி விடும் மதவெறி பயங்கரவாதம்; அரசப் படை கள் தவிர சல்வாஜுடும், 'கிரே ஹவுண்ட்' இலங்கையின் 'வெள்ளை வேன்' போன்ற இர கசிய, கிரிமினல் கொலைக் குழுக்களை வைத்து அரசே நடத்தும் வெள்ளைப் பயங்கர வாதம்; அதற்கு எதிராக கம்யூனிச விடுதலைப் புரட்சிப் படைகள் நடத்தும் சிகப்புப் பயங்கர வாதம் - இவ்வாறு வெவ்வேறு நோக்கத்துக் காக வெவ்வேறு பயங்கரவாதங்கள் உள்ளன.

நைஜீரியா, ஈகுவடார் போன்ற நாடுகளில் பெட்ரோலிய எண்ணெய் வளங்களை வேட்டையாடுவதற்காகப் பன்னாட்டு தொழில் கழகங்கள், இந்தியா மற்றும் ஆப்பிரிக்க நாடு களில் இயற்கை கனிம வளங்களை சூறையாடு வதற்காக பல கூட்டுப் பங்கு பெருந்தொழிற் கழகங்கள் வேறொரு வகையான பயங்கர வாதத் தாக்குதல்களைத் தொடுக்கின்றன. இதை ''கார்ப்போரேட் பயங்கரவாதம்'' எனலாம்.

அதாவது பின்தங்கிய, ஏழை நாடுகள் மீது இலாப நோக்கத்துக்காக பன்னாட்டுத் தொழில் கழகங்கள் கட்டவிழ்த்து விடும் பயங்கரவாதம். இயற்கை-கனிம வளங்களை எவ்வித வரை முறையுமின்றிச் சூறையாடுவது, காற்று-நீர்-நிலம் ஆகியவற்றை நச்சுப்படுத்தி சுற்றுச் சூழலை நாசப்படுத்துவது, விவசாயம் முதலிய பாரம்பரியத் தொழில்களை அழித்து மக்களின் வாழ்வாதாரங்களைப் பறிப்பது, இவற்றின் மூலம் மக்களை கொத்துக் கொத் தாக சாகடிப்பது, நிரந்தர நோய்களில் மூழ்கடிப் பது, இதற்காக அரசியல்- பொருளாதார கிரி மினல் குற்றங்களில் ஈடுபடுவது, தொழிற்சங்க உரிமைகளை மறுத்துத் தொழிலாளர்கள் அனை வரையும் கொத்தடிமைகளாக மாற்றுவதோடு, கொலைக் குழுக்களை ஏவிப் படுகொலை களையும் செய்வது. இதுதான் கூட்டுப் பங்கு பெருந்தொழில் நிறுவனங்களின் (கார்ப் போரேட்) பயங்கரவாதம்.

கொலம்பியாவில் கோகோ-கோலா நிறு வனம் தொழிலாளர்களுக்கு எதிராக 179 பெரிய மனித உரிமை மீறல்களைச் செய்துள்ளது. பலரை படுகொலைகள் செய்ததோடு, தொழி லாளர்களின் குடும்ப உறுப்பினர்களைக் கடத்திச் சித்திரவதைகளும் புரிந்துள்ளது. பிரிரைட் ஸ்பார்க்கிள்ஸ் என்ற பன்னாட்டுத் தொழில் கழகம் வானவேடிக்கை வெடி பொருட்களை மலேசியாவில் உற்பத்தி செய் கிறது. 1991-ஆம் ஆண்டு அங்கு நடந்த விபத் தில் 22 பேர்கள் மாண்டு -றுக்கும் மேற்பட் டோர் படுகாயமுற்றனர். அவர்களின் குடும்பங் களுக்கு உயிரிழப்பு மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்புகளுக்கு இழப்பீடு தர மறுத்துவிட்டது.

தாய்லாந்தில், தாய் பாலிகார்ப்பனேட் மற்றும் உலகின் பல நாடுகளிலும் இயங்கும் ஷெல், எக்ஸோன், செவ்ரோன், டெக்சோ போன்ற பன்னாட்டு பெட்ரோலியத் தொழிற் கழகங்கள் அந்நாடுகளின் எண்ணெய் வளங் களைக் கொள்ளையடிப்பதோடு, எண்ணெய்க் கசிவு, கழிவுப் பொருட்களைக் கொட்டுவது மற்றும் ஆலை விபத்துக்கள் மூலம் சுற்றுச் சூழலை நாசப்படுத்தி, மனித உயிர்களைப் பறித்து வருகின்றன. இத்தகைய பன்னாட்டு கார்ப்போரேட் பயங்கரவாதக் குற்றச் செயல்



படிப்பகம்

www.padippakam.com

களின் வரிசையில், போபால் நச்சுப் புகை படுகொலை முதலாவதும் மிகப் பெரியதும் ஆகும்.

பன்னாட்டுத் தொழிற்கழகங்கள் - உலகெங்கும் அடுத்தடுத்துப் பல கார்ப்போரேட் கிரிமினல் பயங்கர வாதக் குற்றச் செயல்களில் துணிந்து ஈடுபடுவதற்கு மிக முக்கியக் காரணங்கள் இரண்டு உண்டு. அவற்றுள் ஒன்று, மிகப் பெரும்பாலானவற்றின் தலைமையகங்கள் ஏகாதிபத்திய நாடுகளில் உள்ளன; முக்கியமாக, அமெரிக்க மேல்நிலை வல்லரசின் அரசியல்-இராணுவ மேலாதிக்கத்தின் பாதுகாப்பில் அவை உள்ளன. இன்னொன்று, கடந்த சில பத்தாண்டுகளில் உலகைக் கொள்ளையடித்து, எந்த நாட்டின் ஆட்சியாளர்களையும் விலைக்கு வாங்கி விடும் அளவுக்கு செல்வவளம் மிக்கவையாக அவை உள்ளன.

உலகின் 500 பணக்கார பன்னாட்டு தொழிற்கழகங்களில் 10 மட்டும், வளரும் நாடுகளில் பெரிதான இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ஈடாக, அல்லது பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள ஆறு வளைகுடா நாடுகளின் அந்நிய செலாவணிக் கையிருப்புக்கு ஈடாக செல்வங்களைக் குவித்து வைத்துள்ளன. அதனால்தான் அவை அப்பட்டமாகவே பொறுப்பற்ற முறையில், இலாபவெறியோடு, மக்களின் நலன்களில் துளியும் அக்கறையின்றி, சுற்றுச் சூழலை நாசப்படுத்தும் ஆலை விபத்துக்கள் வடிவிலான பிணந்திண்ணிகளாக செயல்படுகின்றன.

கார்ப்போரேட் பயங்கரவாதம் அமெரிக்காவையும் விட்டு வைக்கவில்லை. ‘‘பிரிட்டிஷ் பெட்ரோலியம்’’ அமெரிக்காவின் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் எட்டாவது பெரிய நிறுவனமாகும். 2005-ம் ஆண்டு டெக்சாஸ் நகரில் உள்ள அதன் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஒரு கோர வெடிவிபத்து நடந்தது. ஆலையின் மூன்று மைல் சுற்றளவுக்கு வசிக்கும் 30,000 பேரின் உடல் நலனை பாதிக்கும் கார்சினோஜன் உட்பட பல நச்சுப்புகைகளோடு 51 இலட்சம் டன் மாசுப் பொருட்களை அமெரிக்காவின் மெக்சிகோ வளைகுடாவில் கொட்டியது. அமெரிக்க உளவுத்துறையான எஃப்.பி.ஐ. (FBI) புலனாய்வு, கடும் சட்டம் மற்றும் அபராதத் தண்டனைகளையும் மீறி மோசமான அளவுக்கு சுற்றுச்சூழலை நாசப்படுத்தியது.

உலகின் அனைத்து நாடுகளும் இத்தகைய கார்ப்போரேட் பயங்கரவாதக் குற்றச் செயல்களை ஒரே மாதிரி எதிர்கொள்வதில்லை. அமெரிக்காவில் பிரிட்டிஷ் பெட்ரோலியம் கம்பெனி நடத்திய நாச வேலைக்கு அந்நாட்டு அதிபர் பாரக் ஒபாமா கண்டனத்தையும் எச்சரிக்கையையும் தெரிவித்தார். உடனடியாகவே, பிரிட்டிஷ் பெட்ரோலியம் மன்னிப்பு கேட்டுக் கொண்டதோடு, நட்டஈடும் வழங்குவதாக ஒப்புக் கொண்டது.

ஆனால், இந்தியாவின் போபாலில் நடத்தப்பட்ட கார்ப்போரேட் பயங்கரவாதக் குற்றச் செயலுக்கு பொறுப்பேற்கவோ, நிவாரணம்-நட்டஈடு வழங்கவோ யூனியன் கார்பைடு நிறுவனம் அடாவடியாக மறுக்கிறது. அதற்குப் பின்பலமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் நிற்கிறது. இந்தியாவிலோ எந்த அரசியல் கட்சி அல்லது கூட்டணி ஆட்சி நடந்தாலும் குற்றவாளிகளைத் தப்பிக்க வைப்பதில் அதீத அக்கறை காட்டப்படுகிறது. நச்சு வாயுப் படுகொலையால் உயிரிழந்தவர்கள், நிரந்தர நோயாளிகளானவர்களுக்கு இந்திய அரசே நட்டஈடு தருவதாக முடிவானது. ஆலையில் எஞ்சியிருக்கும் பல ஆயிரம் டன் இரசாயனக் கழிவை அகற்றவும், அல்லது அந்த மண்ணுக்குள்ளேயே புதைப்பதற்கான செலவுகளையும் அரசே ஏற்கிறது. அதாவது பயங்கரவாதக் குற்றம் செய்தது, கூட்டுப் பங்கு கம்பெனி; அதுவும், பெரும்பான்மை பங்கு அந்நியர்களுக்கு. ஆனால், நட்டஈடும் செலவும் இந்திய அரசு செய்யும்; இதன் பொருள், இச்சுமை அனைத்தும் இந்திய மக்களின் தலையில் ஏற்றப்படும்.

இத்தகைய இழிசெயல் நமக்குத் தெரிய நேரடி காலனிய ஆட்சி காலத்தில் நடந்திருக்கிறது. இப்போது, நாடே அறிய இந்தத் துரோகச் செயல் நடக்கிறது. இனி இது சட்டபூர்வமாகவும் அப்பட்டமாகவும் தொடரும். அதற்குரிய துரோக ஒப்பந்தங்கள், சட்டங்கள் பலவும் கடந்த முப்பது ஆண்டுகளில் ஆட்சி புரிந்த அனைத்துக் கட்சி மற்றும் கூட்டணி அரசுகளால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. முன்பு, ஆங்கிலேய ஏகாதிபத்தின் கீழிருந்த இந்தியக் காலனி ஆட்சியில் நடந்தன. இப்போதோ, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான மறுகாலனியாதிக்கத்தின் கீழ் நடக்கின்றன.

இந்திய நாடு மறுகாலனியாவது என்ற இந்தப் போக்கு போபால் நச்சுவாயுப் படுகொலைகள் மூலம் யூனியன் கார்பைடால் தொடங்கி வைக்கப்பட்டது; விவசாயத் தொழில் பன்னாட்டு கழகமான மான்சாண்டோவால் நிறைவு செய்யப்படும். விவசாயத்தை அடிப்படைத் தொழிலாகக் கொண்டுள்ள இந்த நாட்டில் விவசாய உற்பத்




கோக்கின் கிரிமினல் குற்றச் செயல்களை அம்பலப்படுத்தி இங்கிலாந்தில் பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



படிப்பகம்

www.padippakam.com

திக்கு அவசியமான பூச்சிக் கொல்லி தயாரிப்பு என்ற பெயரில் இந்தப் படுகொலைகள் நடந்தன. விவசாய உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கும் நவீன அறிவியல் புரட்சி என்ற பெயரில், நாசகார உயிரித் தொழில்நுட்ப விதைகளைச் சந்தைப்படுத்தி இலட்சக்கணக்கான விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளியது மான்சாண்டோவின் பன்னாட்டு நிறுவனத்தின் பயங்கரவாதம்.

யூனியன் கார்பைடு நிறுவனத்தின் போபால் ஆலை, இந்திராவின் அவசரநிலைக் கால பாசிச ஆட்சியில் உரிமம் பெற்றது. ஜனதா கூட்டணி ஆட்சியில் உற்பத்தியைத் தொடங்கியது. என்றாலும் அதன் நச்சுவாயுப் படுகொலை என்ற கார்ப்பரேட் பயங்கரவாதத் தாக்குதல் நடந்த சமயம் முக்கியமானது. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சீக்கியர்களைக் கொன்று, தலைநகர் டில்லியில் ஓடிய இரத்த ஆறில் நீந்தி பாசிச ராஜீவ் பிரதமர் பதவியில் அமர்ந்த சில வாரங்களில் அக்கோர சம்பவம் நடந்தது.

சோசலிச, முற்போக்கு நாடகமாடிய நேரு-இந்திரா பரம்பரையில் வந்திருந்தாலும், இனி தனக்கு சித்தாந்தம் எதுவும் முக்கியமில்லை; பொருளாதார-தொழில் முன்னேற்றம், நவீனமயமாக்கம்தான் தனது இலட்சியம் என்று பாசிச ராஜீவ் கும்பல் தம்பட்டமடித்துக் கொண்டிருந்த காலம். அதே சமயம் சோவியத் ஒன்றிய சார்பு நிலையை மாற்றிக் கொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பக்கம் நாட்டை அவரது தாயார் இந்திரா திருப்பி விட்டிருந்த காலம். அதையொட்டி தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கப் போக்கைப் புகுத்துவதற்கான தீவிர முயற்சியில் அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் ஈடுபட்டிருந்தன. காட் (GATT) பேச்சுவார்த்தைகளை முடித்து, உலக வர்த்தகக் கழகத்தை நிறுவுவதற்கான வேலைகளை அவை முடுக்கி விட்டிருந்தன.

இந்திராவின் ஆட்சிக் காலத்திலேயே நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக உலக வங்கியின், சர்வதேச நிதி நிறுவனத்தின் கட்டளைகளையும் நிபந்தனைகளையும் ஏற்று ஏராளமாகக் கடன் வாங்கத் தொடங்கியிருந்தார்கள். ஏகபோகத் தடுப்புச் சட்டம், அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் ஆகியவற்றை தளர்த்தவோ, நீக்கவோ ஒப்புக் கொண்டிருந்தார்கள். 49 சதவீத அந்நியப்பங்கு மற்றும் 51 சதவீத இந்தியப் பங்கு என்றிருந்த தொழில் முதலீட்டை மாற்றி 51/49 என்ற விகிதமாக்குவதற்கு ஒப்புக் கொண்டிருந்தார்கள். யூனியன் கார்பைடு ஆலையே இப்படியானதுதான். பன்னாட்டுத் தொழில் கழகங்களின் நிபந்தனைகளை ஏற்பதோடு, காட் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக் காலத்திலேயே ஏகாதிபத்திய நிபந்தனைகளைத் தானே முன்வந்து ஒப்புக் கொள்வது என்று ராஜீவ் கும்பல் முன்னறிவித்து விட்டிருந்தது.

இந்தச் சூழலில் நடந்த போபால் நச்சுவாயுப் படுகொலை நிகழ்வில் ராஜீவ் கும்பலின் நடத்தை என்பது ஏகாதிபத்திய, பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு அதன் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சோதனையாக அமைந்தது. அதை ராஜீவ் கும்பல், அவர்களின் எதிர்பார்ப்பின்படியே வெற்றிகரமாக செய்து முடித்தது. யூனியன் கார்பைடு நிறுவனத் தலைவர், வாரன் ஆண்டர்சன் இந்தியா வந்து, பாதுகாப்பாகத் திருப்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளைத் திறமையாகச் செய்ததோடு, உச்சநீதி மன்றத்தில் வழக்குகளை நீர்த்துப் போகச் செய்து, நட்டஈடு மற்றும் கழிவுகள் அகற்றுவதைக் கிடப்பில் போடுவது ஆகியவற்றையும் சதித்தனமாகச் செய்து முடித்தது.


தற்கொலை செய்து கொண்ட விதர்பா பகுதியைச் சேர்ந்த பருத்தி விவசாயி: மான்சாண்டோ நிறுவனம் பி.டி.பருத்தி விதை மூலம் இந்திய விவசாயிகள் மீது தொடுத்துவரும் பயங்கரவாதத் தாக்குதல். (கோப்புப் படம்)

ராஜீவ் கும்பலைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்கள் அனைவரும் அதே பாதையில் இன்னமும் விசுவாசமான அமெரிக்க ஏகாதிபத்திய மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் அடிவருடிகளாகச் செயல்பட்டனர். நாட்டை மறுகாலனியாக்கும் வேலையில் கண்ணை மூடிக் கொண்டு ஈடுபட்டனர். பொருளாதாரம் - தொழில் முன்னேற்றத்துக்காக, அந்நிய நேரடி, மறைமுக முதலீடுகளை ஈர்ப்பது; அதற்காக உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் கட்டளைகளைத் தட்டாமல் நிறைவேற்றுவது, உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனைகளைத் துளியும் பிசகாமல் கடைபிடிப்பது என்று செயல்பட்டார்கள். இவற்றுக்கு வசதியாக பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி, மக்கள்விரோதச் செயல்களிலும் ஈடுபட்டனர்.

ஏகாதிபத்தியங்களோடும், பன்னாட்டு தொழில் கழகங்களோடும் நாட்டுக்கும் மக்களுக்கும் விரோதமான பல இராணுவ மற்றும் தொழில் ஒப்பந்தங்கள் போட்டார்கள். முன்பு நாட்டுக்குச் சட்டத்துக்கும் எதிரானவை, குற்றமானவை, விரோதமானவை என்று கருதப்பட்டவைகள் எல்லாம் சட்டபூர்வமாக்கப்பட்டன. அந்நியத் தொழில்கள் மற்றும் முதலீட்டுக்கான வரம்புகள் நிபந்தனைகள் எல்லாம் அகற்றப்பட்டன. அந்நிய முதலீடு வரம்பு, தொழில் நுட்பப் பகிர்வு, வெளியில் அனுப்பக் கூடிய இலாப விகிதம், அந்நியப் பொருள்



படிப்பகம்

www.padippakam.com

குவிப்பு ஆகியவற்றுக்கு இருந்த நிபந்தனைகள் நீக்கப்பட்டன. இப்போது ஏகாதிபத்தியங்களும் பன்னாட்டுத் தொழில் கழகங்களும் எதிர்ப்பின்றி நிபந்தனைகள் விதிக்கின்றன.

அவர்களின் தொழில், உற்பத்தி, சந்தை ஆகியவற்றை மேற்பார்வையிடும் அதிகாரம் இந்திய அரசுக்கும் அதிகாரிகளுக்கும் கிடையாது. யூனியன் கார்பைடு போன்ற காலாவதியாகிப் போன தொழில்நுட்பங்களையும் இயந்திரங்களையும், ஆலைகளையும் இறக்குமதி செய்து, நாட்டுக்கும் மக்களுக்கும் ஆபத்து விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். இவை அமெரிக்க அதிகாரிகளால் அப்பட்டமாகவே அறிவிக்கப்பட்டு இன்று நிறைவேற்றப்படுகின்றன. அத்தகைய நோக்கத்தோடுதான் உலகின் மிகப் பிரபலமான, கிரிமினல் குற்றச் செயல்களின் கூடாரமாகத் திகழும் டௌ கெமிக்கல்ஸ் என்ற இரசாயன-உயிரியல் ஆயுதத் தயாரிப்பு பன்னாட்டு தொழில்கழகம், யூனியன் கார்பைடு கம்பெனியை விலைக்கு வாங்கியிருக்கிறது. அதன் மிரட்டலுக்குப் பயந்து கொண்டு சிதம்பரம் மற்றும் கமல்நாத் ஆகிய மத்திய அமைச்சர்கள் அதற்குப் பரிந்துரை வழங்கி, போபால் நச்சுப் புகை படுகொலை குற்றங்களுக்கான பொறுப்பில் இருந்து அந்நிறுவனத்தை விடுவித்துள்ளனர்.



பன்னாட்டுச் சுரங்க முதலாளிகளின் இலாபத்திற்காக, உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ள சத்தீஸ்கர் மாநிலப் பழங்குடியின மக்கள்.

இந்திய மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்காவுடன் பல்வேறு இராணுவ, ஆயுத ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டதுடன், இறுதியாக அணுசக்தி ஒப்பந்தத்திலும் கையொப்பமிட்டு, அதனால் ஏற்படும் விபத்துக்களுக்கு எவ்வித நட்டஈடும் உரிமையும் கோரமாட்டோம் என்று சட்டமியற்றவும் எத்தணிக்கிறது, மன்மோகன் சிங் கும்பல். இவ்வாறு நாட்டை மறுகாலனி என்னும் சவப்பெட்டிக்குள் அடைத்து, அடுத்தடுத்து ஆணிகளை இந்திய அரசு அறைவதற்கு இன்னொரு காரணமும் அவசியமும் உள்ளது. இந்தியாவின் டாடா, அம்பானி, மிட்டல் போன்ற நாடு கடந்த தரகு அதிகார முதலாளிகளின் நலன்கள், அமெரிக்க ஏகாதிபத்திய மற்றும் அந்நியப் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் நலன்களோடு பின்னிப் பிணைந்துள்ளன.

அதனால்தான், போபால் நச்சுப்புகைப் படுகொலைக்கான பொறுப்பை டௌ கெமிக்கல்ஸ் மீது தள்ளவோ, ஆலையின் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் அதன் பொறுப்பை வலியுறுத்தவோ கூடாது என்று ரத்தன் டாடா இந்திய அரசுக்கு தானே முன்வந்து பரிந்துரை அனுப்பினார். 1980-களில் இருந்து தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கக் கொள்கையைப் பின்பற்றும் இந்திய அரசு, கொள்ளை இலாபம் தரும் அரசுத்துறை தொழில்களைத் தனியார்மயமாக்கிய போது நாட்டின் சொத்துக்களை அபகரித்துக் கொண்டு கொழுத்தவர்கள்தான், இந்தியாவின் இந்த நாடுகடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகள். இவர்கள் அமெரிக்க ஏகாதிபத்திய மற்றும் பன்னாட்டுத் தொழில் கழகங்களின் இளைய பங்காளிகளாகி, நாட்டை மறுகாலனியாக்கி ஆதாயம் காண்பதற்குத் துடியாய் துடிக்கிறார்கள். போபால் நச்சுப் புகைப் படுகொலை விவகாரத்தால் நாடே அதிர்ச்சியில் கொந்தளித்துப் போயுள்ள நிலையிலும், அமெரிக்க-இந்திய கூட்டுப் பங்கு கம்பெனிகளின் தலைமை அதிகாரிகளின் கூட்டுப் பேரவை கூட்டத்தை மன்மோகன் முன்னிலையில் அமெரிக்காவில் கூட்டி, ரத்தன் டாடா தலைமையில் கூட்டுக் கமிட்டியும் நிறுவி, நாட்டை மறுகாலனியாக்கும் போக்கை முழுமையாக்கும் பல ஒப்பந்தங்களைப் போட்டுள்ளார்கள்.

தொழிற்சங்க உரிமைகளை முற்றாகப் பறித்துத் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கி, இந்தியத் தொழிலையும் விவசாயிகளின் வாழ்வையும் நாசமாக்கி, விவசாயத்தையும் தனது கோரப்பிடியின் கீழ் கொண்டு வந்து விட்ட ஏகாதிபத்தியங்களும் இந்திய நாடுகடந்த தரகு அதிகார வர்க்க முதலாளிகளும் இறுதியாக நாட்டைச் சுற்றியுள்ள கடற்பரப்பையும் ஆக்கிரமித்து மீனவர்கள் வாழ்வாதாரங்களைப் பறிக்கும் மீன்பிடி தடைச்சட்டங்களைக் கொண்டு வருகின்றனர். காடுகள் மலைகளையும் ஆக்கிரமித்து, கனிம வளங்களைச் சூறையாடி, பழங்குடி மக்களின் வாழ்வாதாரங்களை பறிக்கும் காட்டுவேட்டை என்ற அரச பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சிகளின் கூட்டணிகள் அனைத்தும் இத்துரோகத்திற்கு துணை போய்விட்ட நிலையில் இன்னமும் எதிர்ப்பு காட்டிவரும் புரட்சிகர இயக்கங்களை ஒடுக்குவதற்காகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதுதான் காட்டுவேட்டை. தரகு அதிகாரவர்க்க முதலாளிகளின் நேரடி வேண்டுகோளின் கீழ் இந்த காட்டுவேட்டை தொடங்கப்பட்டு முழுப்போராக நடத்தப்பட்டு வருகிறது. உயிரைப் பணயம் வைத்து இப்பயங்கரவாதக் காட்டுவேட்டையிலிருந்து நாட்டையும் மக்களையும் காக்கவில்லையெனில், பல போபால் படுகொலைகளும் மான்சாண்டோ தாக்குதல்களினால் நிகழும் தற்கொலைகளும் தொடரும், காட்டுவேட்டையில் இலட்சக்கணக்கான பழங்குடி மக்கள் படுகொலை செய்யப்படுவதும் நடக்கும்.

● ஆர்.கே.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி.

செப்டம்பர் 13, 1996: இந்தியக் குற்றவாளிகள் மீது போடப்பட்டிருந்த கொலைக்குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்ற வழக்கை (Culpable homicide) குற்றமுறு கவனக்குறைவான (Criminal Negligence) வழக்காக மாற்றி உச்சநீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இதற்கு எதிராக சி.பி.ஐ. மேல்முறையீடு செய்ய வில்லை.

அக்டோபர் 16, 1997: தேசிய சுற்றுச்சூழல் ஆய்வுநிறுவனம் (NEERI) தனது ஆய்வறிக்கையில் நிலத்தடி நீர் மாசுபடவில்லை என்று சான்று அளித்தது.

நவம்பர் 1999: போபாலில் நீரும் நிலமும் 60 லட்சம் மடங்குக்கும் அதிகமாக நஞ்சாக்கப்பட்டுள்ளதை பசுமை அமைதி இயக்கத்தின் ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

பிப்ரவரி 5, 2001: டௌ கெமிக்கல்ஸ், யூனியன் கார்பைடைக் கையகப்படுத்தியது. போபால் படுகொலைக்கு டௌ கெமிக்கல்ஸ் பொறுப்பேற்காது என அறிவிப்பு.

ஜனவரி 2002: நீர், நிலம் மற்றும் தாய்ப்பாலில் காரீயம், பாதரசம் போன்ற அபாயகரமான வேதிப் பொருள்கள் கலந்துள்ளதை "சிரிஸ்டி" உண்மை கண்டறியும் குழுவின் ஆய்வுகள் உறுதி செய்தன.

மே 24, 2002: ஆண்டர்சன் மீதான பிடிவாரண்டை மாற்றக் கோரி நீதிமன்றத்திடம் சி.பி.ஐ. கோரிக்கை. நச்சுக் கழிவுகளை அகற்றக் கோரி மக்கள் போராட்டம்.

ஆகஸ்டு 28, 2002: சி.பி.ஐ-இன் கோரிக்கை நிராகரிப்பு. படுகொலை நடந்து 18 வருடங்களுக்குப் பிறகு ஆண்டர்சனுக்குக் கைது வாரண்ட். ஆண்டர்சனைத் தேட முடியவில்லை என சி.பி.ஐ. சாதிப்பு.

நவம்பர் 2002: யூனியன் கார்பைடு நிறுவனம் 1989-இல் ஆய்வு செய்த போதே நீர், நிலம் மோசமாக நஞ்சானதைக் கண்டறிந்திருப்பது அமெரிக்காவில் ஒரு வழக்கு விசாரணையில் அம்பலமானது.



2003: ஆண்டர்சனை இந்தியாவுக்குக் கொண்டுவர அமெரிக்காவிடம் கோருவதென இந்தியா முடிவு.

மார்ச் 18, 2003: கார்பைடை அமெரிக்காவில் விசாரித்து தண்டனைக் கொடுக்கக் கோரும் வழக்கு மீண்டும் ஒரு முறை அமெரிக்க நீதிமன்றத்தால் நிராகரிப்பு.

ஜூன் 2004: வாரன் ஆண்டர்சனை இந்தியாவிடம் ஒப்படைக்க அமெரிக்கா நிராகரிப்பு.




ஜூன் 30, 2004: பாதிக்கப்பட்ட பகுதிகளில் கழிவகற்றும் பொறுப்பை டௌ கெமிக்கல்ஸ் ஏற்றுக் கொள்ள அமெரிக்க நீதிமன்றம் கோரிக்கை. இந்திய அரசும் ஒப்புக் கொள்ளுதல்.

19 ஜூலை, 2004: 5,72,029 பேருக்கு நிவாரணம் தருவதற்கு உச்சநீதிமன்றம் வற்புறுத்தல். அதாவது, 20 வருடங்களுக்குப் பிறகு தலைக்கு 25,000 ரூபாய்.

25 அக்டோபர், 2004: நிவாரணத் தொகை வழங்கப்படாததை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் போராட்டம்.

26 அக்டோபர், 2004: ஏப்ரல் 1, 2005-க்குள் நிவாரணத் தொகை முழுவதையும் வழங்க உச்ச நீதிமன்றம் கெடு.

2005: மாசுப்பட்டுப் போன போபால் ஆலை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை டௌ கெமிக்கல்ஸ் தனது பொறுப்பில் சுத்தப்படுத்த வேண்டும் எனக்கோரி பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத் தொடருதல்.

ஏப்ரல் 17, 2006: பாதிக்கப்பட்டவர்களின் குழு தில்லி நோக்கி பாதயாத்திரை. அவர்கள் டௌ கெமிக்கல்ஸ் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியதை மன்மோகன் சிங் ஏற்க மறுப்பு.

2006: டௌ கெமிக்கல்ஸை போபால் ஆலையைச் சுத்தப்படுத்தும் பொறுப்பில் இருந்து தப்பிக்க வைக்கும் அரசின் சதித் திட்டத்தை எதிர்த்து பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டம்.

ஜனவரி 10, 2007: டௌ கெமிக்கல்சின் கூட்டாளி டாடா அலுவலக வாயிலில் ரத்தன் டாடாவை எதிர்த்துப் போராட்டம். டாடா உப்பு முதலான நுகர் பொருட்களைப் புறக்கணிக்கக் கோரி இரண்டு நாட்கள் பேரணி.

மார்ச் 28, 2008: பாதிக்கப்பட்டவர்களின் குழு மீண்டும் தில்லிக்குப் பாத யாத்திரை.

2008: பா.ஜ.க., டௌ கெமிக்கல்ஸிடம் நிதி வாங்கியது அம்பலமானது.

ஜூன் 7, 2010: வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் 7 நிர்வாகிகளுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்துத் தீர்ப்பு. உடனடியாக பிணையில் விடுவிப்பு.



படிப்பகம்

www.padippakam.com

**PUTHIYA JANANAYAGAM** (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No:**42648/85**
Regd. No: **TN/CC(S)Dn/190/09-11** Licenced to Post without pre-payment WPP No: **TN/PMG/CCR/WPP-562/09-11**



**22,146** - போபால் விஷவாயுக் கசிவால் பாதிக்கப்பட்டு இறந்து போனவர்களின் உண்மையான எண்ணிக்கை.

**5,295** - அரசு கூடுதல் நிவாரண உதவி அளிப்பதற்காக அங்கீகரித்துள்ள புள்ளிவிவரங்களின்படி இறந்து போனவர்களின் எண்ணிக்கை.

**5,50,095** - நிரந்தரமாக மற்றும் பகுதியளவில் முடமாகிப் போனவர்கள், புற்று நோய், சீறுநீரகக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை.

**36,913** - அரசு கூடுதல் நிவாரண உதவி அளிப்பதற்காக அங்கீகரித்துள்ள புள்ளிவிவரங்களின்படி முடமாகிப் போனோர், பிற வகைகளில் பாதிக்கப்பட்டோரின் ஒட்டுமொத்த எண்ணிக்கை.

**1,500** கோடி ரூபாய் - அரசு அறிவித்துள்ள கூடுதல் நிவாரணத் தொகை.

**1,000** கோடி ரூபாய் - யூனியன் கார்பைடு நிறுவனம் இருபது ஆண்டுகளுக்கு முன்பு பாதிக்கப்பட்டோருக்கு நட்ட ஈடாக அளித்த 47 கோடி அமெரிக்க டாலரை வங்கிகளில் சேமிப்பாக வைத்திருந்ததன் மூலம் இந்திய அரசுக்குக் கிடைத்த வட்டிப் பணம்; அதாவது, இலாபம்.

- அந்த **1,500** கோடி ரூபாய்க்குள் இந்த **1,000** கோடி ரூபாயும் அடங்குமென்றால், பாதிக்கப்பட்டோரில் வெறும் 15 சதவீதப் பேருக்கு மட்டுமே உதவி கிடைக்குமென்றால்,

# இதற்குப் பெயர் நிவாரணமா?